முரசொலி அண்ணா மலர்

436 பக்
240.

1954



பகலைப் புலவர்,
தமிழ்த் "தா.சு" நினைவு இலக்கியத் தொ
கலைவாணர் அரங்கம் - குடிசைத்தொழி
சிங்கி பாவு... 639 104.

விரைவில் வருகிறது!



மேகலாவின்

தாகவேட்சி

கதை, வசனம்:
மு.கருணாநிதி

டைரக்ஷன்:
காசிலிங்கம்

STUDIO STAR

Rights Controled By: BHAVANI MOVIES. MADRAS-17.

3.கு.ம
3692



என் தாய!

என்னைக்கே ஐம்பது கண்களும் கூடிவிட்டன.
அவளை வாழ்த்தி இரு வரம் பெறுவீர்கள், கண்ணீர்,
சான்றோர் - என் - தாயைத்தான் அவளுடனே
பெருமை கொண்டு நிற்கின்றனர். இந்த
இனிய நினைவு என்றும் வேண்டும் நேரமெல்லாம்.
நான், அவர் அம்மா என்பதிலே பெருமை கொள்கி
றேன். அவர் தந்த உலகம் என்னை விடுதி
லிருந்தது. அவர் காட்டிய அன்பு என்
விடுப்புண்களுக்கு மருந்தாயிருந்தது.
அவர் அனிவிந்த கனையாழியைவிட இந்த உலகில்
வேறு எதுவும் எனக்கு உயர்வில்லை. பெரிதில்லை.
அதைவும் நான். இந்த நோக்கில் இன்று
வெளியிடுகிறேன்.

பாவலர்,
தமிழ்க் "கா.சு" நினைவு இலக்கியக் குழு
சமவர்வடிவுஅகம் - குழித்தலை,
திருச்சி மாவட்டம். 639 104.

"தமிழக்காக்க தமிழன் கண்களில்
நீர் பெருக்கெடுக்கும் எப்படின்ற
கொச்சாவை, யாதிக்காவது பெறுதல்
வேண்டும்."

என்ற சொல் மொழிக்கொப்ப என் கல்லறை
மீது என் தமிழர் சிந்துகின்ற
கண்ணீர்த்துளிகளிடை நிரந்த மலர்மாரி
வேறென்ன இருக்க முடியும். இந்தத்
தணியாத ஆசையுடன் என் விண்ணுலின்
திக்கவிழாவின் போது வெளியிடுகின்றேன்.



15/9/59



தந்தை வாழ்த்தினார்!

"நமது அருமை அண்ணா அவர்களே இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று இலட்சக் கணக்கான இளைஞர்கள் உள்ளத்தில் ஆசை குடிகொண்டுள்ளது. என்னுடைய நெடுநாள் ஆசையும் அதுதான். அண்ணா அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கப்போகிறார். தளபதி அண்ணாத்துரையை அறிமுகப்படுத்துவது என்பது அர்த்தமற்ற வீண் வேலை. ஒருவேளை அவர் வேண்டுமானால் என்னை அறிமுகப்படுத்த வேண்டி இருந்தாலும் இருக்குமே தவிர நான் அவரை அறிமுகப் படுத்த வேண்டியது என்பது அர்த்தமற்ற சங்கதி. நமது இயக்கத்திலும், குறிப்பாக இப்போது நடைபெற்று வரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அவர் கொண்டிருக்கும் பங்கு எவ்வளவு சிறப்பானது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. திராவிட இளைஞர் உள்ளங்களை எல்லாம் அவர் எப்படிக் கைப்பற்றி விட்டார் என்பதையும் நான் சொல்லத் தேவையில்லை. இப்படிப்பட்ட நமது அண்ணா அவர்கள் இந்த மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிறார் என்றால் இதைப் பற்றி நான் என்ன சொல்ல இருக்கிறது?

"பெட்டிச் சாவி என்னிடம் இருப்பதால் சரக்கு எதுவும் காணமல் போய்விடாது. பத்திரமாகத்தான் இருக்கும். இருந்தாலும் ஒரே ஆளிடம் தொடர்ந்தாற்போல் ஆண்டுக் கணக்காக சாவி இருந்தால் யாருக்கும் சலிப்பு வரத்தானே செய்யும். மேலும் வயது வந்த மகனிடம் பெட்டிச்சாவியைக் கொடுக்க வேண்டியதுதானே நியாயம். எனக்கும் வயது 70 தாண்டிவிட்டது. இனியும் எத்தனை நாளைக்கு நானே பெட்டிச் சாவியை வைத்துக்கொண்டு அலைந்து திரிந்து பணியாற்றிக்கொண்டிருக்க முடியும்? ஆகவே பெட்டிச் சாவியை அண்ணாவிடம் கொடுக்கத் தீர்மானித்து விட்டேன்."

(1948 ஈரோடு திராவிட கழக மாகாண மாநாட்டில் பேசியது)



சபாநாயகர் வாழ்த்து!

டாக்டர்
யு. கிருஷ்ண ராவ்.

செயின்ட் ஜியார்ஜ் கோட்டை,
சென்னை-9.

4-9-1959.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் கிடைத்தது. அறிஞர் அண்ணு அவர்களின் 50ம் ஆண்டு நிறைவை ஒட்டித் தங்கள் முரசொலி ஏட்டின் பொன் விழா மலர் ஒன்றைத் தாங்கள் வெளியிட நிச்சயித்திருப்பது கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அறிஞர் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தம் நாட்டிற்கும் மக்களுக்கும் தம் சீரிய தொண்டை மேன்மேலும் செய்து வரவேண்டுமென்று வாழ்த்துகிறேன். மற்ற மலர்களைப் போலவே முரசொலியின் இம் மலரும் சிறப்புடன் விளங்கவும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தங்கள்,
யு. கிருஷ்ண ராவ்

திரு. மு. கருணாநிதி, எம்.எல்.ஏ.,
ஆசிரியர், "முரசொலி",
4/128, மவுண்ட் ரோடு,
சென்னை-6.

கனம் பக்தவத்சலம் வாழ்த்து!



M. BHAKTAVATSALAM
HOME MINISTER

அறிஞர் அண்ணு அவர்களுக்கு இப்பொழுது ஐம்பது வயது ஆகிறது. அவரை நேரில் காணுதவர்கள் இதைக் கேட்டு ஆச்சரியப்படுவார்கள். அவருடைய புகழ் இந்த வயதுக்குமேற்பட்டது. தலைமைப் பதவி பெறுவது சுலபம். ஆனல் அதற்குரிய வகையில் பொறுப்பை வகிப்பதும் பதவியை பாதுகாத்துக் கொள்ளுவதும் தான் விசேஷம். அண்ணு அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் ஏராளமான இளைஞர்கள். இவர்கள் தம் தலைவருக்குக் காட்டும் மரியாதை மிகவும் குறிப்பிடத்தக்கது. பின்பற்றுகிறவர்கள் ஆற்றலும் அனுபவமும் அந்தஸ்தும் உள்ளவர்கள் என்றலும் எல்லோரும் ஒரு முகமாக அண்ணுவின் தலைமையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அண்ணு சொல்லுவது பிடிக்கவில்லையே என்றலும், துடிதுடிப்புள்ள இளைஞர்களும் மறு பேச்சு பேசமாட்டார்கள். அண்ணு வகிக்கும் இந்த தலைமை மிகச் சிறந்ததாகும். அவர் பேச்சைக் கேட்க வந்திருக்கும் கூட்டத்தின் பக்குவத்தையும் பொறுமையையும் நான் கண்டிருக்கிறேன். அவர் கூட்டத்துக்கு வர எவ்வளவு தாமதமானலும் கூட்டம் அப்படியே அமைதியாக மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருக்கும். கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் ஒரு மனத்துடன் தம் தலைவரை பேரறிஞராகவும் அண்ணுவாகவும் கொண்டிருக்கிறார்கள். இது தலைவரின் சிறந்த ஆற்றலைத் தான் வெளிப்படுத்துகிறது. அறிஞர் அண்ணு அவர்களுக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கலைஞர் திரு கருணுநிதி நடத்துகிற "முரசொலி"யின் பொன் விழா மலருக்கு என் நல் வாழ்த்துக்கள்.

எம். பக்தவத்சலம்

(எம். பக்தவத்சலம்)

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE AND EDUCATION

FORT ST. GEORGE
MADRAS-9

12--9--59



நிதி அமைச்சர் வாழ்த்துகிறார்!

அன்புடையீர்,

நண்பர் அண்ணாதுரை அவர்களின் 50 ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி "முரசொலி" பொன்விழா மலர் ஒன்று வெளியிடப்போவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நண்பர் அண்ணாதுரை அவர்கள் இன்னும் நீண்டகாலம் நல்லுடலோடு வாழ்ந்து நாட்டிற்குப் பயனுள்ள சிறந்த சேவை செய்யுமாறு இறைவன் அருள் புரிவானாக.

அன்புடன்,
சி. சுப்பிரமணியம்



பல்லாண்டு வாழ்க

அன்புள்ள கருணாநிதி அவர்களுக்கு,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 50 ஆண்டு நிறைவை ஒட்டி ஒரு மலரை வெளியிடப் போவது கேட்டு மகிழ்கிறேன.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன. அவரும் அவரது கட்சியும் ஓங்கி வளர்வதாக!

தங்களன்புள்ள,
பி. டி. இராசன்



சி.ஆர் வாழ்த்துகிறார்

C. RAJAGOPALACHARI

60, BAZLULLAH ROAD
TYAGARAYANAGAR
MADRAS 17

2.9.54

[illegible]

அண்ணனும், அண்ணியும்.





மந்திர சக்தியைக் கண்டேன்!

அண்ணு என்ற சாதாரண வார்த்தைக்கு மந்திர சக்தி, கவர்ச்சி, தனி அழகு, இன்பம், அன்பு, ஓளுக்கம்.....எல்லாம் ஏற்பட்டுவிட்டன. எப்படியென்ரு கேட்கிறீர்கள்? திராவிடத் தளபதி அண்ணுத்துரை என்ற பெயரோடு 'அண்ணு' சேர்ந்து மேலே சொன்ன மோகன சக்தியை உண்டுபண்ணி விட்டது.

வயதில் குறைந்தவர்களும், மிகுந்தவர்களும் அண்ணுவென்றே நமது அண்ணுவை அழைக்கிறுர்கள். ஏன்? திராவிடர் மக்களிடையே 'அண்ணு' — என்ருல் அண்ணுத்துரை அவர்கள்தான். எல்லோருக்கும் அண்ணுவாகும் தகுதி அவருக்கு உண்டு.

உருவத்தில் தமிழன்; உயர் குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில் தமிழன்; அடக்கத்தில் தமிழன்; ஆண்மையில் தமிழன் நமது அண்ணு! பரந்த நெற்றி, முறுக்கான மெல்லிய மீசை, விசாலமான முகம், கட்டுமஸ்தான உடல், பந்தயக் குதிரை போன்ற விறுவிறுப்பான நடை, பணிவான நடவடிக்கை, வீர உள்ளமெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவர் அறிஞர் அண்ணுத்துரை.

உண்மையை ஒரு நாளும் ஒளிக்க மாட்டார். உழைப்பாளிகளிடம் அபார அன்பு கொண்டவர். அரசியல் விவகாரங்களின் ஆழத்தை நன்ருகக் கண்டறிந்தவர். அரசியல் கொள்கைகளில் அபிப்பிராய பேதங்கள் கொண்டவரென்ருலும்; அவைகளை அவ்வப்போது எடுத்துச் சொல்லத் தயங்கமாட்டார். நாட்டு மக்கள் முன்னேற்றமே அண்ணுவின் கொள்கையே தவிர சுய நலமோ பதவி மோகமோ மருந்துக்குக்கூட அண்ணுவிடம் கிடையாது.

ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற அண்ணுத்துரை அவர்கள் பிறநாட்டு வரலாறுகளையும், அரசியல் நிலைமைகளையும் அழுத்தம் திருத்தமாகப் படித்தறிந்து அந்த உண்மைகளை பத்திரிகை வாயிலாகவும், மேடைப் பேச்சு மூலமாகவும் தமிழ் நாட்டுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்கிறுர்.

தோழர் அண்ணுத்துரையை நாம் அடைந்தது தனி பாக்கியம்தான். இன்னும் பலகாலம் நமது அண்ணு திடகாத்திரத்தோடு நம்மிடையே வாழ்ந்து தமிழர் தொண்டும், தமிழ்தொண்டும் புரியவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

கலைவாணர். என். எஸ். கிருஷ்ணன்

இளம் தமிழர் களபதி!

திருவாளர். சி. என். அண்ணாதுரை அவர்களை அறியாத தமிழர் இரார். தென்னாட்டில் அவர்களைத் தெரியாதார் யாரும் இரார். இவர் ஆங்கிலத்தில் பண்டிதர். பட்டத்தால் மட்டும் பண்டிதராய்த் திரிபவர் பலர் உளர். எனில், எழுத்திலும், பேச்சிலும், பழுத்த மொழி ஆட்சியிலும் திறனுடையார் மிகச் சிலரே. அத்தகைய நல்ல நடை வல்லார்தம் வரிசையிலே முன் அணியில் இடம் உடையார் இவர். தமிழினிலோ, அமிழ்த்துமிழும் சொல் வளமும், உணர்வெழுப்பும், தொடர்ச்செறிவும், குரவரிடம் கல்லாமல் தான் பயின்று திறம் பெற்றச் சொல்லின் செல்வர். தமிழ் இளைஞர் "புத்துலகு" விரைந்து தொழில் கேட்க நிரந்தினிது சொல்லுதல் வல்ல நாவலர். கிண்டலொடு நகைச்சுவை நடையுடையார்.

இன்னும் இவர் முதிராத இளமையோடு மூதறிவு மிக்குடையார்; அதிமதுரச் சொல்லுடையார். தளராத உள உறனும், வளரறிவும், வளமலியும் உரைத் திறமும் தனதுடைமையாகக் கொண்டோர். இளம் தமிழர் களபதி. சுயமரியாதை இயக்கத் துணைத் தலைவர். தமிழ் உயர்வும், தமிழர் தமது உரிமையையும் பெற உளூற்றும் (உழைக்கும்) மறுமலர்ச்சி இயக்கத்தின தலைவராவர். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர், புகழ் புலவர். இவர் பணியின் பயனாகத் தமிழ் ஓங்க, தமிழர் நிலை உயர்வதாக.

நாவலர்.

ச. சோமசுந்தர பாரதியார்

அண்ணா ஒரு குற்றவாளி!

அன்பர் அண்ணாதுரை தன் குதிகாலை உயர்த்தி உயர்த்திப் பேசுவது வழக்கம். பேச்சில் நகைச்சுவையும், வீரச்சுவையும் மாறி மாறிக் காட்சியளிக்கும். அடுக்குச் சொற்கள் அதிகமாக வந்து விழும். குறுகிய உருவமும், குறும்புப் பார்வையும், புருவ நெரிப்பும், இனிய குரலும், எடுப்பான ஓசையும், வெற்றிலை அடக்கிய வாயும், வீராவேசச் சைகையும் பற்றில்லாதவரையும் பற்றுக் கொள்ள செய்யும் பான்மையுடையனவாகும்.

திரு. அண்ணாதுரை மீதுள்ள சில குற்றச்சாட்டுகள் கீழே உளளன; அவை என்ன?

● "பாரதிதாசனுக்கு என்ன வந்தது? இரண்டு பாட்டுப் பாடிவிட்டால் ஒரு புலவர்! அவருக்கெல்லாம் பணமுடிப்பு! இதற்கெல்லாம் அண்ணாதுரை முயற்சி! எதுவும் கேட்டுச் செய்ய வேண்டாமோ?"

—தலைவர்.

● "சுவீகாரப் பிள்ளையாக நான் ஒருவன் இருக்கும்போது இவனுக்கு இங்கு என்ன ஆதிக்கம்?"

—தகப்பன் சாமி

● 'ஓட்டிக்கொண்டிருந்தால் எட்டியிருந்து தட்டி எழுதுவேன். எட்டிப்போயிருந்தால் ஓட்டிக்கொண்டு திட்டுவேன்."

—மலைச்சாமி

"கேட்டீர்களா செய்தியை? இப்போது அண்ணாதுரை இயக்கத்தைக் கவனிப்பதில்லை; நாடகம் எழுதி பணம் சம்பாதித்து முதலாளி ஆகிவிட்டார்!"

—கையாலாகாதவர்.

● "இந்தியை எதிர்த்து மறியல் செய்தவர்களுக்கு உடந்தையாயிருந்த குற்றவாளி அண்ணாதுரைக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கிறேன்."

—நீதிபதி.

— மேலே கூறப்பட்ட குற்றச்சாட்டுகளால் அன்பர் அண்ணாதுரை தாக்கப்பட்டவர் என்றாலும் அவர் குறறவாளியா? அல்லவா? — என்பதை விளக்கிக் கூறியதிலை. கோர்ட்டிலேயே கூறவில்லையென்றால் நாட்டிலும் ஏட்டிலும் ஏன் கூறுகிறார்கள்? ஆகவே, அவர் குறறவாளியா? அல்லவா? —என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ள வேண்டியதுதான்.

அன்பர் அண்ணாதுரை அவர்கள் சிறந்த அறிஞர்! நல்ல எழுத்தாளி! உயர்ந்த பேச்சாளி! முன்னேந்த உழைப்பாளி! சீர்திருத்த வாதி! பத்திரிகை ஆசிரியர்! நாடகக் கதாசிரியர்! நடிகர்! — எனக் கூறலாம்.

கி. ஆ. பெ. விசுவநாதம்.



நஞ்சொழிக்கும் மருத்துவர்!

அண்ணாதுரை கலையறிந்தவர். தமிழ் நாட்டின் பழைய நிலை யறிந்தவர். "மன்னும் இமயமலை எங்கள் மலைய" என்று மார்தட்டிக் கூறிய வீரர் வாழ்ந்த தமிழகத்தில் இன்று கோழைகளாய், மோழைகளாய் நாம் குன்றலாகாது; காளைகளாய் களிறுகளாய் வாழ்தல் வேண்டும் என்று ஆசைப்படுகிறவர் அவர். தமிழ்க் குலத்தை அரிக்கும் வேற்புழுக்களை அழித்தாலன்றிந் தமிழகம் தழைக்குமாறில்லை; ஊழ்வினையே பேசி ஆள்வினையற்றிருக்குமளவும் நாம உய்யுமாறில்லை என்று உறுதியாகக் கருதுகின்றவர் அவர்.

தமிழ் நாட்டைப் பிடித்த பீடைகள் ஒழிய வேண்டுமாயின், "நோய் நாடி முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்று வள்ளுவர் வகுத்த மருத்துவ முறையைத் தயங்காது தமிழர் கையாளுதல் வேண்டும் என்பது அவர் கொள்கை. புண்ணுற்ற மேனியைப் புறம் பொதிந்து மூடுதலால் என்ன பயன்?—என்பது அவர் கோவி.

பதிநலம் வாய்ந்த மருத்துவர் அழகிய தசையைப் பார்த்து அறுத்தால் தமிழ்க்குலம் தலையெடுக்கும் எனபதில் என்ன தடை? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கள்வரது நச்சுப் பகைமையை நசுக்காவிட்டால் நாடு நலம் பெறுவதெப்படி? தமிழர் வாழ வேண்டும், தமிழர் பண்பாடு சிறக்க வேண்டும் என்ற அரும் பெருங் குறிக்கோளுடைய 'அண்ணு' அவர்கள் 'நீடுழி வாழ்க' என வாழ்த்துகின்றேன்.

தமிழ்ப்பேராசிரியர்.

ரா. பி. சேதுப்பிள்ளை

கமிழகக்கு பெர்னாட் ஷா!

தற்காலத்து நாடகக் கலையைப்பற்றிப் பேசும் போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னாட்ஷாவையும், இப்சனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். "நாடகம், கீடகம் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னாட்ஷாவுக்கும் ஒரு இப்சனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியதுதான்!" என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் திருடவும் கிருடவும் போக வேண்டாம். தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ் பட்டுப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்திற்கு முன்பு திருச்சிப்பள்ளியில் "ஓர் இரவு" என்னும் நாடகத்தைப் பார்த்தேன். பார்த்ததின் பயனாக, "இதோ ஒரு பெர்னாட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார்! இப்சனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தியும்கூட இருக்கிறார்" என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை நாடகமாக அமைத்திருந்த பாணியும், கட்டுக்கோப்பும், காட்சிகளின் அமைப்பும் சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப பேசும்படி சொன்னபோது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. "நன்றாயிருக்கிறது; மிக நன்றாயிருக்கிறது; அதிக நன்றாயிருக்கிறது!" என்று தான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருந்தது.

திராவிடக்கட்சி—சுயமரியாதைக்கட்சி— ஜஸ்டிஸ் கட்சிச் சொற்பொழிவாளர்களிலே தற்சமயம் தலை சிறந்து விளங்குகிறவர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள். அவர் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா சொற்பொழிவு? தட்டுத்தடுமாறி சொற்களுக்குத் திண்டாடி நிற்பதையெல்லாம் சொற்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.

ஆனால், பேச்சும் பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய்விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஐனங்களில் நூற்றுக்கு ஐம்பதுபேர் ஒரு காதிலை வாங்கி, இன்னொரு காதிலை விட்டு விடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும் எழுத்து அதிக வலிமையுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை சீர்திருத்த விரும்புவோன் கையாள வேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் திரு. அண்ணாதுரையிடம் அமைந்திருக்கிறது.

'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி





தமிழகத்தின் தொண்டர்!

அன்புடையீர்,

அறிஞர் திரு. அண்ணாத்துரை அவர்கள் தமிழ்மொழி செழித்து வளரவேண்டும் என்பதிலும், தமிழர் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்பதிலும் ஆர்வம் மிக்கவர். அவர்தம் உள்ளம் கலையுள்ளம். அவர் எழுதும் எழுத்துக்களிலும், ஆற்றும் சொற்பொழிவுகளிலும் கலையுணர்வு மிக்கிருப்பதைக் காணலாம். அவர்தம் சொற்பொழிவு கேட்கப் பல்லாயிரக் கணக்கான தமிழர் கூடி உணர்ச்சி வயப்படுவதற்குக் காரணம், அத்தகைய கலையுணர்வுடன் அமைந்த தெளிந்த நுண்ணறிவே ஆகும். அவர்தம் எழுத்தும் பேச்சும் தொண்டும் மென்மேலும் தமிழகத்துக்குப் பயன்படுவனவாக.

இங்ஙனம்,

மு. வரதராசன்,

அருங் குணத் தலைவர்!

அண்ணு துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணன் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்—பண்ணுவன்
சிற்பனெழுத் தோவியத்தில் செல்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் ருடு.

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார்.

ஊருக்கு உழைக்கும் உத்தமர்!

அன்புடையீர்,

அறிஞர் அண்ணு அவர்களின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவினை யொட்டி 'முரசொலி' இதழில் பொன்விழா மலர் வெளியிட இருப்பது மிக மகிழ்ச்சிக்குரிய செய்தி. நானும் அண்ணு அவர்களும் கல்லூரியில் இன்டர்மிடியட் வகுப்பில் ஒன்றுகப் படித்தது மட்டுமல்லாமல், அதன் பிறகு ஒரு சிறிது காலம் நானும், அண்ணு அவர்களும், திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன், காலஞ்சென்ற திரு. பாசுதேவ் முதலியோருடன் தொழிலாளர் இயக்கங்களில் தொண்டு செய்யும் வாய்ப்புப் பெற்றோம்.

அண்ணு அவர்கள் தன் கல்லூரி மாணவப் பருவத்திலேயே தேசபக்தி, தன்னலத் தியாகம், அஞ்சா நெஞ்சம், தமிழ்ப் பற்று, சொல் வன்மை, பெருந்தன்மை, நாட்டு மக்களின் நல்வாழ்வில் அளவற்ற ஈடுபாடு முதலிய பண்புகளின் திருவுருவமாக விளங்கினர். ஆகவே தான் என்னைப் போல ஏதோ ஊதியத்திற்காக உழைக்கும் ஒருவனாக ஆகாமல், ஊருக்கு உழைக்கும் உத்தமராகத் திகழ்கின்றார்.

மேலும் தமிழ் மக்கள் விழிப் புணர்ச்சி பெறவும், தமிழரிடையே மறுமலர்ச்சியை உண்டாக்கி, உணர்ச்சி ஓங்குவதற்கு உகந்த வழியில் அவருடைய அறிவுரைகளும் பேருரைகளும் மக்கள் உள்ளத்தைத்தீண்டியதோடுநில்லாமல், முக்கியமாக மாணவர்களிடையே ஒரு கிளர்ச்சி ததும்பிய ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கியுள்ளன. அவைகள் நாட்டிலுள்ள எல்லாவித மான பேதங்களையும் களைந்து, மக்களும் சமுதாயமும் உயர்ந்து, எதிர்காலம் நலம் பெற்று ஏற்றமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

நா. சங்கரன்,
ஆணையாளர்,
சென்னை நகராண்மைக் கழகம்,

புத்துணர்ச்சி கண்டார்!

சுயமரியாதை மாணவர்கள் இளைஞர்களிடையில் அண்ணாதுரைக்கு, செல்வாக்கு அதிகரித்து வந்திருக்கிறது. அண்ணாதுரையின் சொல்வன்மையும், எழுத்துவன்மையும், இளைய உள்ளங்களுக்கு ருசித்ததே இதற்குக் காரணம்,

உலக அறிவோடும், அரசியல் உணர்ச்சியோடும், இனவெழுச்சியும், கலை ஆர்வமும், மொழிப் பற்றும், தமிழகத்தில் குறிப்பிடத்தக்க வண்ணம் கிளர்ந்தெழுந்தன. இந்தப் புதிய எழுச்சியும், உணர்ச்சியும் ஜஸ்டிஸ்—சுயமரியாதை வாலிபர்களையும் தீண்டாமலில்லை.

அண்ணாதுரையின் பேச்சிலும், எழுத்திலும் புத்துணர்ச்சிக்கு ஒரு விதக் கவர்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டது. அண்ணாதுரையை மாணவர்கள் விரும்பினர்; வாலிபர்கள் பலர் சூழ்ந்தனர்.

அண்ணாதுரை, "சமூக சீர்திருத்தத்திற்குப் புதிய மெருகு கொடுத்து, புதிய உணர்ச்சிகளைத் தழுவிப் போகாவிட்டால் கட்சிக்கு வளர்ச்சியில்லை" எனக் கண்டார். அதனால் புதிய அமைப்புக்கு வேண்டிய பூர்வாங்க வேலைகளைப் பூர்த்திசெய்தார்.

— ப ஜீவானந்தம்

மைசூர் மன்னர் முதல்வரின் வாழ்த்து!

அன்புள்ள நண்பருக்கு,

நான் கட்டுரை எழுதும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. அன்போடு என்னை மன்னிக்கவும்.

ஸ்ரீ அண்ணாதுரைக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[அனுமந்தய்யா] K. Hanumanthaiya

தெவிட்டாத கனி குலுங்கும் மரம்!

"தங்கத்திலே அரிசி செய்து, சமைத்து கோமேதகக் கூட்டும், வைரவறுவலும், முத்துப் பச்சடியும், மோர்க குழம்பிலே கெம்பும் கலந்தா சாப்பிடுகிறீர்கள்?"

"உங்களைப் போன்ற சிலர் தர்மப் பிரபுவாக வாழ்வதற்கு, நாங்களெல்லாம் தரித்திரர்களாக இருக்க வேண்டுமா?"

"சக்திக் கேற்ப உழைப்பு, தேவைக்கேற்ற வசதி" என்பன போன்ற வசனங்கள் எவ்வாறு முதலாளித்துவ முறையை ஏளனமாக இடித்துரைத்து. வருங்கால உலகுக்கு உறுதியான சமதர்மக் கொள்கையை வகுக்க வழி காட்டுகின்றன என்பதை விளக்கும். இவற்றை எழுதியது யார்?

நாடகங்கள் எழுதுவதில் சிறந்த மேல்நாட்டு ஆசிரியர்களை ஒத்தவர், அரசியலில திராவிட மக்களின ஒரே தளபதி, நமது அறிஞர் அண்ணாதான்! அவரின் அறிவுத் திறனைப் பற்றிப் பல அறிஞர்களும் போற்றுகிறார்கள்.

ஷேக்ஸ்பியரை, பர்னட்ஷாவை. வேட்ஸ்வொர்த்தை, இங்கர்சாலை, ரூசோவைப் போன்ற பல அறிஞர்களை மேல்நாடு, ஒவ்வொரு துறைக்கும் ஒரு அறிஞரைப் பெற்றிருக்கிறது. ஆனால், நமது தமிழகம். அந்த அறிஞர்கள் அத்தனை பேரையும் உள்ளடக்கிய, "ஒரே அறிஞர் அண்ணா'வைப் பெற்றுவிட்டது!

வாழ்க அறிஞர் அண்ணா!

நடிப்பிசைப் புலவர்.

—கே. ஆர். ராமசாமி.





1940-ல் ஜனுப் ஜின்னாவை பம்பாயில் கண்டு பேசச் சென்ற குழுவினர். இப் போதைய திருவாசகமணி, கே. எம். பாலசுப்பிரமணியம், டி. ஏ. வி. நாதன், பெரியார் ராமசாமி, 'சண்டே அப்சர்வர்' பாலசுப்பிரமணியம், அறிஞர் அண்ணா, டி. என். இராமன் முதலியோர் இப்படத்திலுள்ளனர்.



அறிஞர் அண்ணாவின் பொதுவாழ்வுப் பயணத்தின் துவக்க காலத்தில் எடுக்கப் பட்ட படங்களில் இதுவும் ஒன்று. இடது கோடியில் அண்ணா உட்கார்ந்திருக்கிறார். இதில் சிந்தனைச்சிற்பி சி. பி. சிற்றரசு இருப்பதைக் கண்டு பிடியுங்கள்.



அண்ணாவும் பரிமளமும்!

அரசியல் உலகில் மட்டுமல்ல; கலையுலகிலும் அண்ணா துவக்கி வைத்திருக்கும் பணிகள் ஏராளம்!
(படம்: மேகலா பிக்சர்ஸ் குறவஞ்சியைத் துவக்கி வைக்கிறார்.)





சீலரைப் போற்றுவோம்!

பேரன்புடையீர்,

அறிஞர் அண்ணு அவர்களின் 50—ம் ஆண்டு நிறைவு பொன் விழா மலரை 'மூரசொலி' வெளியிடுவது குறித்துப் பெருமிதம் கொள்கி றேன்.

அறிஞர் அண்ணு அவர்கள தமிழகத்திற்கு ஆற்றிய அருந்தொண்டு களை வெள்ளிடை மலை யாம்!

அத்தகைய சீலரை—கர்ம வீரரை கௌரவிப் பது—மூரசொலி செய்த பாக்யம் மட்டுமன்றி, தமிழக மக்களுக்கே ஒரு தனிப்பெரும் அதிர்ஷ்ட மாகும். இந்நன்னாளில் அறிஞர் அண்ணு அவர் களுக்கு, தங்கள் பத்தி ரிக்கையின் வாயிலாக என் அன்பைத் தெரிவித் துக் கொள்கிறேன்.

அன்பு,
ஜெமினி
கணேஷ்

2 ஏ, நுங்கம்பாக்கம்
நெடுஞ்சாலை, சென்னை-6

அண்ணு படைத்த பாத்திரங்கள்!

1

நல்லதம்பி ஒரு இலட்சியவாதி! கடுகடுத்த முகமும் கறுஞ்சிவப்பான கண்ணும், சீறி விழும் பழக்கமும், சிரிக்கத்தெரியாத பண்பும் கொண்ட இலட்சியவாதி அல்ல; சிரிப்பின் மூலம் சிந்தனையைத் தூண்டி, இலட்சி யத்தைப் பரப்பும் ஒரு நகைச்சுவையாளன்! எங்கோ கிராமத்தில் இருந்த அவனைத்தேடி ஒரு ஜமீன் பட்டம் வருகிறது, இவனே திகைப்போடு அதை ஏற்றுக்கொள் கிறான். ஜமீன் பட்டத்துக்குரியவனை மணக்க ஒரு பெண் ணும் அந்த அரண்மனையிலே இருந்தாள்.

நல்லதம்பியோ இவைகளைக் கவனியாது, ஜமீனுக் குரிய நிலபுலன்களை வாரியிறைக்கிறான் ஏழை மக்களுக்கு. மக்கள் மனம் குளிர்ச்சியடைகிறது! 'நாட்டுக்கு ஒரு நல்லதம்பி இருந்திட்டாலே போதும், நாடு நகரம் செழிக்கும் உழவன் மனதுபோலே!' — என்று மகிழ்ச்சிப் பண் பாடுகின்ற னர்,



பொருளாதாரத் துறையில் மட்டு மல்ல; சமுதாயத் துறையிலுள்ள பழக்கங்களை,பணப் பித்தைப் போக்கு கிறான், நல்லதம்பி. ஒரே சேலையை தாயும் மகளும் கட் டிக்கொள்ளும் கொடுமையையும், ஜமீனில் நூற்றுக் கணக்கான புடவைகள் 'நிற்கும் பெட்டி'களில் தூங்கு வதையும் கண்ட நல்லதம்பி அந்தப் புடவைகளை எடுத்து, புடவையில்லாதவர்களுக்குத் தருகிறான்!

— இப்படி வேடிக்கை நிகழ்ச்சிகள் மூலமாகவே வேக மாக வளர்ந்துவரும் பொதுவுடைமைத் தத்துவத்தை — புதுமைக் கருத்துகளை விளக்கியிருக்கிறார் அண்ணு, 'நல்லதம்பி' எனும் படத்தின் மூலம்! கலைவாணர் சொல் வண்ணமும், அண்ணுவின் எழுத்து வண்ணமும் சேர்ந்த அந்தப் பாத்திரம் நினைத்துப் பார்க்கப்பார்க்க நகை யூட்டுவது; நல்லின்பம் ஊட்டுவது! நல்ல கருத்துக்களை நகைச்சுவை கொண்டு கதாநாயகன் பாத்திரம் தாங்கு வோர் வாயிலாகச் சொல்லமுடியும் — என்பதை முதன்முதலில் சொன்னவர் அண்ணுதான்!



சோலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது.

[சோர்வு அற்றவனையும், அச்சங் கொள்ளாதவனையும், சொல்லாற்றலில் வல்லவனையும் விளங்கும் ஒருவனை, மாறுபாட்டின்கண் எவராலும் வெல்ல முடியாது.]

—என்ற குறள் இலக்கணத்திற்கு முழுக்க முழுக்கப் பொருந்திய இலக்கியமாய்த் திகழக்கூடிய பெருந்தகையாளர் தமிழகத்தில் — திராவிடத்தில் உண்டென்றால், அவர்தான் அறிஞர் அண்ணா என்று எந்த நல்லறிவு படைத்த அறிஞரும் கூறிடுவர்.

நமக்கெல்லாம், அன்பு பொழிந்திடும் அண்ணாராய், அறிவுரை பகர்ந்திடும் ஆசிரியராய், நல்வழிகாட்டிடும் வழிகாட்டியாய், ஊக்கமும் உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டிடும் விடுதலை வீரராய், நன்மைகள் பலவும் நல்கிடும் நண்பராய்த் திகழும் அவரை, நாமெல்லாம் மனங்குழைய, வாய்குழையக் கொஞ்சு மொழியால் **'அண்ணா'** என்று உள்ளன்போடும். உவகைப் பெருக்கோடும் அழைப்பதில் பெருமிதம் கொண்டிருக்கிறோம்.

அண்ணாவின் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்று எண்ணும்போது பெருமை கொள்கிறோம்; அண்ணாவோடு சேர்ந்து பணியாற்றுகிறோம் என்று நினைக்கும்போது பூரிப்படைகிறோம்; அண்ணாவால் அரவணைக்கப் படுகிறோம் என்று எண்ணும்போது பெருமிதம் பெறுகிறோம்.

அண்ணா அவர்கள் கேட்டார்ப் பிணிக்கும் தன்மையிலும், கேளாரும் வேட்ப மொழியும் பாங்கிலும், இனிமையாகவும், அழகாகவும், எளிமையாகவும், ஏற்றமாகவும், நகைச்சுவையோடும், நல்லோசையோடும் சொற்பொழியாற்றுவதில் ஈடு இணையற்று விளங்குவதால், அவரைச் சிறந்த சொற்பொழிவாளர் என்கிறார்கள்.

ஆற்றொழுக்கு நடையில், சொற்செறிவும் பொருட்செறிவும் பொருந்த, அழகான, கவர்ச்சிகரமான கட்டுரைகள் வரையும் ஆற்றல் அண்ணா அவர்களிடம் மிகச் சிறந்து விளங்குவதால், அவரைச் சிறந்த எழுத்தாளர் என்கிறார்கள்.

இரா. நெடுஞ்செழியன்

சிறு கதைகளையும், தொடர் கதைகளையும், பெருங்கதைகளையும் சொல்லும்—பொருளும்—கற்பனையும் சிறந்து காணப்பட சீரிய முறையில் எழுதும் ஆற்றலைப் பெற்றிருப்பதால் அவரைச் சிறந்த **கதை ஆசிரியர்** என்கிறார்கள்.

மாற்றாரும் புகழத்தக்க வகையில் 'வேலைக்காரி', 'ஓர் இரவு', 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதிதேவன் மயக்கம்', 'காதல் ஜோதி' போன்ற நாடகங்களை மிகச் சிறப்பான முறையில் இயற்றித் தந்திருப்பதால் அவரைச் **சிறந்த நாடக ஆசிரியர்** என்கிறார்கள்.

நாடகம் எழுதத் தெரிந்த வர்களுக்கெல்லாம் திரைப் படக் கதை—வசனமும் எழுதத் தெரியும் என்று கொள்வதற்கில்லை. ஆனால் அண்ணா அவர்கள் 'வேலைக்காரி', ஓர் இரவு' 'நல்லதம்பி', 'சொர்க்க வாசல்' போன்ற திரைப்படக் கதை—வசனங்களை மிகத் திறம்பட எழுதிப்பெயரும் புகழும் பெற்றிருக்கும் காரணத்தால், அவரைச் சிறந்த **திரைப்படக்கதை—வசன ஆசிரியர்** என்கிறார்கள்.

நாடகம் எழுதத் தெரிந்த எல்லோருக்குமே நடிக்கத் தெரியும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அண்ணா அவர்கள் 'சந்திரோதயம்' நாடகத்தில் 'ஆண்டி', 'அப்துல்லா', 'தொழிலாளி', 'மடாதிபதி', 'துரைராஜ்', மயேந்திரர்', ஆகிய வேடங்களையும், 'சந்திரமோகன்' நாடகத்தில் 'காகபட்டர்' வேடத்தையும், 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில் 'இராவணன்' வேடத்தையும் தாங்கி ஈடு இணையற்று நடித்ததன் காரணமாக அவரைச் சிறந்த நடிகர் என்கிறார்கள்.

நடிகர்கள் எல்லோர்க்குமே நடிப்பினைப் பிறர்க்குச் சொல்லிக்கொடுக்கும் திறன் உண்டு என்று சொல்வதற்கில்லை. ஆனால் 'சந்திரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்களில் நடித்த அத்துணைப்பேர்க்கும் அண்ணா அவர்கள்தான் நடிப்பினைச் சொல்லிக்கொடுக்கும் இயக்குநராக இருந்தார்கள். ஆகையினால்தான் அவரைச் சிறந்த நாடக இயக்குநர் என்கிறார்கள்.

ஓவியம்—சிற்பம்—நாடகம்—நடனம்—திரைப்படம்—இசை—கண்காட்சி—பொருட்காட்சி போன்றவற்றில் மிகுந்த ஆர்வம் காட்டி அவற்றை வளர்ப்பதில் அரும்பாடுபட்டு வருவதன் காரணமாக அவரைச் சிறந்த கலைஞர் என்கிறார்கள்.

நண்பர்கள் பலரையும் சூழ வைத்துக்கொண்டு மணிக் கணக்கில், பலநாட்கணக்கில், இரவு—பகல் என்று பாராமல் பலநாட்களில் பல்வேறு பொருள்கள் பற்றியும், பயனுள்ள வகையில் உரையாடும் திறன் அண்ணா அவர்களிடம் அமைந்திருப்பதைப் போல் வேறு யாரிடமும் அவ்வளவு அருமையாகக் காண முடியாது. ஆகவேதான் அவரைச் சிறந்த உரையாடல் வல்லுனர் என்கிறார்கள்.

அரசியல் பண்பையும், நாகரிகத்தையும், கண்ணியத்தையும் உணர்ந்து நடப்பவராகவும், சனநாயக முறையை அப்பழுக்கற்ற முறையில் கடைப்பிடிப்பவராகவும், அகில உலக அரசியல் நுணுக்கங்களையும், உள்நாட்டு அரசியல் குறிப்புகளையும் தெளிவாக அறிந்து உரைப்பவராகவும், திராவிடத்தின் இன்ப வாழ்வுக்கான வழிவகைகளைத் தெள்ளத் தெளிய அறுதியிட்டுக் கூறுபவராகவும் இருக்கின்ற காரணத்தால் சிறந்த அரசியல் வாதி என்கிறார்கள்.

தொழிலாளர் இயக்கத்தையும், பகுத்தறிவு இயக்கத்தையும், திராவிடக் கழகத்தையும் வளர்த்துவருவதில் பெரும் பங்கு கொண்டிருந்தும், திராவிடமுன்னேற்றக்கழகத்தைத் தோற்றுவித்துக் கட்டிக் காத்துத் திறம்படவும், புகழ்படவும் வளர்த்து வருவதிலே முழுப்பங்கு கொண்டும் இருந்து வருகிற காரணத்தால் அவரைச் சிறந்த அரசியல் தலைவர் என்கிறார்கள்.

அரசியல் — பொருளாதார—சமூக—மொழியியல்— கலையியல் உரிமைகளுக்காகவும், வாழ்வுக்காகவும் போராட்டங்கள் நடத்தியும், கிளர்ச்சிகளில்ஈடுபட்டும், தண்டனைகள் ஏற்றும், சிறைக்கூடம் புகுந்தும் வீரப்பணிகள் பலவும் ஆற்றி வருகின்ற காரணத்தால் அவரைச் சிறந்த **விடுதலை வீரர்** என்கிறார்கள்.

இவ்வாறுகப் பல்வேறு வகையான அறிவுத் திறன்களும், ஆற்றல் திறன்களும் அண்ணா அவர்களிடம் ஒருங்கே திரண்டு, மிகச் சிறந்து, ஒளிவீசி ஒங்கு புகழோடு திகழ்கின்ற காரணத்தால்தான் நாம் அவரை 'அறிஞர்' என்று, அன்போடும், மகிழ்ச்சியோடும், மதிப்போடும், பெருமையோடும் அழைக்கின்றோம். **'அறிஞர்'** என்பது அண்ணாவின் அறிவாற்றல் கண்டு அழைக்கப்படும் அடைமொழிப் பெயரேயன்றி. 'பட்டப்பெயர்' அல்ல.

நம்மவர் உள்ளமெல்லாம் கவர்ந்த அப்படிப்பட்ட அறிஞர் **அண்ணா** அவர்கள் ஐம்பதாண்டு நிறைவு பெற்றுத் திகழ்வது பெருமகிழ்ச்சியை அளிப்பதாகும். வாழ்க அறிஞர் அண்ணா! வளர்க அவர் புகழ்! வெல்க அவர் தொண்டு! ஃ

அண்ணா பேச்சு

★

பேச்சு, கருத்தின் தொகுப்பு. கருத்து, சிந்தனையின் விளைவு. சிந்தனை, காண்பன கேட்பனவற்றிலே தொடர்ந்து ஏற்படும் ஆர்வம்.

நினைவாள அறிஞர்



ஒளவை சு. துரைசாமி

செ -

நண்பர். திரு. சி.என். அண்ணாதுரை அவர் கட்கு ஆண்டு ஐம்பது ஆகிறது என்ற செய்தி அறிய எனக்கு வியப்பு உண்டாயிற்று. அவரை நினைக்கிறபோது அவருடைய உருவம், இளமை நலமும் அறிவொளியும் கொண்டு என் மனக் கண்ணில் தோன்றுவது இயல்பு. பகட்டான உடையும் பரபரப்புக் கலந்த நடையும் எந்தக் காலத்தும் அவரிடம் தோன்றியதில்லை. குளிர்ந்த பார்வையும், கனிந்த சொல்லும், பணிந்த ஒழுகலாறும் சிறந்த மனப்பண்பும், நிறைந்த அன்பும் என் மனத்திரையில் தோன்றும் அன்பர் அண்ணாதுரையின் கூறுகளாகக் காண்பேன்.

திரு. அண்ணாதுரை யவர்களை யான் முப்பத் தொன்பது ஆண்டுகட்கு முன்பே அறிவேன். அவருடைய பேச்சும் எழுத்தும் அந்த நாளிலேயே அறிவு மணம் கமழ்ந்து, கேட்போர் படிப்போர் உள்ளத்தை ஈர்த்துப் பிணிக்கும் இயல்பு பெற்று விளங்கின.

இதழாசிரியராய் தமிழ் மக்களை இருளின் நீங்கி நல்ல அறிவொளி பெறுமாறு இயக்கந் தொடங்கிய காலத்தில், இளங்கதிர் ஞாயிறு ஒன்று தமிழ் வானத்தில் எழுகிறது என எண்ணி இறுப்பூது கொண்ட நண்பர்களில் யானும் ஒருவன்.

எதிர்காலத் தமிழகத்துக்குரிய இளைஞர் உள்ளங்களை அரசியல், பொருளியல், சமுதாய இயல்களில் ஈடுபடுத்திப் பணி செய்யத் தூண்டும் அண்ணாவின் திறமையும் பண்பும் என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

நண்பர் திரு. அண்ணாதுரை அவர்களால் தமிழ்ப் படிப்பும் தமிழ்ச் சொல்வன்மையும் எழுத்து நடையும் புது மலர்ச்சி பெற்றன. செந்தமிழின் செம்மை சிறப்புறத் தோன்றிற்று. அவருடைய அறிவு செறிந்த ஆதரவால் செந்தமிழில் செம்பாகமான செய்யுள் பிறந்தது; தீவிய இனிய செய்யுள் நூல்கள் எழுந்தன; செய்தித்தாள்கள் சீரிய நடைகொண்டன; அரசியல் வாழ்வில் புதிய நோக்கம் துலங்கிற்று. பொருளியல் அறிவு தமிழ் நாட்டைக் கூர்ந்து நோக்கத் தூலப்பட்டது: சமுதாயத்தை மூடிக் கிடந்த மூடக் கருத்துக்கள் பல உடைபட்டுப் பறந்து போயின. எதிர் காலத் தமிழ் வாழ்வின் பொறுப்பை ஏற்று நடத்தற்கேற்ற மனத்திட்பமும் அறிவு ஒட்பமும் வினை செயலதிறமும் இளைஞரிடையே வளம் பெற்றுள்ளன.

இத்துணை நலங்கட்கெல்லாம் தலைமை இளைஞராய், நிலைகுலையா அறிஞராய், நன்னெறி காட்டும் முது தோன்றலாய் விளங்கும் நண்பர் அண்ணாதுரை எண்பதாம் ஆண்டு நிறைவும் நூற்றாண்டு நிறைவும் பெற்றுப்பிறங்க அருளுக என்று—

"ஞாலம் நிற்புகழே
மிகவேண்டும்-தொ
ஆலவாயில் உறையும்
எம் ஆதியே"

—என மன மொழிகளால் பரவுகின்றேன்.

வாழ்க அண்ணாதுரை!
வளர்க தமிழ் உணர்வு!

காவலும் கூடத்திலும் கடமை காத்தார்!

மும்முனைப் போராட்டம் அறிஞர் அண்ணாவையும், கழக வீரர்களையும் காவற் கூடத்திற்கு அனுப்பிற்று! மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை—என்ற உற்சாக ஒலியெழுப்பிக் கொண்டே உள்ளே புகுந்தார்கள்!

என்றாலும், சிலர் சிறையின் சட்ட திட்டங்களைக் கண்டு உள்ளூர வருந்தினர்! எங்கு சென்றாலும் கடமையையும் கட்டுப்பாட்டையும் தவறாது கடைப் பிடிக்க வேண்டுமென்பதல்லவா அண்ணாவின் கட்டளை? அதற்குப் பணிந்தே அவர்கள் சிறையில் நடந்தாலும், சில செயல்கள் அவர்களுக்கு அருவருப்பை யூட்டின. அவர்களுக்குப் பழக்கமில்லாத காரணத்தால் அத்தகைய செயல்களைச் செய்யக் கூச்சப்பட்டனர்.



ஆம்; இரும்புக் கம்பிகளும் சுவர்களும் சுற்றியிருக்கும் அந்தச் சிறைக்குள்ளே இருக்கும் சிறுநீர்ப் பானைகளை காலையிலும் மாலையிலும் வெளியே எடுத்து வந்து கக்கூசில் ஊற்றிட தோழர்கள் அருவருப்பு அடைந்தனர்; சாப்பாட்டுத் தட்டுகளை ஏந்தியபடியே வரிசையாக நின்று, அச்சடித்தகளியும், குழம்பும் வாங்கிச் சாப்பிட, பின்னல் அந்தத் தட்டைக் கழுவி வைக்கக் கூச்சமடைந்தனர்; காலையில் சிறை அதிகாரிகள் கணக்கெடுப்பதற்கு வரிசையாக உட்கார மறுத்தனர்!

இதன் விளைவாக அந்தத் தோழர்களுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் பூசல் ஏற்பட்டு, அடிக்கடி தகராறுகள் நிகழ்ந்தன. மேலிடத்து உத்திரவுப்படி நடப்பதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாத அதிகாரிகள் திகைத்தனர்.

இந்தச் செய்தி அதே சிறையிலிருந்த அண்ணா அவர்களுக்கு எட்டியது. மாலையில் அவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை அழைத்து, "நமக்கு சிறைக் கூடங்களில் சில பல மாற்றங்கள் தேவையென்றால் அதை அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்திப் பெற முயலவேண்டுமே யொழிய, சிறை அதிகாரிகளோடு மோதிக் கொள்வதில் ஒருவிதப் பயனுமில்லை. கழகத் தோழர்கள் தங்களுடைய சிறுநீர்ப் பானைகளை வெளியே எடுத்து வைக்க முடியாது என்றால், நாள்தோறும் நானே வந்து எல்லோருடைய சிறுநீர்ப் பானைகளை எடுத்து வைக்கிறேன். தட்டுகளிலே சோறு வாங்கிக் கொண்டு வந்து அவரவர் அறைகளிலே வைக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கான அனுமதியைத் தோழர்கள் எனக்குத் தரத் தயாரா?" என்று கேட்டு வரச்சொன்னார்.

கடமையை உணர்த்தும் இத்தகு சொற்களை நாவலர் வாயிலாகக் கேட்டவுடன் கழகத் தோழர்கள்கண்கலங்கினர்; தம் செய்கைக்கு வருந்தினர்; கடமை உணர்ந்தனர்.

"அண்ணா அவர்கள் வர வேண்டாம்; நாங்களே முறைப்படி நடந்து கொள்கிறோம். எங்களை மன்னிக்கும்படி அண்ணாவிடம் கூறுங்கள்"—என்று நாவலரைக் கேட்டுக் கொண்டனர். பின்னர், சிறையில் எந்தத் தகராறும் எழவில்லை.

கடமையை, கட்டுப்பாட்டை மீறாத உணர்ச்சியை அன்று தொட்டே அண்ணா அவர்கள் கழகத் தோழர்களுக்கு ஊட்டி வருவதால்தான், சிறை அதிகாரிகளிடமிருந்து 'திராவிட முன்னேற்றக் கழகத்தார் சிறை விதிகளை மதித்து நடக்கும் கடமை உணர்ச்சி கொண்டவர்கள்'—என்ற பாராட்டைப் பெற முடிந்தது!



"முரசொலி" மலரில், அமெரிக்காவில் கேட்ட எதிரொலியைக் குறிப்பிடுவது ஒரு வாறு பொருத்தமாயிருக்கு மென்று நினைக்கிறேன்.

சென்ற ஆண்டு, பென்சில் வேனியாவிலுள்ள ஈச்டன் என்னும் நகரில், "அண்ணாத் துரையின் வாழ்க்கை வரலாறு உங்களிடம் இருக்கிறதா?" என்று ஒருவர் கேட்டார். அமெரிக்காவின் புகழ் பெற்ற சஞ்சிகைகளில் ஒன்றான "நியூ ரிபப்ளிக்" ஆசிரியராகிய திரு. செலிக் ஆரிசன், இக்கேள்வியைக் கேட்டதும் நான் மிகவும் வியப்படைந்தேன்; உடனடியாக, இவ் வியப்பில் ஒரு மகிழ்ச்சியும் கலந்து கொண்டது. அறிஞர் அண்ணாவைப் பற்றி ஆர்வங் கொண்டவர்கள் அமெரிக்காவிலும் இருக்கிறார்களென்பது பெருமித உணர்ச்சியைத் தோற்றுவித்தது.

திரு. செலிக் ஆரிசனை, லபாயெட் கல்லூரியில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் சந்தித்தேன். அமெரிக்காவின் ஏழாவது தேசியக் கருத்தரங்கு மாநாட்டில் இச்சந்திப்பு ஏற்பட்டது. இந்திய—அமெரிக்கத் தொடர்பைக் குறித்த ஒரு வாதத்தில் கலந்து கொண்டதின் பயனே இச் சந்திப்பு.

இக்கருத்தரங்கு மாநாட்டில் வேறு இரு இந்தியர்கள் கலந்து கொண்டார்கள். ஒருவர் வட இந்தியாவைச் சேர்ந்தவர். திரு. பிரிச் மோகன் செக்ரி என்பது அவருடைய பெயர். டில்லி சோசலிஸ்டுக் கட்சியின் செயலாளராகிய அவர் வட இந்திய மக்களின் கருத்தை விளக்கிப் பேசினார். மற்றொருவர், வாசிங்டனிலுள்ள இந்தியத் தூதரின் முதன்மைச் செயலாளராகிய திரு. கே. எஸ். டலால். இந்தியப் பேரரசின் கருத்துக்கள் எத்தன்மையில் அமைந்துள்ளன என்பது அவருடைய பேச்சின் அடிப்படை.



இவ்விருவர்களுடைய கருத்துக்களோடு முரண்பாடு கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. வட இந்திய மக்களின் கருத்தும், இந்தியப் பேரரசின் கருத்தும், இந்திய மாநில மக்களின் முழு ஒற்றுமைக் கருத்தாகக் கொள்ள முடியாது, கொள்ளக்கூடாது —என்பது என்னுடைய வாதமாக அமைந்தது.

"அப்படியானால், நீங்கள் யார் சார்பாகப் பேசுகிறீர்கள்?" என்று இவ்வாதத்தில் அடிக்கடி தலையிட்டுப் பெரும் பங்கு கொண்ட ஓர் அம்மையார் கேட்டார்கள். நியூயார்க்கிலுள்ள அனைத்து நாட்டுக் கல்வி நிலையத்தின் தெற்கு ஆசியப் பகுதி நடைமுறைத் திட்ட நிபுணராகிய திருமதி. ஆன் லாங் பிளெயிச்டெல் கேட்ட அக்கேள்விக்கு, "தென்னிந்திய மக்களின் சார்பாக" என்று மறுமொழி அளித்தேன்.

"தென்னிந்தியா என்றால் அது ஒரு தனி நாடா?" என்று மற்றொருவர் கேட்டார்.

"தென்னிந்தியா என்பது ஒரு தனி மாநிலம் என்பதோடுகூட, அங்குள்ள மக்கள், மொழிகள், கலை, நாகரிகம், பண்பு, பழக்கவழக்கம், உடை, வாழ்க்கை இயல்பு முதலியன அனைத்தும் வேறுபாடானது" என்று கூறினேன்.

"ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களோ நீங்கள்?" என்று கிழக்கத்திய நாடுகளின் வரலாற்றுத் துணைப் பேராசிரியர். கேப்டன். சோசப். ஆர். டுபர் கேட்டார்.

"ஆம். தென்னிந்தியாவிலுள்ள திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவன். திராவிட மக்கள் வாழும் மாநிலப் பகுதிகளெல்லாம் 'திராவிட நாடு' என்ற பெயருள்ள

அண்ணா படைத்த பாத்திரங்கள்!

2

சிவாஜி மாபெரும் வீரன்; செக்கர்வானமென, பூமியில் எதிரிகளின் இரத்தத்தைப் பீரீட்டுப் பரவச் செய்து, வாளின் சுழற்சியிலேயே வெற்றி மாலை சூடியவன். 'மலை எலி' எனப் புகழப்பட்ட அவன் நடத்திய ஆற்றல் மிகுந்த சிறு படைக்கு முன்னே, மாபெரும் மொகலாய ஏகாதிபத்தியப்படை சிதறியோடியது.

வீரந் துள்ளும் சிவாஜியின் சரித ஏட்டிலே, ஓட்டியிருக்கும் மாசுதான் காணப்பட்டார். நீறுபூசிய மேனியையும், நிஷ்டை புரியும் நேர்த்தியையும் கண்டதும், வாளின் துணை கொண்டு புதியதோர் நாடு சமைத்த சிவாஜி மெய் மறந்தான்; தலை குனிந்தான்; தெண்டனிட்டான்.

மெல்ல மெல்லத் தான் கண்ட வீரக் கனவுகளின் ஈரச் சுவட்டை அழித்துவிடும் அளவிற்குப் 'பக்தி' வெப்பத்தைத் தன் உள்ளங்களில் ஏற்றிக்கொண்டு, துணைக் கண்டத்து மன்னர்கள் பரம்பரையாகச் செய்துவரும் 'வரலாற்றுக் குற்றத்தை'ச் செய்தான்; வீர எண்ணத்தை மண்ணுக்கிவிட்டு, 'முடிவில் ஒரு பிடி சாம்பல் தானே'— எனும் தத்துவத்தை நோக்கி ஓடித் தன் அழிவைத் தேடிக் கொண்டான்!

—இத்தகைய அருமையான பாத்திரத்தை 'சந்திரோதயம்' நாடகத்தில் சந்திக்கிறோம். மக்களின் காவலனாய் இருக்க வேண்டியவன், 'மகேஸ்வரனே' நம்பி—'அவர் தாசர்'களை நம்பி தங்களையும், வரலாற்றையும் அசுத்தப்படுத்திய மன்னர்களின் வரலாற்றை சிவாஜி பாத்திரத்தின் மூலம் போதிக்கிறார், நாடகப் போராசிரியர் அண்ணா!



தனியரசாகப் பிரிய வேண்டும் என்ற கொள்கையுடையவன்." என்று கூறினேன்.

இதற்குப் பின்னர்தான், "நியூ ரிபப்ளிக்" ஆசிரியர் திரு. ஆரிசன், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், கட்சித் தலைவர் பற்றியும், தென்னிந்தியாவின் அரசியல் நிலையைப் பற்றியும் விவரமாகக் கேட்டார்.

கட்சித்தலைவர் அறிஞர் அண்ணாத்துரையைப் பற்றித் திரு. ஆரிசனிடம் கூறியதன் சுருக்கமாவது:—

"அறிஞர் அண்ணாத்துரையைச் சென்ற 21 ஆண்டுகளுக்கு மேலாக அறிவேன். அரசியலில் அவருக்கு நான் அண்ணனாக இருந்தபோதிலும், அவரை நான் 'அண்ணா' என்று அழைப்பது வழக்கம். முதன் முதலில் நீதிக்கட்சியில் சேர்ந்து, 'விடுதலை'ப்பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதி, பின்னர் அதன் ஆசிரியராக இருந்து பணியாற்றி, இப்போது திராவிட விழிப்பு இயக்கத்தின் முனைப்பிற்குத் தலைமை தாங்கி, தனித் திராவிட நாட்டை உருவாக்கும் மாபெரும் அரசியற் புரட்சிக்கு அவர் வழி வகுத்துக்கொண்டு வருகிறார். அவருக்கு ஆதரவாளர்களாக படித்துணர்ந்த மாணவப் பெருங்குழாம்களும், பொது மக்களும் தீவிரத் தொண்டு செய்து வருகிறார்கள்."

தீரு. ஆரிசனை அடிக்கடி சந்தித்துப் பேசும்படியான வாய்ப்பு அம் மாநாட்டில் கிடைத்தது. எட்டு நாட்கள் (சூன் 14—21) நடைபெற்ற அம்மாநாட்டின் இடைவேளைகளையெல்லாம் இதற்காகவே அவர் பயன்படுத்திக்கொண்டார். தென்னிந்திய மக்களின் கருத்தோட்டத்தைத் தெரிந்து கொள்வதற்கு அவரும், வேறு பல அமெரிக்கர்களும் காட்டிய ஆர்வம், என்னுடைய இரண்டு மாதகால அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின் மறக்க முடியாத நினைவாக என்றென்றும் இருக்கும்.

விடுதலைப் போர்த்தலைவன்!

கவிஞர் **வாணிதாசன்**



வானைப் போன்ற அறிவாற்றல்
வாய்த்தோன்! அருங்குணம் வாய்த்தோனும்!
தேனைப் பாய்ச்சும் செஞ்சொல்லான்!
தெருண்டவர் வியக்கும் பேச்சழகன்
ஊனை உயிரை நல்லுணர்வை
ஊக்கும் தென்றற் பூங்காற்று!
ஆனை முழகன் எம்அண்ணு!
அறிஞர் அண்ணு வாழியரே!

இருளைப் போக்க உலகினிலே
எழுந்து தோவோன் இளம்பரிதி!
உருளும் இடியென முழங்கிடுவோன்!
ஊருக் குழைக்கும் பாட்டாளி!
வெருளும் நுகத்துக் காளைகளை
மெல்ல அடக்கும் நல்லுழவன்!
அருளும் குணத்தோன் எம்அண்ணு!
அறிஞர் அண்ணு வாழியரே!!

மக்கள் போற்றும் இளவேனில்!
மாணவர் கற்கும் தோகைப்பாடல்!
சுக்குத் திப்பிலி மிளகென்னும்
துயரைப் போக்கும் மாமருந்து.
திக்கு புகழ்சேர் திராவிடத்தின்
வீரன்! விடுதலைப் போர்த்தலைவன்!
மக்கள் தலைவன் எம்அண்ணு!
அறிஞர் அண்ணு வாழியரே!!

ஏழை செல்வன் இல்லாத
இன்பத் திராவிட நாடடைய
வாழ்வை இளமை முதற்கொண்டே
வகுத்தோன்! தம்பியர் தொகுத்தோனும்!
சூழும் கடலார் திராவிடத்துத்
தலைவன்! விடுதலைப் படைத்தலைவன்!
வாழ்க அண்ணு எம்அண்ணு!
அறிஞர் அண்ணு வாழியரே!!!



அண்ணலின் பொன்மொழி

ஒரு நாடு இன்னொரு நாட்டை அடக்கி வைக்க முடியாது. அடக்கினால் எரிமலை கக்கும்; மக்கள் மனமெனும் கடல் பொங்கி வழியும்; புரட்சிப் புயல் வீசும். அந்தப் புயலின் முன்பு எந்தக் கொடிய வலுவும் நிற்க முடியாது.




அணைவின்
பொன்மொழி
ஓநாய்க்கு இரத்த பானத்தில் சுவை இருக்கும் மட்டும் ஜீவ காருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும்? அது போலவே தங்களுக்கு இலாபம் தரும் சாதனமாக இருக்கும் ஜாதியை ஒழிக்க எப்படி முன் வருவர், அந்த இலாபத்தை அடைபவர்கள்?

அவர் வளர்க்கும் பரம்பரை



நண்பர் பாராட்டு

"அடடா! என்ன பேச்சு! பேச்சென்றால் அப்படி அல்லவா இருக்கவேண்டும்? நீங்கள் ஒருமுறை அவர் பேச்சைக் கேட்கவேண்டுமே!" என்று சென்னைத் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் (ஜி. பி. ஓ.) வேலை பார்த்து வந்த என் நண்பர் இராசு முதலியார் தம்மை மறந்து என்னை நோக்கிக் கூறினர்.

"யாருடைய பேச்சைக் கேட்டீர்கள்? தெளிவு இல்லாமல் பேசுகிறீர்களே!" என்று நான் கேட்டேன். என் நண்பர் நகைத்துக்கொண்டே, "மன்னிக்க வேண்டும். பேசியவர் இன்னாரென்று சொல்லாமலே பேசிவிட்டேனே? பேசினவர் ஓர் இளைஞர்; எளிய தோற்றம் உள்ளவர்; அவர் பெயர் அண்ணாத்துரை என்பது; வயது ஏறத்தாழ இருபத்தைந்து இருக்கலாம்; எம். ஏ. பட்டம் பெற்றவர்!" என்றார்.

"அவர் பேசும் ஒரு கூட்டத்திற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள். அவரது பேச்சைக் கேட்போம்." என்றுயான் கூறினேன்.

வியத்தகு பேச்சு

நண்பர் சில நாட்களுக்குப் பின்பு நடந்த ஒரு கூட்டத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்; அப்பொழுது மேடையில் இளமைத் தோற்றமும், குள்ளமான உருவமும் கொண்ட ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். வெண்கலக் குரல்-என் போன்ற தமிழாசிரியர் பெரிதும் விரும்பும் தமிழ் பற்றிய கருத்துக்கள்—அடுக்கு மொழிகள் ஆகியவை சொற்பொழிவின் இடையிடையே வெளிப்பட்டன. சொற்பொழிவில் பொருளற்ற சொற்கள் இல்லை; சொல்லும் பொருளும் பருந்தும் அதன் நிழலும் போலப் பிணைந்து சென்றன.

நண்பர் இராசு முதலியார் என் முகத்தைப் பார்த்தார். "என்ன உங்கள் கருத்து?" என்று கேட்பதுபோல அப் பார்வை இருந்தது. அவர் கேட்ட ஆண்டு 1936.

1936-க்கு முன்வரையில் இவ்வளவு அழகாகப் பேசிய இளைஞரை இத்தமிழகத்தில் நான் கண்டது இல்லை. வாதத்திறமை — பேச்சுத் திறமை — உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து வரும் சொற்கோவை—தூய தமிழ்ப்பற்று—தமிழ் வளர்ச்சியில் ஆர்வம்—தமிழர் தம் முன்னேற்றத்தில் கவலை — இவை அனைத்தும் அன்று அவர் சொற்பொழிவில் வெளிப்பட்டன. அவரது சொற்பொழிவைக் கேட்டு என் உள்ளம் குளிர்ந்தது. அப்போதுதான் நண்பர் என்னைப் பார்த்தார்.

"ஐயா, நான் மிகுதியாகச் சொல்ல விரும்பவில்லை. இவர் ஒரு பிறவிப் பேச்சாளர்; சிறந்த மேதை. இவர் இந்த நாட்டில் சிறந்து விளங்குவார்; இவருக்கென்று ஒரு பரம்பரை தோன்றும்!" என்று உவகையோடு கூறினேன்.

ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திரு அண்ணாத்துரை "ஆற்றோரம்" என்னும் பொருள் பற்றி விரிவுரையாற்றினர். அச் சொற்பொழிவின் அருமைப் பாட்டை அப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் மாணவர்களும் பெரிதும் பாராட்டியதை நான் அறிவேன்.

மகாகனம் சாத்திரியார்

நான் விவேகானந்தா கல்லூரியில் தமிழாசிரியனாக இருந்தபோது அக்கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராக இருந்தவர் திருவாளர். ஆர். எஸ். வேங்கடராம சாத்திரியார் என்பவர். அவர் ஒரு நாள் அண்ணாவின் பேச்சைப் பற்றிப் பாராட்டிப் பேசிய பொழுது, "மகாகனம் சீனிவாச சாத்திரியார் ஒருமுறை அண்ணாவின் சொற்பொழிவைக் கேட்டாராம். கம்யூனிஸம், சோஷியலிஸம் ஆகிய இரண்டிற்குமுள்ள மிகச் சிறிய வேறுபாட்டையும் மிகத் தெளிவாக அண்ணாத்துரை விளக்கிப் பேசினாராம். 'மிகச் சிறந்த பேச்சாளர் — மிகச் சிறந்த அறிவாளி' என்று மகாகனம் சாத்திரியாரே உளமாரப் பாராட்டிப் பேசினார்!" என்று

மிக்க மகிழ்ச்சியோடு என்னிடம் கூறினர்.

மகாகனம் சாத்திரியார் உலகப் புகழ்பெற்ற பேச்சாளர்; சிறந்த அரசியல் அறிஞர். அவரே திரு. அண்ணாத்துரையைப் பாராட்டினர் எனின், அண்ணாவின் அறிவையும், ஆற்றலையும் பற்றி நான் என்ன சொல்வேன்?

சர் சி. பி. இராமசாமி

சென்ற ஆண்டில் சென்னையில் சர். சி. பி. இராமசுவாமி அய்யர் அவர்கள் அண்ணா பேசிய கூட்டத்திற்குத்தலைமை தாங்கினர். அப்பெரியார் உலகப் புகழ் பெற்றவர்; மிகச் சிறந்த பேச்சாளர்; சிறந்த அரசியல் மேதை அவர் கூட்டத்தினரை நோக்கி, "நீங்கள் திரு. அண்ணாத்துரையின் பேச்சைக் கேட்க ஆவலோடு வந்திருக்கிறீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆதலால் எனது பேச்சைச் சுருக்கிக் கொள்கிறேன்," என்று முக மலர்ச்சியோடு அண்ணாவைப் பாராட்டிக் கூறியது செய்தித்தாள்களில் வெளி வந்ததே!

அண்ணாத்துரை பரம்பரை

1935-க்கு முன் தமிழில் பாராட்டத்தகும் முறையில் பேசும் கல்லூரி மாணவர்களையோ, உயர்நிலைப்பள்ளி மாணவர்களையோ காண்பது மிகவும் அருமை. ஆனால் இப்பொழுது மாணவர் பலர் அண்ணாவின் போக்கிலேயே பேசும் மிகச் சிறந்த பேச்சாளர்களாக விளங்குகின்றனர். இவர்களுட் பெரும்பாலோர் அண்ணாவின் சொற்பொழிவுகளால் பயன் பெற்றவர்களேயாவர். அவரைப் போலவே வெண்கலக் குரலில் —அடுக்கு மொழியில்—மிகவும் வியத்தகு முறையில் உயர்நிலைப்பள்ளி மாணவரும் பேசி வருகின்றனர். இங்ஙனம் அண்ணாத்துரை பரம்பரை ஒன்று தமிழகத்தில் தோன்றி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளம் பெற்று வளர்ந்து வருகிறது.

அண்ணா எந்தப் பொருளைப் பற்றிப் பேசினாலும் அதில் தெளிவு இருக்கும். ஆழ்ந்த கருத்துக்கள் இருக்கும். அவரது பேச்சு அறிவுக்கு விருந்தாக அமையும். இந்த உண்மையை அவருடைய அரசியல் மாற்றாரும் பாராட்டிப் பேச நான் கேட்டுள்ளேன்.

அவர் சிறந்த எழுத்தாளர்; நாடக ஆசிரியர்; மிகச் சிறந்த நடிகர்; பல ஆண்டுகட்குமுன் "சந்திரமோகன்" எனும் நாடகத்தில் அவர் கங்குபட்டராக வேடம் பூண்டு நடித்த திறத்தினை யான் கண்டு எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

காசு கொடுத்துச் சொற்பொழிவு

மக்கள் காசு கொடுத்து நுழைவுச் சீட்டைப் பெற்று ஒருவரது தமிழ்ச் சொற்பொழிவைக் கேட்பது என்பது தமிழகம் காணுத ஒன்று. காசு கொடுத்து அறிஞர் இங்கர்சால் அவர்களின் சொற்பொழிவை அமெரிக்கர் கேட்டனராம். தமிழகத்தில் இரண்டொரு சமயச் சொற்பொழிவுகளை மட்டுமே மக்கள் காசு கொடுத்து கேட்டின்புற்றனர். பொதுச் சொற்பொழிவுகளுக்குக் காசு கொடுத்து, நுழைவுச் சீட்டைப் பெற்றுத் தமிழ் மக்கள் பெருந்திரளாக வரும்படிச் செய்த பெருமை அண்ணாவிற்கே உரியதாகும். அவரது பேச்சு மாலையில் இருக்குமாயின், அன்று காலையிலேயே நுழைவுச் சீட்டுக் கிடைப்பது அரியதாகும். ஒரு முறை காலை பத்து மணி அளவில் எனக்கு நுழைவுச் சீட்டுக் கிடைக்கவில்லை.

அவர் அறிஞர்

சமயத் துறையில் அறிஞர் அண்ணாதுரைக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு உண்டு. ஆயினும் அவர் ஒரு தமிழர்—சிறந்த அறிஞர்—பேச்சாற்றலாலும் வாதத் திறமையாலும் தமிழ் இளைஞர்களின் உள்ளம் கவர்ந்தகள்வர்; கள்ளம் கபடு அற்ற தூய உள்ளத்தினர்; கருத்துகளும், அழகுச் சொற்களும் விரவிவரும் நடையில் புத்தம் புது பொருட்களைப் பற்றி கேட்பவர் சலிப்படையாத வகையில் எழுத்தோவியம் தீட்டும் நூலாசிரியர்—மேனாட்டுக்காரர்களுக்கே உரிய புதுமை புகுத்துவதிலுள்ள பெருமை தமக்கும் உண்டு என்பதை பல நாடகங்களில் நிரூபித்த நாடகாசிரியர்—பெரும் பெரும் நடிகர்களே வியப்பில் ஆழ்ந்துவிடும்படி, நடிப்புக் கலையை வெகு இலாவகமாகக் கையாளும் சிறந்த தோர் நடிகர்.

வரலாற்றிலே தனியிடம்

இத்தகு நலங்களும் பெற்றுள்ளவரை "அறிஞர்" எனல் சாலப் பொருத்தமுடையதே. அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் மேலும் பல்லாண்டுகள் தமிழகத்துக்குத்தொண்டு செய்து வாழ அருள் புரியும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். இறைவன் அருளால் அறிஞரது அரிய தொண்டு தமிழக வரலாற்றில் தனித்தோர் இடம் பெறும் என்பது எனது நம்பிக்கை.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.பி.எச்டி
தமிழ "கா.சு" நினைவு இலக்கியக் குழு
சுகவாழ்வு நிலையம் - குழித்தலை.
திருச்சி மாவட்டம். 639 104.



"திரைக்கதையும், உரைநடையும் தீட்டி விட்டால்,
தேசத்தை மீட்பதற்குத் திறமை யாமோ?
உரைக்கின்ற அடுக்குமொழிப் பேச்சுக் கேட்போர்
ஒருங்குவந்து திரண்டுவிட்டால், பயனும்
உண்டோ?
அரைகுறையாய் வரலாற்றில் மறைந்த வற்றை
அழகாக நூலெழுதி, ஆவ தெனன?
நரைக்காத தலைபடைத்த இளைஞர் கூடி
நாடகத்தில் நடிப்பதனல், நாடா வாழும்?"

இப்படியே கேட்டவண்ணம் இருக்கின் றார்கள்,
இருபத்தைந் தாண்டுகளாய் இந்த நாட்டில்,
எப்படியும் புதிதாகத் தோன்றி விட்ட
இனவுணர்வைத் தீய்த்துவிடும் நோக்கத்
தோடு!
அப்படியும் ஆல்போலத் தழைத்து நிற்கும்
அதிசயந்தான் என்னவென்று வியந்து ரைப்பார்!
'செப்படியோ? மந்திரமோ? மாயந் தானு?'—
சிற்றறிவுக் கெட்டாதார் இதுதான் சொல்வார்!

எவரொருவர் இருபத்தைந் தாண்டுகள் முன்
இந்நாட்டின் அரசியலில் நுழையா விட்டால் —
தவறுகளை அடுக்கடுக்காய்ப் புரிந்து விட்ட
தமிழ்நாட்டார் தமையுணரும் நிலைவ ராதோ—
அவரேதான் ஐம்பதாண்டை அடைந்து நிற்கும்
அறிஞருக்குட் பேரறிஞர் அண்ணு! நம்மைக்
கவர்வதற்குக் கையாண்ட முறைகள் கண்டு,
கற்றறிந்தார் போற்றுகின்றார் கால மெல்லாம்.

கண்ணற்ற குருடர்கள் அறுவர் கூடிக்,
களிறென்றுல் என்னவென்று காண எண்ணி,
எண்ணற்ற தொல்லைகளுக் கிடையில் கண்டும்,
எதையெதையோ தனித்தனியே தடவிப் பார்த்து,
மண்பெற்ற பெருவிலங்கின் உருவ முற்றும்
மதிப்பிடவே தவறிவிட்ட கதையைப் போலக்,
கண்பெற்றுங் குருடரென வாழ்வோர், நல்ல
காஞ்சிதந்த தலைவனையும் திரித்துச் சொல்வார்!

வகுப்புவாதி என்றுரைப்பார் வருணம் காப்போர்;
மதத்துரோகி இவனென்பார் மதம்பி டித்தோர்;
மிகப்பழைய கடவுளுக்கே விரோதி யென்பார்
வெறுங்கோயில் வழிபடுவோர்; செல்வச் சீமான்...
தொகுப்பாக முதலாளி—நிலக்கி ழாரைத்
தொலைக்கவந்த தொழிலாளர் தோழன் என்பார்;
தகப்பனுக்குக் கீழ்ப்படியா மகனுக் கெல்லாம்
தலைவனென்பார் கலைபயிலா மகனைப் பெற்றோர்;

ஒருநாட்டைத் தனித்தனியாய்த் துணிக்க வந்த
உருப்படாத அரசியலின் கர்த்தா என்பார்
வருநாளில் தம்தோல்வி யுணர்ந்து கொண்ட
வஞ்சகர்கள், தேசியத்தின் பேரால் வாழ்வோர்!
திருநாட்டை வடநாட்டுச் சிறையி னின்று
தீமையின்றி விடுவிக்க வந்த அண்ணு
ஒருநாளும் இழிமொழியால் அழிய மாட்டார்!
உலகத்தின் பெருந்தலைவன் வாழ்க நன்றே!

அண்ணை!

தமிழர் நாவில் நடமாடி, அறிவுடன் இன்பமும், நல முடன் எழிலும், வியப்புடன் நயப்பும், ஆர்வத்துடன் அவா வும் தூண்டிவரும் சொல் இது. இன்று இவ்வுணர்வு களுக்குத் தூண்டுதல் தரும் சுடரொளி நம்மிடையே பொலி வுடன் தோன்றிப் பொன்னவி ரொளியுடன் நடமாடுகிறது. அதன் புகழ் நம்முன் எதிர்கால வானில் வைரமணியொளியும் முத்தொளியும் மரகத நீல மாணிக்கவொளிகளும் காண இருக்கின்றது.

சுடரொளியை நம்மி டையே நிலைநாட்டும் மரபுச் சின்னமாய் நில வும் 'அண்ணை' என்ற இந்த 'மூவெழுத்து', 'ஈரசை'ச் சொல் இயல் பான மரபு வழி சென்று அது காட்டும் புகழ் மரபை நாம் முதலில் காண்போம்.

தமிழ்மொழி எவ்வளவு அழ காள, அறிவார்ந்த, பண்பு வளமிக்க மொழி என்பதை எத்தனையோ வழிகளில் காட்ட லாம். 'அண்ணை' என்ற அழ குச்சொல் அதில் ஒரு செவ் வழி காட்டுகிறது!

அண்ணை!

எம் 'அண்ணை' பேசுகிறார்!

அண்ணை என்பது இங்கே பெயர்ச்சொல். அது நமக்கு மூத்த, நம்முடன் பிறந்த, நம் மதிப்புக்கும், பாசத்துக்கும், இன்னதென்றுரைக்க முடியாத குருதித் துடிப்புக்குமுரிய-உற வுக்கும் உரிய ஒருவரைக் குறிக்கிறது.

இதே சொல்லே வெறும் பெயராக மட்டுமல்லாமல், 'அண்ணை!' என்று கூவியழைப் பதற்குரிய விளிப்பெயராகவும் சொல்லலாம். உண்மையில் மூல முதல் பெயர்ச்சொல் 'அண்ணன்' என்பதே என வும், அது விளியில் அண்ணை என்று (ஈறுகெட்டு ஈற்றயலக ரம் நீண்டு) திரிபுற்றதெனவும் இலக்கணப் புலவர் நம்மிடம் கூறுகின்றனர். குழந்தைக ளின் அன்பு மழலை மொழி யிலே அண்ணை என்ற விளிச் சொல்லே, இயல்பான பெயர்ச் சொல்லும் ஆகி, குழந்தை வழக்கிலிருந்து உலக வழக்கிற்கும் பரவியுள்ளது.

அண்ணன் குடும்பத்தின் செல்லப் பெயராக விளி வடிவ



அண்ணைத்தம் எம் அண்ணை!

பன்மொழிப் புலவர்
கா.அப்பாதுரையார்

வேடிக்கை! வேடிக்கை!!

★

சத்தியமூர்த்தியுடன் பணியாற்றி வந்த காங்கிரஸ் தலைவராகிய சீனிவாச ராவ் — என்பவரை வம்பில் மாட்டவைத்து விட்டார், அறிஞர் அண்ணா, ஒரு தடவை.

1935-சென்னைத் தேர்தலில் நின்ற அண்ணா அவர்கள் தாழ்த்தப்பட்டோர்கூட்டத்தில் 'தாழ்த்தப்பட்டவர்களை நான் சமமாக மதிப்பவன், எனவே நீங்கள் சமைத்துப் போட்டதைச் சாப்பிடுவேன். ஆனால் காங்கிரஸ் தலைவர்கள் உங்களைச் சமமாக மதிக்கிறார்களா?—உங்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடுவார்களா? — என்று சோதித்துப் பாருங்கள்.' — என்று பேசிவிட்டு, தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் வீட்டில் உணவருந்திச் சென்றுவிட்டார்!

பிறகு, காங்கிரஸ் கூட்டத்தில் சீனிவாச ராவ் என்னும் காங்கிரஸ் தலைவரை தாழ்த்தப்பட்ட தோழர் மீன குழம்பு உண்ண அழைத்தார்! காங்கிரஸ் தலைவர் பேதிர்ச்சியடைந்தார்!'சைவ உணவுதான் சாப்பிடுவேன்' என்றார்! 'சரி. சைவ உணவாவது சாப்பிட வாருங்கள்' என விடாப் பிடியாக அழைத்தார்கள், தோழர்கள்! பிறகு தயங்கித் தயங்கி மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் உணவு உண்டார், 'வைதீகத் தலைவர்!'

மேற்று 'அண்ணு' ஆனது போலவே, தமிழில் அம்மை அம்மா ஆகவும், அப்பன் அப்பா ஆகவும், அக்கை அக்காவாகவும், மாமன் மாமா வாகவும், அத்தன் அத்தானாகவும், பாட்டன் பாட்டாவாக வும் மாறியுள்ளன. இவற்றின் பின் கூட விகுதி சேர்த்து அம்மாள், அக்காள் என்றும் சென்னை வழக்கில் அப்பார், அண்ணார் என்றும் வழங்குவதுண்டு.

அக்காள் என்பதன் மூலச் சொல் அக்கை கூட அன்று; அக்கன் என்றும் — அம்மா என்பதன் மூலச்சொல் அம்மை கூட அன்று, அம்மன் என்றும் மொழி நூலார் கூறுவர். அது போல அண்ணு என்பதன் மூலச்சொல் அணணன் அல்ல; அண்ணல் என்பதே. செம்மல், இளவல், ஏந்தல் [illegible] என்பது போல [illegible] உயர்திணை [illegible] தில் முடி [illegible] றுகிறது [illegible]

அண்ணல் [illegible] உடன் [illegible] உரிய பெ [illegible] தந்தை, அரசன், [illegible] தலை [illegible] உ [illegible] இப் [illegible] என்ற [illegible] பெயராக அருகே [illegible] என்ற பொருளும் அதற்கு உண்டு.

அண்ணு என்று இன்று நாம் பலவகை உணர்ச்சிகள் உளத்தே தோன்ற அழைக்கும் செம்மலுக்கு, அவர் இயற்பெயரிலேயே 'அண்ணு' ஒரு பகுதியாக அமைந்து கிடக்கிறது. மேற்கூறப்பட்ட அத்தனை பொருட்களும் உணர்ச்சிகளும் ஒருங்கே உளத்தில் ஊட்டவல்ல இச்சொல்லைத் தேர்ந்தெடுத்து அவர் பெயர்ப் பகுதியாக்க, அவர் பெற்றோர் உள்ளங்களில் அன்றொரு நாள் என்ன தூண்டுதல் வந்ததோ, என்ன உணர்ச்சிகள் கொந்தளித்ததோ—யாமறியோம், தமிழன்னையே!

'அண்ணு' என்ற சொல் மூலம் இன்று தமிழர் உளத்தில் பல்லுணர்வலைகள் எழுப்பும் தமிழன்னை, அன்றும் இதே வகை நுண்ணுணர்வான சூக்குமஅலைகளை 'அண்ணு'என்ற பொருளில் பெற்றோர் உற்றோர் உள்ளங்களில் நிழலாட விட்டு, அவர் நாவுகளிலும் பண்ணைவிட்டிருக்க வேண்டுமெனவும் எண்ணலாம்!

அண்ணு என்ற சொல்லை சொல்லாகக் கொள்ளாமல் இரண்டுசொற்களின் இணையாகக் கொண்டால் அண்மைநா, அருகே உள்ளநா; அண்ணம் நா, மேலுள்ள அல்லது மேல் நோக்கியநா; அள்நா அதாவது அடிநாக்க என்ற பொருட்கள் உண்டாகும்.

இச்சொல்லை வினைச்சொல்லாக எடுத்துக்கொண்டால், 'அண்ணு' என்பது வினைப் பகுதி. ஆகவே அது 'தலையை உயர்த்து, மேலேபார், அண்ணாந்து பார்' என்ற பொருட்கள் உடையதாகும்.

அண்ணு என்னும் அணுகு, கிட்டேவா என்ற பொருளுடைய வினைப்பகுதி ஆகும், அதனடிப்படையாக அண்ணு என்பதை எதிர்மறைப் பெயரெச்சமாக 'கிட்டே வரமுடியாத' என்றும், வினையெச்சமாக 'கிட்டேவந்து' என்றும் எதிர்மறைப் பெயரெச்சமாகக் 'கிட்ட வராமல்' என்றும் பொருள் விளக்கலாம்.

இவைமட்டுமல்ல.

அண்ணல் மலை என்பதே தமிழில் அண்ணுமலை ஆகியுள்ளது. மலைமீது தவழும் மதியை நாலடியார் யானையின்மீது அவர்ந்த அரசருக்கு உவமையாக்கியுள்ளது.

'மலை மிசை தோன்றும் மதியம்போல்—யானைத்
தலைமிசை கொண்ட குடையர்'

அலையிலெழும் இளங்கதிரா

கிய எழு ஞாயிற்றையே முருகனென்றும், மலையில் துலங்கும் முதிர் செக்கர் ஞாயிற்றையே சிவனென்றும் தமிழர் புனைந்துரைத்ததாகக் கூறுவர் ஆசிரியர் மறைமலையடிகள்.

அண்ணல் என்பதற்குச் சிவப்பு என்றும் பொருள் உண்டு.

அண்ணுமலை அல்லது அண்ணலமலை கடவுளுக்கே உரிய பெயர் என்பதுணராது சமக்கிருத மொழியார் அதை அருணசலம் என்று மொழி பெயர்த்தனர்.

சமயக் குருமார் திருவண்ணுமலையில் இருட்டில் மின்னொளி காட்டச் செயற்கையாக ஏற்றும் சிறுமனித ஒளி கார்த்திகையில் காணப்படுவது.

எம் தமிழகத்தில் என்றென்றும் பகலும் இரவும் இயல்பாக ஒளிரும் ஒளி — கலை எழு ஞாயிறு எம் அறிஞர் அண்ணு!

அவர் அண்ணுமலையல்ல; அண்ணுத்துரை. கல்லாலான அண்ணுமலையன்று; அறிவாலான அறிஞர் அண்ணுத்துரை. மலை மறைக்கும்; மலைப்புத் தரும்; இருளுக்கு உதவும்! துரை ஒளியரசு-இருள் துரத்தி ஒளிக்கதிர்கள் பரப்பும்.

இளவளஞாயிறு தென்திசை நின்று திரும்பும் நாள் தமிழர் பொங்கல் விழா; பொன் கரும்புவிழா! என்றும் எவராலும் ஆளப்படாது நிமிர்ந்து நின்ற தென்னகம் கீழ்திசையிருந்து அயலார்களெல்லாம் வெருட்டி, தென்திசையிலும் விடுதலைக் கொடி ஏற்ற உளங் கொண்டுள்ளது. அப்பொங்கல் புதுமலர்ச்சிக் கொடியில் மின்னி மினுக்கும் கலைப்புள்ளிகளிலேயே மின்னுதொளி வீசும் எழுத்தாளனாக விளங்குகிறார் எம் தமிழகத்தினின்று உலகவானில் ஒளி வீசும் புதிய அண்ணுமலைத் தீபம் அண்ணு! அறிஞர், கலைஞர் அண்ணு எனும் எம் அண்ணு! எங்கள் அண்ணு! என் அண்ணு!

அண்ணு படைத்த பாத்திரங்கள்!

ஓ

மக்கள் போற்றும் இசைச்செல்வன் மதிவாணனுக்கு ஒரு தங்கை, அவளுக்கொரு காதலன். காதலர்கள் வாழ்வு மணவாழ்வில் முடியவேண்டும் என ஆசைப்படுகிறான் மதிவாணன். சிறு கோட்டிற்குள்ளேயே அவனுடைய இலட்சியம் நின்றுவிடுகிறது. அதற்காக அவன் அரண்மனைப் பாடகனாகிறான்.

குடும்பப் பற்று நாட்டுப்பற்றாக மலர்கிறது, நாட்டிலுள்ள புரையோடிப்போன பகுதிகளைப் பார்க்கும்போது! அவனுடைய இலட்சிய எல்லை விரிகிறது! சொர்க்கம் என்றும், பாவமன்னிப்புச் சீட்டு என்றும் கூறி ஏமாற்றும் அரசாங்க விருதுபெற்ற சாமியார்களின் போலிச் செயலை ஊர் முழுதும் பரப்புகிறான், பண்களில்!

அரசாங்கம் சீறுகிறது. ஆரம்பத்தில், எந்தக் குடும்பத்தில் அவன் லட்சியம் குறுகிக் கிடந்ததோ — அந்தக் குடும்பம் — அவன் குடும்பம் சீரழிக்கப்பட்டது; ஆம்; அவன் தங்கை கற்பழிக்கப்பட்டாள்! தங்கையின் காதலன்



கோர உருவாக்கப்பட்டான். மதிவாணன் ராஜத்துரோகியானன்; 'நாத்திக'னனன்!

என்றாலும், மதத்தின் பெயரால் மக்களை வாட்டும் மதோன்மத்தர்களின் பொய்த்திரை விலகுமட்டும் போராடினன்! கடைசியில் வெற்றியும் பெற்றான்!

— இத்தகைய ஒரு 'இலட்சிய பாத்திரத்தை' நாம் 'சொர்க்கவாசல்' சினிமாப்படத்தில் சந்திக்கிறோம். சாதாரண மனிதனின் ஆசாபாசங்களையும், அவனை நாட்டுப் பற்றுக் கொண்டுவிட்டால் அந்த 'ஆசைகளை'த் துறந்து லட்சிய முகட்டை நோக்கி எப்படிப் பறக்கிறான் என்பதையும் அப்பாத்திரம் அழகுறக் காட்டுகிறது, பார்ப்போருக்கும் இலட்சியப் பற்றை ஊட்டும்படி அழகுற அமைந்த மதிவாணன் பாத்திரம் அண்ணுவின் பேனா படைத்த, காலத்தால் அழியாத பாத்திரங்களில் ஒன்றாகும்!

அரங்கிலே அவரது தீரன்!

நாடக மேடையில் வாய் தவறி விழுந்துவிட்ட சொற்கள் விபரீத பொருளைத் தந்துவிடும்; அதோடு பேசுபவனின் திறமையைக் குறைத்துக் காட்டும். ஆனால், வாய் தவறி வந்துவிட்ட சொற்களுக்குப் பொருத்தமான சமாதானம் கூறி, பொது மக்கள் பாராட்டுதலைப் பெறுதல் ஒரு தனித் திறமையாகும்.

அந்தத் திறமையை முழுக்க முழுக்கப் பெற்றவர் அறிஞர் அண்ணா ஆவார்கள்.

ஒரு தடவை, சென்னை ஒற்றை வாடைக் கொட்டகையில் நடந்த 'சந்திர மோகன்' நாடகத்தில் வழக்கம்போல் அண்ணா காகபட்டர் பாத்திரமேந்தி நடித்துக் கொண்டிருந்தார்.



மராட்டிய மாவீரன் சிவாஜியின் சரித்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்ட அந்நாடகத்தில் காகபட்டரும் அவரது முக்கிய சீடனும்உரையாடிக் கொண்டிருக்கும் கட்டம். உரையாடலின்போது காகபட்டர் சீடனைப் பார்த்து,

"ஏண்டா மண்டு! கிருஷ்ணனுக்குப் பதிவிரதைகள் யார் யார்?"

—என்று கேட்கிறார்.

அதற்குச் சீடன், "பாமா...சுமத்திரை...." என்று கூறிக் கொண்டே போகிறான்.

சீடன் கிருஷ்ணனின் மனைவிகள் பாமா, ருக்மணி பெயர்களைச் சொல்லுவான் என்று எதிர்பார்த்த காகபட்டர், சீடன் ஏதேதோ சொல்வதைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறார். உடனே சீடனை இடைமறித்து,

"டேய், டேய்! நிறுத்தடா! அவர்களெல்லாம் அவருக்கு எக்ஸ்ட்ரா...!"

—என்று ஆங்கிலச் சொல்லைக் கடைசியில் கூறிவிட்டார் காகபட்டர் வேடத்திலிருந்த அண்ணா! உடனே நாடகம் பார்த்துக் கொண்டிருந்தோர் சிரிக்க ஆரம்பித்தார்கள்!

அண்ணா அவர்கள் அந்த தவற்றினின்றும் தன்னைச் சமாளித்துக்கொள்ள முயன்றார். "ஏண்டா, மண்டு! குரு என்ன புதிதாக ஆங்கிலம் பேசுகிறாரே—என்று பார்க்கிறாயா?" — என்று சீடனைப் பார்த்துக் கேட்கிறார்.

"ஆமாம் சுவாமி! எப்பொழுது, எப்படி ஆங்கிலம் கற்றுக் கொண்டீர்கள்?' — என்று அண்ணாவுக்குத் தகுத்தாற் போல் சீடனும் கேள்வி கேட்டான்.

"நமது நாட்டுக்கு இப்போ புதிதாக பரங்கியாள் வந்திருக்காளே பார்த்தியோ! அவாள்ட்டேயிருந்து இப்போதான் கொஞ்சம் கொஞ்சமாக படித்து வருகிறேன்." — என்று கூறினார் அண்ணா.

ஆங்கிலேயர்கள் முதன்முதல் சந்தித்த ஜஹாங்கீரின் பேரராகிய ஔரங்கசீப்பின் அரசியல் எதிரியாம் மாவீரன் சிவாஜி காலத்திலேயே ஆங்கிலேயர்கள் இங்கு வந்து விட்டார்கள் என்ற வரலாற்று உண்மையைப் பயன்படுத்திக் கொண்டு, தான் தவறிச் சொன்ன ஆங்கிலச் சொல்லுக்கு சமாதானம் கூறிய அண்ணாவின் நுண்ணறிவையும் சமயோஜிதத்தையும் நாடகம் பார்க்க வந்திருந்தோர் அத்தனை பேரும் வியந்து பாராட்டினர்!

காதல் கொண்ட காரணம்



கொண்ட காதல் பெண்ணே டென்றுரை,
கூறுதலிற் புதுமை வேண்டா;
கொண்ட காதல் ஆணே டென்றுரை,
கொள்ளுதலிற் புதுமை ஒன்று
உண்டென் றுரைக்கத் தலைவனின சிறப்பு,
ஒத்ததாய் இருத்தல் வேண்டும்;
பண்டைநாள் புலவரெல்லாம் பக்தியை காதலொடு
படைத்ததுபோல் இவ்வழியும் ஒக்கும்!

ஈசனிடம் பக்தர்கள் எதைக்கண்டு மயங்கி
இதயத்தை விற்றனர்? எதிரிகள்
நாசத்தை ஈசன் நடத்திக் காட்டியதால்,
நலம்செய் தாரென் றல்லவோ?
பாறத்தை வளர்த்துநான் அண்ணவிடம் காதல்
பக்தி கொண்ட காரணம்
தேசத்தைக் காக்கப் பகைவரை அழித்துத்
திருவிடத்தை மீட்பதி லன்றே?

எடுத்துரைக்க ஆங்கிலம், இறைக்கு வடமொழி
என்றெல்லாம் கூறித் தமிழைத்
தடுத்தும், தாழ்ந்தமொழி யென்றும், பேசத்
தகுதி யற்றவொன் றென்றும்
கெடுத்து நின்றப் போலிக் கும்பலினைக்
கெடுத்துத் தமிழினிமை காட்ட
அடுக்குமொழி தொகுத்து அழகோடு எளிமையும்
அண்ணு புகுத்தியதா லன்றே!

குள்ளமான உருவம் கொடுமையில் லாமுகம்
குறையாத நெற்றிநரும் நாட்டின்
பள்ளிவாழ்ச் செல்வரின் மனம்வாழ்த் தலைவன்
பார்க்கப். பேசப், பழக,
எள்ளி உரையாடி எதிரிகளே மாய்க்க
எல்லாம் உள்ளவராய்,, எழுத்தாளர்
அள்ளிப் பருகும் ஊற்றுரு, அண்ணு
அவதரித் திருப்பதா லன்றே?



சக்தி கிருஷ்ணசாமி

சட்ட மன்றத்தில் அண்ணா!



'சட்ட மன்றத்திலே இவர்கள் சென்று சாதிப்பது என்ன?'—'சட்ட சபையைப் பொது மேடையாகக் கருதிக் கொண்டு வருகிறார்கள். விரட்டும் வரட்டும்!'—என்றெல்லாம் 'வரவேற்பு'க் கூறினர் சிலர்!

பதினைந்து கழகத் தோழர்களுடன் சட்ட மன்றத்திற்குள்ளே நுழைந்தார், அறிஞர் அண்ணா.

தன்னுடைய முதற் பேச்சை சட்ட மன்றத் தலைவர்கொடுத்த நேரத்திற்குள் பேசி முடித்தார்!

பத்திரிகைகள் பாராட்டின, சட்டத்தின் நல்ல தன்மைக்கு அடங்கிப் போகும் பண்பைக் கண்டு!

'ரயிலில் பலர் நிற்க ஒருவர் படுத்திருப்பார். அரசியலும் பெரிய கட்சி என்பதற்காக நியாயம் கடந்த செயல்களைச் செய்பவிடாது, ரயிலில் படுத்திருப்பவர் காலை மடக்க சொல்லி நிற்பவரை உட்கார சொல்லும் மனிதரைப்போல் அக்கட்சியை அப்படித் தட்டிக்கேட்க வேண்டும், சட்ட மன்றத் தலைவர்' — எனும் கருத்தைச் சொன்னார், சட்டமன்றத்திலே! சட்ட மன்றம் மகிழ்ந்தது.

சட்டமன்றச் செய்திகளை அது நாள் முதல் ஆர்வத்துடன் தேட ஆரம்பித்தனர் மக்கள்.

அடுத்து 1957 ஜூலை 4ந் தேதி அறிஞர் அண்ணா பட்ஜெட் விவாதத்தில் பேசும்போது துண்டு விழும் பட்ஜட், சர்க்கார் வைத்துக் கொண்டிருக்கும் மகத்தான ஆயுதம்—என்ற கருத்தை விளக்கிப் பேசினார்.

சட்ட மன்றம் அன்று கருத்து வெள்ளத்தில் ஆழ்ந்தது!

ஜூலை 17-ல் கல்வி மசோதா வின்போது அண்ணா அவர்கள் மிகப் பெருந்தன்மையுடன் 'கல்வித்துறையின் அடிப்படைக் கொள்கையை சரியான முறையில் வகுத்துக்கொண்டு அதற்கு நிதி அதிகம் தேவையென்றால் கூடுதல் வரிபோட நிச்சயமாகத் தயங்க வேண்டாம்' — என்று குறிப்பிட்டார்கள்!

அண்ணாவின் பெருந்தன்மை அன்று அமைச்சர்களின் உள்ளத்தில் ஒரு நல்ல 'சலனத்'தை உண்டாக்கியிருக்கும்!

ஜூலை 20-ந் தேதி அரிசனமான்யத்தின்மீது பேசும்போது காலைச் சுற்றியிருக்கும் விஷப் பூச்சிகளைப்பற்றி நினைப்பதை விட அவை இளம்பிஞ்சுகளை அழிப்பதுதான் முறையென்று குறிப்பிட்டார்.

அமைச்சர் கக்கன் இந்த உதாரணத்திற்கே அன்று முழுதும் பதில் தந்து கொண்டிருந்தார்!

* ஜூலை 26-ந் தேதி பேசும்போது 'கோ-எக்ஸ்சிடென்ஸ்'—எனும் ஒத்துப்போகும் கொள்கை உலக நாடுகளுக் கேற்றது. கொழுத்த பணக்காரனும், கும்பி காய்ந்த ஏழையுமிருக்கும் இந்த நாட்டு உள்விவகாரங்களுக்கேற்ற கொள்கையல்ல' — என்ற பொதுமைக் கருத்தை விளக்கினர்.

தொழிலாளர் உலகம் பேருவகை கொண்டது!

* முதுகுளத்தூர் கலவரப் பிரச்னை பற்றி அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக விளக்கம் தந்தார் அக்டோபர் 30-ந் தேதி!

அரசியல் ராஜதந்திரிகள் மகிழ்ந்து வியந்தனர், அண்ணாவின் நல்ல — மூன்றுவது வழியைப் பார்த்து!

* நவம்பர் 5-ந் தேதி சமுதாய நலத்திட்டங்கள் பற்றி அண்ணா பேசும்போது, 'இந்த சமுதாய நலத்திட்டங்கள் நம் கிராமப் பஞ்சாயத்துக்களை அழித்துவிடுமோ — என அஞ்சுகிறேன்'—என்று குறிப்பிட்டார்.

கிராம மக்கள் தங்கள் குரல் சட்டசபையில் ஒலிப்பதுகண்டு மகிழ்ச்சியடைந்தனர்!

* நவம்பர் 11-ந் தேதி படை எரிப்பு தடுப்புச் சட்டத்தை எதிர்த்து 'இச்சட்டம் தீதானது, தேவையற்றது, கொடுங்கோன்மைக்கு வழிவகுப்பது'—என்று முழக்கமிட்டார்.

தான் ஆதரிக்கிற காங்கிரசாரின் சட்டசபையில் தன்னை ஆதரித்துப் பேச—நன்றியுணர்வுடன் பேச—'ஒரு அண்ணா' இருக்கிறாரே என்று பெரியாரின் அடிமனதில் நல்ல எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கும் அன்றைய பேச்சு!

* 1958 பிப்ரவரி 13-ம் தேதி காங்கிரஸ் ஆட்சியின் அடக்கு முறையைக் கண்டிக்கும்போது, "கையில் ரத்தக் கறையுடன், வாயில் ஜனநாயகம் பேசும் உங்களை உலகம் எடைபோடத் தப்பாது!" — என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

அடக்குமுறை கண்டு அச்சமுற்ற பெருமக்கள் சட்டமன்றத்தில் தம் குரல் கேட்கக் கண்டனர்.

மார்ச் 8-ம் தேதி பட்ஜெட் விவாதத்தில் 1—மணி நேரம் பேசினார் அண்ணா!

பட்ஜெட் விவாதத்திற்குப் பதில் தரவேண்டிய நிதியமைச்சர் அன்று தன்னுடைய 1மணி நேரப் பேச்சில் திராவிடஸ்தானைப்பற்றி ஏறத்தாழ ஒரு மணி நேரம் பேசினார்; ஆம்; ஒரு மணி நேரம் பேசினார்!

* மார்ச் 11-ம் தேதி ஆட்சி மொழி பற்றிப் பேசும்போது அண்ணாவின் கருத்துக்களைக் கேட்கத்தான் அந்த சபையே மகிழ்வு கொண்டிருந்தது.

இயற்கை வண்ண முகப்பு ஓவியம் உதவியவர்:

சாமுவேல்

கல்வியமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குத்தான் அன்று முழுதும் பதில் சொன்னார்.

* மதுவிலக்கு சட்டத்தைப் பற்றி மார்ச் 13ம் தேதி அண்ணா அவர்கள் 'எந்த நல்ல காரியத்திற்கும் எங்கள் ஒத்துழைப்பு உண்டு'—என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அமைச்சர் திரு. பக்தவத்சலம் அண்ணாவின் போக்கைப் பாராட்டினார்.

* மார்ச் 17-ந் தேதி சமுதாய நலத் திட்டத்தைப் பற்றிப் பேசினார். 'சமுதாய நலத் திட்டங்கள் காங்கிரஸ்காரர்களுக்கான விளம்பரச்சாவடியாகப் பயன்படுகிறதே'—என்று நாட்டின் நிலையை எடுத்துப் பேசினார்.

* அடுத்து ஏப்ரல் 10ந் தேதி பேசும்போது பேரறிவாளர்களுடைய கருத்துக்களைச் சொல்லி எதிர்க் கட்சிகள் நடத்தப்பட வேண்டிய முறை பற்றியும், நாடு முன்னேற வேண்டிய வழிகள் பற்றியும் பேசினார் அண்ணா!

* பின்னர் மார்ச் 18-ல் போலீஸ் மான்யம் பற்றிப் பேசிய அண்ணா அவர்கள் 'ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சிகள் நடத்துகிற கிளர்ச்சிகளை நல்ல முறையில் கவனித்து ஆட்சியாளருக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக்கொண்டால் போதும்! இப்படிப்பட்ட துறைகளில் மேல் நாட்டில் என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும்'—என்ற அரிய ஆலோசனை தந்தார்.

மார்ச் 24-ந் தேதி நடந்த அரிசனமுன்னேற்றத்துறை பற்றிய விவாதத்தில் 'ஓடக்கூடிய குதிரைக்கு அதன் உடலில் தழும்பு ஏறுமளவுபடி சவுக்கு தந்து ஓட்டுவதுபோல எல்லோரும் ஆதரவு தரும் ஒரு நல்ல காரியத்தை மேலும் நல்ல முறையில் செய்ய வேண்டும்—என்ற அரிய தோர் கருத்தைத் தந்தார்.

* மார்ச் 26-ந் தேதி நீர்ப்பாசனத்துறை பற்றிய விவாதத்தில் 'குறையில்லாத முறையில் எல்லாக் கட்சி ஆதரவுடனும் திட்டமிட்டு, அதை நிறைவேற்ற வழிவகை செய்து கொள்ளுங்கள்'—என்ற ஆலோசனையைத் தந்தார்.

* செப்டம்பர் திங்கள் 10-ந் தேதி உணவு நிலைமைபற்றி சட்டமன்றத்தில் பேசும்போது 'உணவுதானியத் துறையைப் பதுக்கல்காரர்களின் லாபவேட்டைக் காடாக்காமல் மக்களுக்கு நியாயமான முறையில் பயன்படும்படி செய்யவேண்டும்'-என கேட்டுக்கொண்டார்.

செப்டம்பர் 18-ந் தேதி விவசாய வருமான மசோதாவின் மீது பேசும்போது 'வரி போட வேண்டியதுதான். ஆனால் இந்த வரியால் ஏற்படும் பயனை சாக்காக வைத்துக்கொண்டு நிலவுடமைக்கு உச்ச வரம்பு கட்டுவதை தடுக்கக் கூடாது—நிறுத்தக்கூடாது' — என்னும் ஏழை விவசாயிகளின் குரலை வலியுறுத்தினர்.

* செப்டம்பர் 24-ந் தேதி ஊராட்சி மன்றங்களுக்கான மசோதா பற்றிப் பேசுகையில் கிராமத்திலுள்ள நல்லறிவை கிராமத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தினர் அண்ணா! இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போதுதான் 'அண்ணாவின் சாமர்த்தியத்தை நான் பாராட்டுகிறேன்'என்று—நிதியமைச்சர் கூறினார்.

* 1959 பிப்ரவரி திங்கள் 9-ம் தேதி கவர்னர் பேருரை மீது பேசிய அண்ணா அவர்கள் 'நாம் இரண்டு சக்திகளாகப் பிரிந்து நாட்டை ப்பலப்படுத்த வேண்டும்'—எனும் தம்முடைய நல்லாசையைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* பிப்ரவரி 17-ந் தேதி ஆபாச விளம்பரத்தைத் தடுக்கும் சட்டத்தைத் எதிர்த்து மக்களின் குரலே சட்ட மன்றத்திலே பிரதிபலித்தார்கள்.

மார்ச் 10-ந் தேதி —இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசினார். அன்றைய விவாதம் மிகச் சுவையாக இருந்தது. உலக நாடுகளின் உதாரணங்களைக் காட்டி தொழில் துறையில் நமக்குள்ள பலவீனத்தைச் சுட்டிக்காட்டினார்!

மார்ச் 19-ந் தேதி நீர்பாசனத் திட்டத்தைப் பற்றிப் பேசும் போது 'மத்திய சர்க்காரோடு வாதாடி வரண்டு கிடக்கும் பகுதிகளுக்கு வளம் அளிக்க வேண்டும்! — என்று கேட்டுக் கொண்டார்!

அண்ணா பேசும் போது மாத்திரம் வெகு ஆவலுடன் மந்திரிகள் குறுக்கிடுவதும், அதற்கு அண்ணா தகுந்த முறையில் பதிலளிப்பதும் சுவையான நிகழ்ச்சிகளாகும்.

அதேபோல் நம் கழகத்தைப் பற்றி நிமிடத்திற்கு நாலு தடவை நினைத்து உச்சரித்துப் பேசும் மந்திரிகளின் பேச்சும், அப்போது அண்ணா குறுக்கிட்டுப் பேசுவதும் சட்டசபையிலே போய் பார்த்துப் அனுபவிக்க வேண்டிய சுவையான நிகழ்ச்சிகளாகும்.

இப்படி தொடர்ந்து பேசினார்; பேசுகிறார்; பேசுவார்!

சட்டமன்றத்திலே ஒலிக்கும். அறிஞர் அண்ணாவின் குரல், ஏழைகள், உழவர்கள், தொழிலாளி, பாட்டாளி; படித்தவர்கள், படிக்காதவர்கள்—அத்தனை யத்தனை பொதுமக்களின் உரிமைக் குரல்!

சட்டசபைலன் சுவையையும் தரத்தையும் உயர்த்திய அந்தக் குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும்!

இந்தக் கருத்தோவியம்...

விடை

1. தீ பரவட்டும்!
2. நல்லதீர்ப்பு
3. திராவிடர் நிலை
4. உலகப் பெரியார் காந்தி
5. ராஜாபார்ட் ரங்கத்துரை
6. மறுமலர்ச்சி
7. பணத்தோட்டம்
8. எது இசை?



இந்தக் கருத்தோவியம்....

அறிஞர் அண்ணவின் எழுத்தோவியங்களிலிருந்து சில சுவையான பகுதிகளைக் கீழே தந்திருக்கிறோம். அவைகள் எந்தெந்த நூலில் இருக்கின்றன என்று கண்டுபிடிக்க முடிகிறதா உங்களால்? அப்படிக் கண்டுபிடித்ததை 35-ம் பக்கத்தில் இருக்கின்ற விடையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

★ ★

1

"கலையிலே தோய்ந்து, அதிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு கம்பனின் இராமாயணமும், சேக்கிழாரின் பெரிய புராணமும் கலை என்று கருதும் அன்பர்கள், ஒரு பெரியாரின் போரால், ஒரு அண்ணாதுரையின் அனலால் அக்கலை அழிந்துபடும் என்று கருதுவரேல், அவ்வளவு சாமான்யமானது கலையாகாது, அத்தகைய கலை இருத்தலுமாகாது எனறுரைக்க ஆசைப்படுகிறேன். கலையைக் குலைக்கும் செய்லல்ல எமது செயல். கலையிலே புரட்சி உண்டாக்க விழைகிறோம்—தக்க காரணங்களோடு!"

2

"நமக்குக் காமரசம் கலவாத, மதம் கலவாத, மதியை வளர்க்கும் இலக்கியங்கள் தேவை. காலத்துக்கும் கருத்துக்கும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் தொடர்புள்ள ஏடுகள் தேவை.

"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும் என்ற மனப்பான்மை தேவை. அருள் மட்டும் கேட்கும் ஆண்டவன் தேவை. கோயில், குருக்கள், குடும்பம், கூத்தி, மானியம், அதிர்வெடி கேட்கும் ஆண்டவன் வேண்டாம், நமக்கு! கோயிலுக்கு வெளியே வறுமை, கொடுமை, இல்லாமை—கோயிலிலே மலை போன்ற செல்வம் என்றிருக்கும் நிலையற்ற நிலைமை வேண்டாம்."

3

"பணக்காரன் குளம் குட்டைகளுக்குச் சமமானவன்; முதலாளி ஊற்றுக்குச் சமமானவன். மழை பெய்தால்தான் குளம் குட்டைகளில் நீர் இருக்கும்; இன்றேல் வறண்டு விடும். ஆனால், ஊற்றோ என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இத்தகைய பேதம் இருக்கிறது பணக்காரனுக்கும்—முதலாளிக்கும்."

4

"மோட்டினைப் பூந்தோட்டமாக்க விதை கொண்டு வந்த வேளையில், பாம்பொன்றினால் இறந்த தோட்டக்காரனைக் கண்டு புலம்புவதும், பாம்பை அடித்துக் கொல்வதும் மட்டுமல்ல குடும்பத்தாரின் கடமை, இறந்து கிடப்பவரின் கரத்திலே உள்ள விதையை எடுத்துப் பார்த்து விம்மி விம்மி அழுதான பிறகு இவைகளைத் தூவி இங்கு பூந்தோட்டம் காண விரும்பினர், அவர் மறைந்தார். விதையோ இருக்கிறது, இதோ இதைத் தூவுவேன், பூந்தோட்டம் காண்பேன். அந்த உருவில் அவரைக் காண்பேன், அந்த மணத்திலே அவர் பெருமை கண்டு மகிழ்வேன், அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்று கூறி அதை நடைமுறையில் ஆற்றலேயாகும்."

5

"ஊங்களை, 'வெற்றிலைக் கடையை நடத்தினால் அதனாலே என்ன? நான் கம்பெனியில் உழைத்தேன், அதனால் அங்கு உயர்ந்தேன், கம்பெனி முதலாளியிடம் மரியாதையும், அன்பும் காட்டினேன், அதனால் அவர் என்னை ஆதரித்தார்—பாராட்டினர். இப்போது, அதே முறையில் நடந்துகொள்கிறேன் இங்கு—அதனால், கடைவீதியில், நாலு பேர் என்னை நல்லவன் என்றுதான் சொல்கிறார்கள்; இங்கு இருக்கவேண்டிய முறைப்



எந்தப் புத்தகத்தில்...?

படி, வெற்றிலே வாடாதபடி பார்த்துக்கொள்கிறேன், பாக்குக் கெடாதபடி பார்த்துக் கொள்கிறேன். சோடா கேட்டால், ஐஸ் கலந்து தரட்டுமா என்று கேட்கிறேன் — கடையைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துக் கொள்கிறேன்–இதிலே புதிய சிரமமோ கவலையோ காணேமே! பாகவதராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடை நடத்தினாலும், நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும், நல்லவனுக்கு, திறமைசாலிக்கு, உண்மை உழைப்பாளிக்கு, அவன் எந்த வேலையைச் செய்தாலும், அதிலே அவன் ஒரு குறிப்பிடத்தக்கவனாவான் — இது இயற்கை நீதி! இதை, பொருமை, பொச்சரிப்பு, கலகம், எதுவும் மாற்றாது! நாடகக் கம்பெனியில், ராஜபார்ட்டாக இருந்தேன், இப்போது கடைவீதியில், என்னே வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர் சங்கத்துக்குக் காரியதரிசியாக்கித்தான் இருக்கிறார்கள். என்றான்.

6

சொந்த நாட்டிலே சோற்றுக்கு வகையின்றி, தங்க ஓடு போட்ட திருமண்டபத்தில் திருநடனம் புரியும் தில்லையானும், வைரக்கற்கள் இழைத்த விமானத்தில் படுத்துறங்கும் அரங்கநாதனும், வைர நாமத்தைச் சூட்டிக் கொண்டிருக்கும் வரதனும், வெள்ளி ரிஷப மேறும் சிவனும், தங்கமயில் முருகனும் தங்கியிருக்கும் தாய் நாட்டில் தாங்கள் வாழ்வதற்கு வழியின்றி, வெளிநாடு செல்லும் அந்தப் பரிதாபத்திற்குரிய தமிழர், கப்பல் தட்டில் நிற்கையில் இந்த நாட்டை வாழ்த்தியிருப்பார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? கண்ணீரைக் கடல் நீரில் கலக்கிய அந்தக் கதியற்றவர்கள் 'அஷ்ட ஐஸ்வரியங்கள் உன்னிடத்தில் இருந்து என்ன? நாங்கள் அனுதைகள் தானே; வற்றுத நதிகள் இங்கே பாய்ந்து என்ன? எங்கள் வாழ்க்கை பாலைவனம்தானே! நஞ்சையும் புஞ்சையும் இருந்தென்ன? நாங்கள் பஞ்சைகள்தானே? நாங்கள் வாழ வழி செய்யாமல் வெளிநாட்டிற்கு எங்களைப் போகச் செய்யும் தமிழ்நாடே! எங்களுக்குச் சோறில்லை சொர்ணம்விளையும் இந்த நாட்டில். எங்களை இக்கதியில் விடும் நீ இருந்தென்ன? போயென்ன? அக்ரமத்திற்கு இடமளித்து அனுதைகளைத் துரத்தும் நீ அழிந்துபடு! அழிந்துபடு!!' என்று சபிக்காமலிருப்பரா? வெளி நாட்டிற்குக் கூலியாகச் செல்லும் இழிநிலை, பாடுபட்டும் பசியாற உணவின்றித் திகைக்கும் தேய்நிலை நீங்க வேண்டாமா? வர்ணாசிரம தர்மம் என்ற வகையற்றவர் பேசும் ஏற்பாடு வேறென்றுமில்லை. சூது நிறைந்த ஓர் சுரண்டல் இயந்திரம்தான்! அதை முறியடித்தால் பாடுபடுபவன் பதைக்க வேண்டியதில்லை; உழைப்பு வீணாகாது: உலுத்தர் உயரமாட்டார். சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி என்ற தத்துவத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியும்.

7

ரூப்சந்துகளும், ஜீவன்லால்களும், ஷிவ்நாராயண்களும், மூல்சந்துகளும் சென்னையில் முகாம் அமைத்துக்கொண்டு, நிலக்கடலை முதற்கொண்டு வைரம் வரை, சகலவிதமான பொருள்களையும், ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்யும் வசதி பெற்றிருப்பது போல, இங்குள்ள தனபாலர், அண்ணாமலை, ஆறுமுகம் முதலியோருக்கேனும், வடநாட்டிலே, இடம் இருக்கிறதா என்பதை எண்ணிப் பாருங்கள.

8

சேரனுடைய கொலுமண்டபத்திலே கொண்டாட்டங்களின்போது, இசைவாணர்கள், "வாதாபிகணபதே" பாடவில்லை.

சோழன் களிக்க, "சுனை சுனை" பாடவில்லை.

பாண்டியன் பரிபாலனத்தின்போது "பலுகவே ஏமீனை" என்று பாடவில்லை.

மூவரசர்கள் வாழ்ந்த நாட்களிலும், அதற்கு முன்பும், தியாகய்யர், சாஸ்திரி, தீட்சதர் கிருதிகள் பாடவில்லை இசையே இல்லையோ? உண்டு! தமிழ் இசை பாடப்பட்டது. அந்த இசை இன்று எங்கே?



கண்டு பிடியுங்கள்!





சிறையில் அணை!

சிறை!

சிந்தை மகிழவைக்கும் இலட்சியப் பயணத்திலேயுள்ள சிங்காரச் சோலை—துன்பத்தையும் இன்பமெனக் கொள்ளும் இந்த விடுதலை வீரருக்கு!

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை'—எனும் இலக்கிய ஏட்டிலே தூங்கிக் கிடந்த சொற்றொடரை இலட்சிய வீரர்கள் சிறைக் கோட்டத்தைப் பார்க்கும் போதெல்லாம் கூறிடச் செய்த பெருமை அண்ணு அவர்களுக்கே உரியதாகும்.

'கொஞ்சம் பயந்த உள்ளம் எல்லுள்ளம்' —என்று அவர் அவையடக்கத்தோடு கூறிக் கொண்டாலும், நமக்கும்—நாட்டை ஆள்வோருக்கும் தெரியும், அவருள்ளம் எதையும் தாங்கும் எ.ிகு உள்ளமென்று!

ஏனென்றால், அவர் கற்றுத் தேர்ந்த அரசியல் பள்ளி, பெரியார் பள்ளி!

அரசியலில் எதிர் நீச்சல் அடித்தவரிடம் — 'சிறைப் பறவை' என்று பெயரெடுத்த வரிடம் பாடம் கேட்ட அண்ணு அவர்களை சிறைச் சாலை என்ன செய்யும்?

முதன் முதல் அவரை 1937—ல் சிறைக்கோட்டம் கூவியழைத்தது. இந்தி எனும் மந்தி மொழி வேண்டாம்—என்று முழங்கிய செந்தமிழர் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியதால் அந்தச் சிறை! மங்காத தமிழுக்கு இன்னல் என்றால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு—என்று சங்கநாதம் முழங்கியதற்காக —இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக ஆறு மாதச் சிறைத் தண்டனை பெற்றார்.

* * *

1948—ம் ஆண்டு—முதலமைச்சராயிருந்த ஆச்சாரியாருக்குக் கறுப்புக்கொடி காட்ட திராவிடர் கழகம் முடிவு செய்யக் கூடியது. நூறு பேருடன் அமர்ந்திருந்த அறிஞர் அண்ணு அவர்களை மறுபடியும் சிறைச்சாலை விழுங்கிற்று.

* * *

மீண்டும் 1951—ல் சிறைக் கோட்டம் அண்ணுவை உள்ளே வரவழைத்துக் கொள்ள விரும்பிற்று! 'ஆரிய மாயை' என்ற தமிழக வரலாற்று நூலைத் தடை செய்து, அதை எழுதிய தென்னகத்துப் பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு ஆறுமாத சிறைத் தண்டனை வழங்கிற்று

* * *

1953.....தமிழகம் விழிப்பு பெற்ற நேரம்! மும்முனைப் போராட்டம் நடந்த காலம். நாத்தழுக்காக நம்மைநோக்கி 'நான்சென்ஸ்' என்று உறுமிய பண்டிதருக்கு கண்ணியத்தைப் போதிக்கவும், ஆச்சாரியார் புகுத்திய குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து உரிமையைக் காக்கவும், வடநாட்டுப் பண முதலையின் பெயரால் இருக்கின்ற டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்றவும் — மூன்று முனைகளிலே போராட்டத்தை உருவாக்க அதற்கென திட்டங்கள் தயாரித்துக் கொண்டிருந்த நேரத்தில், அறிவகத்திலேயிருந்து கடத்திச்செல்லப்பட்டார். தலைவர்கள் உள்ளே சென்ற பிறகும் போராட்டம் நில்லாது நடந்தது. ஆனால், பழிவாங்கிட விரும்பிய சர்க்கார் அவரை மூன்று மாதங்கள் சிறைக் கோட்டத்தினுள் தள்ளி வைத்தது!

* * *

1958! நேருவுக்கு சென்னையில் கறுப்புக் கொடி காட்டிய உரிமை நாளுக்கு முதல் நாள்! அண்ணுவைச் சிறைச்சாலை அழைத்தது. பாதுகாப்புக் கைதியாக வைத்துக் கொண்டது! ஆனால் கறுங்கொடி காட்டும் நிகழ்ச்சி வெற்றிகரமாக நடந்தேறியது. ஆனாலும், அரசாங்கம் அண்ணு அவர்களுக்கு 15 நாட்கள் சிறைத் தண்டனை விதித்து இரண்டு நாட்களில் விடுதலை செய்து விட்டது!

* * *

இந்த 'சிறை வாழ்க்கை'கள் அவர் முன்னேற்றச் சுடரை அணைக்கும் ஈரக்காற்றல்ல; திறனை வளர்க்கும் தூண்டுகோல்!



எதிரேயுள்ள புகைப்படம் உதவியவர்: வையம்கலை வல்லுனர் திரு. கே. பி. சுந்தரம், ஜி. சி. டி.


முரசொலி
1959
Aykan

ஆங்கிலப் பேச்சின் பெருமை!

அறிஞர் அண்ணா அவர்களின் தமிழ்ப் பேச்சைக் கேட்டவர்கள், மட்டு மல்ல; ஆங்கிலப் பேச்சைக் கேட்டவர் கள்கூட அயர்ந்து நின்று விடுவார்கள். தனக்கென தமிழிலே ஒரு நடையை ஏற் படுத்திக் கொண்டு, கேட்கின்ற மக்கள் சலிப்படையாது கடல்மடை திறந்தது போல தமிழில் சொற்பொழிவு நிகழ்த் தும் அவருடைய ஆங்கிலப் பேச்சின் பெருமையை விளக்கும் சுவையான நிகழ்ச்சி வருமாறு:—

இரண்டாவது வட்டமேஜை மாநாடு முறிந்து முடிவுற்ற நேரம். இந்தியப் பிரதிநிதிகள் தோல்வியை அணைத்துக் கொண்டு திரும்பினர், அப்போது! அம் மாநாட்டின் முடிவுகளை எடுத்துச் சொல்ல, சென்னை நேப்பியர் பூங்காவில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. அக் கூட் டத்தில், வட்டமேஜை மாநாட்டிற்கு சென்று திரும்பிய சர். ஏ. இராமசாமி கலந்து கொள்ளவிருந்தார். அவருடைய ஆங்கிலப் பேச்சு ஆங்கிலேயர்களா லேயே பாராட்டப்பெற்றது.

அத்தகைய ஆங்கிலச் சொல்லின் செல்வர்முன் அறிஞர் அண்ணாவும் பேசி னர்; ஆம்; ஆங்கிலத்தில் பேசினர், அக் கால வழக்கப்படி! அண்ணாவின் ஆங்கில மொழி அறிவை யும், சொற்கள் விழும் அழகை யும் கண்டு வியந் தார், ஏ. இராம சாமி!

அப்போது இங் கிலாந்து சென்று வெற்றியுடன் திரும்பி வந்த இந் தியக் கிரிக்கெட் குழுவினரையும் அதே நாட்டிற்குச் சென்று தோல்வி யோடு திரும்பி வந்த அரசியல் பிரதிநிதிகளையும் ஒப்பிட்டு 'அரசி யல் உலகத்து விவேகிகள் நமக்குத் தேடித் தராத வெற்றியை இந்திய நாட்டு விளையாட்டுக்காரர்களாவது தேடித் தந்தார்களே!' — என்று பேசி னர், அண்ணா! ஆம்; சர், ஏ. ராமசாமி முன்னிலையிலேயே பேசினர்; வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்களில் ஒருவர் முன்புதான் பேசி னர்; வட்டமேஜை மாநாட்டின் தோல்வி யைப் பற்றி, துணிவாக, அதில் கலந்து கொண்ட தலைவர் முன்பே பேசினர்; ஆங்கிலத்தில் அழகாக — நகைச்சுவை யுடன் அத்தோல்வியைக் குறிப்பிட்டுப் பேசினர். இளைஞரின் துணிவு கண்டு வியந்தார் ஏ. ராமசாமி! துணிச்சலான கருத்தைப் பதட்டமில்லாமல், வாய் பறை கொட்டாமல், நகைச்சுவையுடன், ஆங்கில மொழியில் கூறும் அண்ணாவின் திறன் கண்டு மீளா வியப்பில் ஆழ்ந்தார், அவர்!

இந்தக் கருத்தை ஒட்டித்தான் அன்று சர். ஏ. இராமசாமி அவர்கள் பேச வேண்டியிருந்தது! விளையாட்டுக்காரர் களுக்காவது குறிப்பிட்ட எல்லை யுண்டு, அரசியல் தலைவர்களுக்கு அது இல்லையே — என மிக மிக வருந்திக் கூறினர், அவர்!



கூட்டம் முடிந்த தும், இளைஞரான அண்ணா அவர் களை அழைத்து, அவருடைய ஆங் கில மொழிய றிவை மெச்சி, 'ஆங்கிலப் பேச் சில் எனது வாரிசு நீயாகத்தான் இருப்பாய்' — என்று கூறினா ராம், ஆங்கிலப் பேச்சுக்கு அகில உலகப் புகழ் கொண்ட டாக்டர். ஏ. இராமசாமி அவர்கள்!



கல்லக்குடியில் புறப்படத் தயாராக இருந்த ரயில் என் ஜின்முன் திடீர் என்று சென்று படுத்தீர்களே! நீங்கள் தண்டவாளத்தில் படுத்து, சில வினாடிகள் கழித்து, ரயில் என்ஜின் புறப்பட விசில்

அப்பா

அன்புடைய சகோதரா!

எந்த ஒன்றையும் மற்றவர் கட்டு முந்தி செய்வதில் ஆர்வ முடையவர் நீங்கள்! பள்ளி வாழ்க்கையில் இருந்த தங்களின் ஆர்வமிகுந்த செயற் திறன் அரசியல் வாழ்விலும் வளரத் தொடங்கியது. நல்ல முறையில், ஒரு பத்திரிகை வெளியிட ஆசைப்பட்டீர்கள். கடந்த ஆறு வருட காலமாக தங்கள் பத்திரிகை முரசொலி அந்த ஆசையைப் பூர்த்தி செய்து வருகிறது. நமது பத்திரிகைகள் மாற்றுக் கட்சிக் காரர்களும் வாங்கிப் படிக்கு மளவிற்கு இருக்க வேண்டு மென்று எண்ணுபவன் நான். அதைச் செய்கிறீர்கள். அவ் வப்போது பல புது முறைகளையும் எழுச்சிமிகு நடை கொண்ட கட்டுரைகளையும் வெளியிட்டு பத்திரிகை வளர்ச் சியையும், படிப்போர் ஆர்வத் தையும் வளர்ப்பதில் தாங்கள் கையாளும் முறையே தனித் தன்மை பெற்றதாகும். இது வரை முரசொலி செய்த தொண்டுகளுக்கு எல்லாம் சிகரம் வைப்பது போன்ற ஒரு செயலாகும், இந்தப் பொன்விழா மலர் வெளியீடு!

* * *

நமது அண்ணை

பொதுவாக, நமது இயக் கத் தோழர்கள் எல்லோருக் கும் முன்பே அண்ணாவை சந்தித்தவன் நான். அவருடைய கல்லூரி வாழ்க்கையிலே அவ ரைச் சந்தித்தேன். அப்போதே இத்த கைய நல்ல பேச்சா ளர் நமது சுயமரி யாதை இயக்கத்துக்கு அவசியம் என எண் ணியவன். அண்ணா வின் பொன்விழாக் கொண்டாட்டத்தில், இன்றைய இளைஞர் கள், எதிர்காலத் தலை வர்கள், பின்பற்ற வேண்டிய அண்ணா வின் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டு மென்ற நல்ல ஆசை யே இதை எழுதச் செய் தது. ஐம்பது வய தான அண்ணாவின், இருபத்தைந்து வருட பொதுத் தொண்டை நமது நாட்டுக்குத் தந்திருக்கிறார். நீங் கள் பொன்விழா நடத் தும் எண்ணத்தைத் துவக்கி வைத்தது கேட்டு அண்ணா உங் கள்மீது கோபித்துக் கொள்வார். இது உங் களுக்கு நன்கு தெரிந் திருந்தும் இப்பெரிய வேலையை நீங்கள் தைரியமாக செய்ய முன் வந்தீர்கள். நமது மும்மூன போராட்டத்தன்று, ஊதியதே! அதைக் கேட்டு, அங்கு கூடி இருந்த பதினாயிரக் கணக்கான மக்கள், பயந்து 'ஐயையோ' என்று அலறி, கண்ணீர் விட்டார்களே! என் ஜினும் உங்களைப் பயமுறுத்த தன் பயங்கரச் சக்கரங்களை உருட்டிக் கொண்டு இரண்டடி நகர்ந்ததே! அத்தகைய மயிர்க்கூச்செறியும் நிலை யில்கூட, நீங்கள் ஆடாது, அசையாது, நெஞ்சு நடுங்காது தண்டவாளம்மீது, பக்கத்தில் படுத்து இருக்கும் முல்லை சத்தியையும், மற்றவர்களையும் கடைக்





கண்ணால் பார்த்துக் கொண்டு தைரியமாக இருந்தீர்களே!

அன்று அச்செயலைச் செய்ய உங்களுக்கிருந்த தைரியத்தைவிட, அண்ணா மலர் வெளியிட இன்னும் அதிகம் தைரியம் வந்த பின்பே இதைச் செய்திருப்பீர்கள் என்று நான் திடமாக நம்புகிறேன். அண்ணா கோபித்துக் கொண்டாலும் என்ன; கடந்த பத்தாண்டு காலத்தில் நாம் எதைச் செய்தாலும், இச்செயல், இயக்கத்தையோ, அண்ணாவின் கருத்தையோ பாதிக்குமா என்று நன்றாக சிந்தித்தே செய்து வந்திருக்கிறோம். இனியும்அப்படித்தான் நாம் இருப்போம் என்பது அண்ணாவுக்கு நன்கு தெரியும். ஆதலால் தான் ஐயுற வேண்டிய தில்லை, இந்த நற்பணியிலே ஈடுபட!

* * *

அண்ணா பொன்விழா நாளில் நாம் சில சூளுரைகளை எடுத்துக் கொள்வோம். இது அண்ணாவின் கோபத்தை மாற்றிவிடும். அரசியல்வானில் அண்ணா பிரவேசிக்கும் முன்பு, எம். சி. ஏ. கட்டிடத்திலும், ஏனைய இடங்களிலும், சொற்போர் வீரராக இருந்தார். அப்போதும் கல்லூரி மாணவர்கட்குரிய ஆடம்பர வாழ்வு கிடையாது. அவர் நீதிக் கட்சிப் பத்திரிகை அலுவலகத்திலும், ராஜா பொப்பிலியின் துணைவராகப் பணி புரிந்த காலத்திலும், அண்ணா ஆடம்பரமற்ற வாழ்க்கையையே வாழ்ந்து காட்டினார், மாத வருமானத்தில் பாதியை ஆங்கில முறையில் உடை உடுத்துவதில், பெரு விருப்பம் கொண்ட மூன்று நண்பர்களுடன் நன்கு அவர் பழகினர் — டி. ஏ. வி, நாதன், சண்டே அப்சர்வர் பாலசுப் பிரமணியம், பி. சம்பந்தம் எம். ஏ. ஆகிய இவர்கள் எத்தனையோ முறை அண்ணாவை வற்புறுத்துவது உண்டு. ஆனால் அவருக்கு, அதில் ஆவலோ பற்றோ ஏற்படவில்லை. உடை சுத்தமாக இருக்க வேண்டுமேயன்றி, ஆடம்பரமாக இருக்க வேண்டியதில்லை என்பதே அவரின் முடிவு.

* * *

அடுத்து அவர் எந்த லட்சியத்தைக் கடைப்பிடித்தாலும் கடைசிவரை அதனோடு இரண்டற ஒன்றிக் கலந்து விடும் பண்பினர். இந்தப் பரீட்சையில், நமது நாட்டில் தவறிய மேதைகள் பலர் உண்டு. நமக்கு நன்கு தெரிந்த எந்தக் கட்சிப் பெரிய மனிதர்களை எடுத்துக் கொண்டாலும், இந்தப் பயங்கரப் பரீட்சையில், தேற முடியாதவர்களே அதிகம் காண முடியும். ஆக, அண்ணாவின் இலட்சியப் பற்றை நமதிபக்க இளைஞர்கள் பின் பற்ற வேண்டுமென்பது எனது ஆவல். இத்தகைய திட சித்தம் அவருக்கு ஆரம்ப முதல் இருந்து வருவதினால்தான், அவருக்கேற்பட்ட எதிர்ப்புகளை, இன்னல்களைத் துச்சமென மதிக்கும் பண்பு பெற்று, எதிர்ப்புக்களையே லட்சியப் பயணத்திற்குப் பயன்படும் வகையில் உபயோகித்துக் கொண்டு

அண்ணா பொன்விழா

வந்திருக்கிறார். இதுவரை! அண்ணா பொது வாழ்வில் நுழையும்போது நமது நாட்டின் பெரும்பகுதி குழப்ப நிலையில் இருந்தது. பொது வாழ்வில் பெரும்பான்மையான மக்களின் ஸ்திரமற்ற தன்மையைக் கண்டார். சிலர்தான் பெரியாரின் சொற்கேட்டு விழிக்க ஆரம்பித்தார்கள். இருந்தும், அவர்கள் ஏதோ ஒன்று நமது இயக்கத்தில் இல்லை என்று உணர்ந்தனர். ஆம்; "விடுதலை" உணர்ச்சியை மறந்தே விட்டார்கள் என்பதைக் கண்டார் அண்ணா! அதை அவர்கட்கு எந்த முறையில் சொல்ல வேண்டுமோ அம்முறையில் கூறினார். சொல்லும் திறனறிந்து சொல்கிற பண்பாலும் இன்று நமதியக்கம், மற்றவர்கள் கண்டு மதிக்கிற அளவுக்கு வளர முடிந்தது.

* * *

இந்தி எதிர்ப்பையும், பேச்சுக்கலையையும் ஆரம்ப காலம் தொட்டு கடைப்பிடித்து வந்தோம். இந்தியை மக்கள் வெறுத்தார்கள். அதை எதிர்த்தொழிக்கும் ஆசை இருந்தது. ஆனால் நடைமுறையில் என்ன செய்வது என்ற குழப்பத்தில் இருந்தனர். இதை உணர்ந்தார் அண்ணா! காஞ்சி ஏ. கே. டியை காஞ்சியில் அன்று இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டச் செய்தார் அண்ணா. தங்க வேலரை மாநாட்டின் முழுப் பொறுப்பை ஏற்கச் செய்தார். மொழி வல்லுனர்கள்—தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட பிரதேசங்களிலிருந்து அரசாங்க விருது பெற்ற பெரியார்களை எல்லாம் அதற்கு வரும்படி ஏற்பாடு செய்து, அவர்கள் அத்தனை பேருமே இந்தியை வெறுக்கிறார்கள் என்பதை இந்தியத் துணைக்கண்டம் முழுதும் அறியச் செய்தார். இம்மாநாட்டில் நியமிக்கப்பட்ட இந்தி எதிர்ப்புக் கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பான்மையானவர்கள் அதுவரை, சர்க்காரைப் புகழ்ந்து பழக்கப்பட்டவர்களே யன்றி, எதிர்த்து எதும் சொல்லத் தெரியாத 'சாதுக்கள்' இந்த 'சாதுக்கள்' கமிட்டியைக்கண்ட சர்க்கார் இவர்கள் என்ன செய்து விடுவார்கள் என்று அலட்சியப்படுத்தும் முறையிலேயே அக்கமிட்டியை அமைத்தார். பின்னர் மக்கள் ஆதரவு பெற்ற அந்த சாதுக்கள் படையை சமருக்கஞ்சாத வீரர் படையமைப்பாக மாற்றினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் புயலென எழுந்தது. போராட்டத்தின் முன் நின்று தானே முதலில் சிறை சென்றார். சாதுக்களை வீரராக்கி, இளங்காளைகளையும், தாய்மார்களையும், சிறைக்குக் கூட்டம் கூட்டமாகப் போகும்படி நாட்டுப் பற்றை—தேசீய உத்வேகத்தை உண்டாக்கிய பெருமை அண்ணாவையே சாரும்.

* * *

சிறந்த அறிவாளியான டாக்டர் பி. எஸ். பாலிகா, தான் எழுதிய சர்க்கார் வெளியீடு ஒன்றில் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்: '1935-ல் பொப்லி தலைமையில் நீதிக் கட்சி மந்திரி சபை அமைத்தது. ஆனால் அது மிகக் குறுகிய காலத்தில் செல்வாக்கை இழந்தது..... தேசீய உணர்ச்சியும் தீவிரக் கொள்கையும் இல்லாத காரணத்தால் தனது முன்னேற்றத்துக்குரிய, சந்தர்ப்பங்களை எல்லாம் அது இழந்தது.

'பெரியார் திராவிட நாட்டுப் படத்தைத் திறந்து வைத்தார். பெரியாரின் ஆதரவாளர்களில் முக்கியமானவரான திரு. சி. என். அண்ணாதுரை நீதிக் கட்சி என்ற பெயரையே மாற்றி "திராவிட கழகம்" என்று பெயர் வைக்க முயன்றார்' — என்று எழுதியிருக்கிறார்.

இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு வந்தவர்கள், மாநாட்டில் பங்கெடுத்துக் கொண்ட பெரும் தலைவர்கள், எவரும் பதினாயிரக்கணக்கான மக்கள் சிறைச்சாலைக்குச் செல்ல நாம் திட்டம் தீட்டுகிறோம் என்பது தெரியாத கனவான்களே யாகும். திரு. டாக்டர் பாலிகா அவர்கள் குறிப்பிட்டதுபோல், மங்கி இருந்த "விடுதலை" உணர்ச்சியைத் தூண்டி, நாட்டு விடுதலைத் தாகத்தை ஏற்படுத்தி, நமது இயக்கமும், நாட்டு விடுதலை இயக்கமே என்று காட்டியவர் அண்ணா! சொற்போர் வீரர்கள் கூட்டமல்ல; சமருக்கஞ்சாத செயல் வீரர்கள்—என்று மற்றவர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்தவரும் நமது அண்ணாதான்! இளைஞர்கள எதிர்கால சுதந்திரப் போராட்டத்துக்கு இந்திப் போரை ஒத்திகை ஆக்கிக் கொள்ளும்படி செய்த பெருமையும் நமது அண்ணா அவர்களையே சாரும்.

* * *

இதற்குமுன் எவரும் செய்ய முடியாத — செய்ய எண்ணி, தோல்வியைத் தழுவிய சமுதாயத் துறையில் பெரும் புரட்சியை உண்டாக்கிய பெரியார் நீதிக் கட்சியுடன் உறவு கொண்டாலும், அவரைத் தேடி நீதிக் கட்சியினர் ஓடி வரும்படி செய்த பெருமை அண்ணாவையே சாரும். கல்லூரிக்குச் செல்ல சந்தர்ப்பம் இல்லாத இளைஞர்களையும் கல்லூரியில் உள்ள மாணவ மாணவிகளையும், தன் பக்கம் இழுத்தார். மற்ற கட்சிகளிலும் நல்ல பேச்சாளர்கள் இருந்ததை எனது நாற்பது ஆண்டு அரசியல் வாழ்வில் பார்த்து இருக்கிறேன். அவர்களுடன் நெருங்கிப் பழகி இருக்கிறேன். இன்றும் நம் நாட்டில் நல்ல பேச்சாளர்கள் உண்டு. என்ன காரணத்தினாலோ மற்ற பேச்சாளர்கள் எவருக்கும் இல்லாத ஒரு தனித்திறன் அண்ணாவுக்கு அமைந்திருக்கிறது. இப்படி நான் மட்டும்தான் நினைக்கவில்லை. என்னைப் போல் பலர் இதே முடிவெடுத்து இருக்கிறார்கள். அண்மையில் துறையூர் மாநாடு முடிந்து எல்லோரும் திருச்சி வந்தார்கள். அனறு கூட்ட முடிவில் மழை வந்து விட்டதை அப்போது கூறினார்கள்,

அண்ணு பேசிக் கொண்டிருந்தாராம். மழை அதிகமாக இருந்ததால் மக்களில் பாதிப் பேர் எழுந்து நின்று கொண்டு பேச்சைக் கேட்ட வண்ணம் இருந்தார்களாம். உடனே அண்ணு 'நீங்கள் உட்காரும் வரை நான் பேசுவதில்லை' என்றாராம். இதைச் சொல்லி விட்டு அவர் கீழே உட்கார்ந்தாராம். உடனே அத்தனை ஆயிரம் மக்களும் கீழே உட்கார்ந்துவிட்டார்களாம்! பின்பு அண்ணு பேசினாராம். இதைப்பற்றி திருச்சி திரும்பிய தலைவர்கள் என். எஸ். பங்களாவில் பேசினார்கள். பலர் இத்தகைய சம்பவங்களை சொல்லிக் கொண்டு இருந்தார்கள்.

கடைசியாக சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத் சொன்னார்; நம் இயக்கத்திற்குள் ஐந்து, ஆறு தலைவர்கள் எத்தனை பெரிய கூட்டமாக இருந்தாலும், நமது கருத்துக்களை அலுப்புத் தட்டாமல், சுவையுடன் கேட்டுக்கொண்டு இருக்கும்படி பேச முடியும். ஆனால், அண்ணு வேண்டுமென்றே கூட்டங்களில் அதிகம் பேசுவதில்லை. ஆனால், அவசியம் வரும்போதோ லட்சக்கணக்காகக் கூடியுள்ள ஜன சமுத்திரத்தை சொக்கட்டான் பலகையாக்கி விடுகிறார். தனது கருத்துகளை அவர்கள்முன் படிப்படியாக எடுத்து வைத்துக்கொண்டே இருக்கிறார். மக்களும் அவர் பேச்சில் சொக்கி அவர் பேச்சுக்குக் கட்டுப்படும் நிலைக்கு வந்து விடுகிறார்கள் — என்று சொன்னார். உதாரணமாக தி. மு. க. முதலில் துவக்கிய நாளில் நடந்த சென்னைக் கூட்டம், மும்முனைப் போர் ஆரம்பிக்க முடிவு செய்த நாகர்கோவில் மாநாடு, ரஷ்யத் தலைவர் ஸ்டாலின் இறந்த அன்று சென்னைக் கடற்கரை அனுதாபக் கூட்டம், ராஜன் தலைமையில் சென்னைக் கடற்கரையில் நடந்த கூட்டம் போன்ற சில கூட்டங்களை நினைக்கும்போது அண்ணு

அண்ணு படைத்த பாத்திரங்கள்!

5

தந்தையைக் காப்பாற்ற பணத்தோடு வந்த அவன் கண்ட காட்சி என்ன? தன்னை வளர்த்துவிட்ட தந்தை, வளர்ந்துவிட்ட மரத்தில் பிணமாகத் தொங்கக் கண்டான். 'ஐயோ!'—எனக் கதறினான்; அழுது புரண்டான்! 'இந்த அவல முடிவுக்கு வேதாசல முதலியார்தான் காரணம்!'—என்று உணர்ந்தான். கொதித் தெழுந்தான்; கறுக்கரிவாளைத் தீட்டினான்!

அங்கு வந்த அவன் நண்பன், 'கத்தி தீட்டுவது மடமை! உன் புத்தியைத் தீட்டு'—என்று உபதேசிக்கிறான். அவனுக்கு அறிவு உதயமாவதுபோல் தோன்றுகிறது! ஆனால், தன்னை நம்பாது, மாகாளியை நம்புகிறான். அவளை நம்பினால், 'தன் துன்பம் நீங்கும்; அநியாய இன்பத்தில் வாழும் வேதாசலங்கள் வீழ்வார்கள்'—என நம்பி ஆறுகால பூஜை நடத்துகிறான்!

ஆனால், 'வேதாசலம் ராவ்பகதூர் பட்டம் பெறுகிறான். மேலும் கோலாகலமாக வாழ்கிறான்!'—என்



பதை அறிந்த அவன் ஓடுகிறான், ஆலயத்திற்கு! 'என் கைகளை நம்பாது, இந்தக் கல்லுரு எனக்குக் கை கொடுக்கும் என நம்பினேனே!'—எனக் குமுறி ஆவேசமிகுதியில் ஆலயப் பொருட்களைச் சூறையாடுகிறான்!

தந்தையின் பேரிலுள்ள பாசம், குழந்தை உள்ளம், ஆத்திர உணர்ச்சி, வழிபோக்கர் பேச்சைக் கேட்டு 'காளி கருணை செய்வாள்'—என நினைக்கும் சபல புத்தி—தெய்வம் அவனுக்குத் துணை நிற்கவில்லை என்று தெரிந்ததும் தெய்வத்தையே சூறையாட நினைக்கும் ஆவேச உணர்ச்சி!—இத்தனை 'குணபேதங்களை' உள்ளடக்கிய ஒரு அருமையான பாத்திரத்தை உருவாக்கி, நம்மை அப்பாத்திரத்தோடு ஆட்டிப்படைத்துக் கண்ணீர் வடிக்கச் செய்கிறார் அறிஞர் அண்ணு! இன்னும் தமிழர்தம் இலக்கிய மனத்திரையில் அழியாத ஓவியம் 'வேலைக்காரி' படத்தில் வரும் ஆனந்தன்—எனும் அப்பாத்திரம்!

அடடா! என்ன நினைவாற்றல்!

*

திருவல்லிக்கேணியில் நடந்த சென்னை மேயர் முதல் பாராட்டுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள், "மேயர் அவர்கள் நம்மவர்தான் என்றாலும், நகரின் நலம் வேண்டி எல்லோரையும் பார்க்க வேண்டும். அதுதான் தமிழ்ப் பண்பு. காங்கிரஸ் முதலமைச்சர் காமராசரைக் கூடப் பார்க்க வேண்டும். தேர்தல் வெற்றி தோல்விகளை மனதில் வைத்துக்கொள்ளக் கூடாது, தேர்தல் களத்திலே புண்பட்டு வீழ்ந்த 'அவர்களை' நாம் சென்று பார்க்க வேண்டும்.

"போர்க்களத்திலே புண்பட்டு வீழ்ந்துவிட்ட வீரர்களைப் பார்ப்பதற்காக இரவில், தீவட்டி ஏந்திச் செல்லுவானும் பழந்தமிழ் அரசன்!—என்று, நெடுநல்வாடையில் நான் பல ஆண்டுகளுக்கு முன் படித்ததாக நினைவு"

ஆனால், ஒரு தமிழன் பருக்கு சந்தேகம்! 'நெடுநல்வாடையில் படித்ததாக நினைவு' என சந்தேகமாகக் குறிப்பிட்டாரே அண்ணா; எதற்கும் நெடுநல்வாடையில் உள்ளதுதானா?'—எனச் சோதித்துப் பார்க்க எண்ணினர். தேடி எடுத்தார், நக்கீரர் எழுதிய நெடுநல்வாடையை! அதில் அண்ணாசொன்ன கருத்து, நூலின் கடைசிப்பகுதியில் அப்படியே இருந்தது!

வின் பேச்சுத் திறன் நம் மனத்திரையில் பேருருவம் எடுப்பது உறுதி!

திராவிட நாட்டின் விடுதலைக் கருவூலம் அறிஞர் அண்ணா அவர்கள்தான்!—என்று நாடும் நாமும் நம்புகிறோம். நமது கழகத்தின் அரசியல் வளர்ச்சிக்கு மும்முனைப் போராட்டத்தை நாம் ஆராய்ந்து முடிவு செய்ததும் இதைக் கேலி செய்யாதவர்கள் யார்? எதிர்க்கட்சிகள், பத்திரிகைகள் நம்மை கேலி, கிண்டலுக்குள்ளாக்கினர். போராட்டம் நடக்கும்போது நமது போராட்டத்தின் பெருமையை நம்மில் பலருக்குத் தெரியாது. ஆனால் போராட்டம் நடந்தானதும், இந்திய நாட்டுப் பத்திரிகைகள் மட்டுமல்ல, அமெரிக்க நாட்டு பத்திரிகைகள்கூட, இக்கிளர்ச்சியின் பெருமையை வெளிப்படையாகவே பறைசாற்றின.

அண்ணா ஆடம்பரமற்றவர்; லட்சியப் பற்றுக்கொண்டவர். தனது நாடு இருக்கும் நிலைமைக்கு ஏற்றபடி விடுதலை அடைய அதற்கான திட்டங்களுடன் வேலை செய்பவர் என்று சொன்னேன். அவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர் என்பதுடன் மட்டுமல்லாது, அரசியல் விடுதலைக்கு அரசியல் ஞானம் வேண்டும் என்பதில் பெரிதும் ஆர்வங்காட்டுபவர். இத்தகைய நல்ல அண்ணா-பெரியார் அவர்களுடன் பதினைந்து ஆண்டு மிக நெருங்கி, நம்பிக்கையுள்ளவராகப் பழகியவர். காங்கிரசில் தனது லட்சியத்துக்கு முரண்படும் நிலை ஏற்பட்டதும், எப்படித் தனது பத்தாண்டு காங்கிரஸ் உழைப்பை தூக்கி எறிந்துவிட்டு, வெளிவந்து தன் லட்சியம் வளர "சுயமரியாதை" இயக்கம் என்று ஒன்றைப் பெரியார் கண்டாரோ, அதைப்போலவே பெரியாருடன் 15 ஆண்டுகள் பழகி அவரின் செயல் ஒன்றால் அவரால் வளர்க்கப்பட்ட மாபெரும் இயக்கத்துக்கு மாசும், நாசமும், விளைந்து விடும் என்ற நிலை ஏற்பட்டதும், உடனே பெரியாருடன் பணியாற்றுவதை முறித்துக் கொண்டு வெளியேறி வந்து பெரியாருடன் இருந்தபோது, தான் சொல்லிய அதே லட்சியத்துக்குத் தனி இயக்கம் கண்டு, நம்மை இதுவரை அழைத்துவந்த ஒப்புவமையற்ற தலைவர் நமது அண்ணாவே என்று எண்ணும்போது எல்லையிலாப் பூரிப்புண்டாகிறது. இத்தலைவர் 50 ஆண்டு பருவமெய்திவிட்டார்; விழா கொண்டாடுவோம்—என்று "முரசொலி" சொல்லும்போது அவ்விழா எடுக்காமல் நாம் எப்படி இருக்க முடியும்?

அண்ணாவின் லட்சியம் நம் லட்சியம் எனக் கொண்ட நாம், நம்மையும் நமது தலைவர்களையும், பார்த்து இன்னமும் கேலி செய்யும் சிலரும் நமது பெரு மதிப்புக்குரிய பெரியார் அவர்களும் திகைப்பில் ஆழ்ந்துவிடும்படி நல்ல ஒரு கடமைப் பணி புரிய வேண்டியுள்ளது; ஆம்; அண்ணாவின் கரம் பலப்பட பலப்படத்தான் தலைவர்களைக் கேலி செய்யும் அவர்களுக்கு நம் பெருமை புலப்படும். முதலில், இன்றுள்ள கழகக் கிளைகளின் எண்ணிக்கையும் அங்கத்தினர்கள் எண்ணிக்கையும் இரட்டிப்பாக வேண்டும்! தேர்தலில் கலந்து கொள்ளுதல் எனும் ஜனநாயகக் கடமையை நம் தோழர்கள் சரிவர நிறைவேற்ற ஓவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் முன்முயற்சி எடுத்துப் பணிபுரிய வேண்டும். நம் கழகத்தவர், அனுதாபிகள் அனைவரும் ஓட்டுப் போடும் உரிமை பெற்றவராகி, உரிமையைச் செயல்படுத்தி சட்ட மன்றங்களில் நம்மவரே பெரும்பாலும் அமருகின்ற நிலையை ஏற்படுத்தினால் அண்ணாவின் மனம் குளிரும்; அவருடைய கரம் பலப்படும். நம்மை ஏளனமாக நினைப்போரின் எண்ணம்மாறும்!

அறிஞர் அண்ணாவின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவில், அவர் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நமக்கு வழி காட்ட வேண்டும் என்ற விழைவை வெளியிட வாய்ப்பளித்த 'முரசொலி'க்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அண்ணாவின் சகாப்தத்தில் வாழும் வாய்ப்பே, பெரும் மகிழ்ச்சிக்குரியது. அவர் சகாப்தத்தில் அவர் தலைமை வகித்து நடத்தும் இயக்கத்தில் அங்கம் வகிப்பது அதைவிட மகிழ்ச்சிக்குரியது. அந்த இயக்கத்தில் அங்கம் வகிப்பதோடு, அண்ணாவோடு அருகிருந்து மனம் அறிந்து, பழகிடும் பேறு பெறுவது என்பதிலுள்ள மகிழ்ச்சியை அளக்கக் கருவியே இல்லை!

மூன்றும் வகை மகிழ்ச்சியில் மிதப்பவன் நான். இந்தப் பொன்விழாவில் பல நினைவுகள் நெஞ்சில் அலையடிக்கின்றன.

உலகப் பேரறிஞர்கள் சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாடில், வால்டேர், ரூசோ, ஏங்கல்ஸ், காரல் மார்க்ஸ், லெனின், கமால், சன்யாட்சென், ஆப்ரகாம் லிங்கன், புத்தர், வள்ளுவர்—இப்படி பலரையும் சேர்த்து வடித்தெடுக்கும் ஒரு துளி, அறிஞர் அண்ணாவின் ஒரு துளி இரத்தத்திற்கு சமம்—என்று மூன்றொரு முறை எழுதினேன். அதனை மீண்டும் நினைவு கூர்கிறேன். அது எவ்வளவு உண்மையென்பது ஒவ்வொரு சம்பவமும் நினைவூட்டுகிறது. இப்பொழுது திரும்பவும் நினைத்துப் பார்த்தால்!....

உலகப் பேரறிஞர்கள் ஒவ்வொருவரிடமும் சில விசித்திர பழக்கங்கள்



இருக்கும். அப்படி நம் பேரறிஞராம் அண்ணாவிடமும் சில குணங்களைக் காண்கிறோம்.

உழைப்பு

எல்லோரும் பகலில் உழைப்போம். இரவில் உறங்குவோம். ஆனால் அண்ணாவிற்கு இரவுதான் உழைப்பிற்கு ஏற்ற நேரம். அதுவும் இரவு நேரம் அதிகரிக்க, அதிகரிக்க அவர் உற்சாகம் உச்சக் கட்டத்திற்குப் போகும். கூட இருப்பவர்களில் ஒவ்வொருவராக சாய்வார் நித்திரையின் அணைப்பில் சிக்கி! கடைசியில் அனேவருமே உறங்கி விடுவர். அண்ணா மட்டுமே விழித்திருப்பார். பிறகுதான் எழுத பேனாவைத் தேடுவார். எழுத ஆரம்பித்தால், இடையிடு இருக்காது. அரிய பெரிய எழுத்தோவியங்கள் உருவாகி விடும். பொழுதும்கூட விடிந்து விடும்! உடன் காபி வரவழைத்து சாப்பிட்டுவிட்டு உறங்குவார்!! பகல் பன்னிரண்டோ, ஒன்றோ ஆன பிறகே எழுவார். அண்ணாவின் இரவு நேர ஆட்சியில் அவரோடு ஏறத்தாழ விழித்துக் கொண்டிருப்பவர் சி. வி. இராசகோபால் தான். அண்ணாவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரான புட்டாசாமி, 'திராவிட நாடு கிடைத்து விட்டால், அரசாங்கமே இரவிலேதான் நடக்கும்' என்று கேலியாகக் கூறுவார், அடிக்கடி!

உறக்கம்

அண்ணாவின் உறக்கம் அவரே கூறுகிறபடி, விசித்திரமான உறக்கம். குறட்டைவிட்டுத் தூங்குகிறார் என்று எண்ணிக் கொண்டு ஏதேனும் பேசிக் கொண்டிருந்தால்,

விழித்தெழுந்த பிறகு, அதைப் பற்றிக் கேட்பார். அறிதுயில் புரிகிறார் ஆண்டவன் என்கிறார்களே; அதுபோல்தான் அண்ணாவின் துயிலும்.

காலதாமதம்

அண்ணா எப்பொதும் எதையும் காலங்கடந்தே செய்வார் என்று கூறுவார்கள். கூட்டத்திற்குச் செல்வதிலிருந்து கொள்கை விளக்கம் தருவது வரை, இந்தக் காலதாமதம் உண்டு என்பார்கள். ஆனால், பலநேரங்களில், அவர் முறை சரியென்று கூறுகிற அளவில் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

"கூட்டத்திற்கு காலாகாலத்தில் வருவதில்லை என்று குறை கூறுகிறார்கள். காலத்திலேயே செல்வோம் வா!" என்று சேத்தியாத் தோப்பு என்ற ஊருக்கு என்னையும் அழைத்துச் சென்றார். அப்பொழுதுதான் கூட்டத்திற்கு ஒலி பெருக்கி கட்டிக்கொண்டிருந்தார்கள். பிறகு ஒரு கல் தொலைவு சென்று காத்திருந்து அண்ணா வழக்கப்படி வருகிற நேரத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஒரு சமயம், கழகத்தின் முக்கிய அங்கத்தினர் ஒருவர், திடீரென, ஏதோ கோபத்தின் காரணமாக ராஜினமா எழுதி அனுப்பியிருந்தார். நான் அதைப் பார்த்து பதறிப்போய் அண்ணாவிடம் காட்டினேன். அவர் பதறவுமில்லை — மனம் சிதறவுமில்லை. அந்தக் கடிதத்தை என் சட்டைப்பையில் திணித்துவிட்டார். ஒரு வாரம் அண்ணா அதுபற்றிப் பேசவில்லை. மறுவாரம் "நான் அவசரப்பட்டு காரியம் செய்வதென்றால், இந்நேரம் ஒரு குழப்பமான நிலை உருவாகியிருக்கும். அந்தக் கடிதத்திற்கு வேலையில்லை—திரும்பப் பெற்றுக் கொண்டாகிவிட்டது" என்றார்.

அதுபோல் அன்றாட அரசியல் பிரச்சினைகளுக்கு அப்பப் பொழுது நம் நிலையை அண்ணா விளக்குவதில்லை. காரணம், தேவையற்ற பல வற்றிற்கு நாமே நிலை விளக்கம் தருவது வேண்டாம் என்பார். ஒரு முக்கிய உறுப்பினர் முதுகுளத்தூர் சம்பவங்கள் நடந்த நேரம், "நம் கொள்கை என்ன இந்தப் பிரச்னையில்" என்று கேட்டார். அண்ணா "நமது நிலை என்ன என்று சொல்லாமலிருப்பதுதான் நம் கொள்கை இப்பிரச்சினையில்" என்றார்.

இப்படி, காலதாமதம் தேவை என்று கூறுகிற முறையிலேயே, அரசியல் சம்பவங்களும் வந்து போகின்றன.

அண்ணாவின் கோபம்

அண்ணாவுடன் நெருங்கிப் பழகும் தம்பியராகிய நம்மில் பலருக்கு அவரிடம் கோபம் வந்திருக்கும். அதுபோல் அண்ணாவுக்கும் சிலரிடம் கோபம் வந்திருக்கும். மற்ற கோபங்களுக்கும், இக் கோபத்திற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. அண்ணா கோபமாக இருக்கிறார் என்றால் அவரது நெற்றிப் புருவங்கள் மட்டுமே பேசும்—வாய் பேசாது! தம்பிமார்கள் தவறு செய்கிற பொழுது, திருத்தக் கையாளும் ஆயுதம், இந்த மௌனம்தான். ஆனால் அந்தக் கோபம் சான்றோர் கோபமாயிற்றே—நீண்ட நேரம் நிலைத்திருப்பதில்லை—நீரில் அம்பு புகுந்து ஏற்பட்ட வடுவுபோல் மாறிவிடும்!

நான் இரண்டு மூன்று தடவை கோபித்துக் கொண்டு பேனாவிடமும், மையிடமும் ஓடியிருக்கிறேன். எழுதவும் படிக்கவும் தெரிந்த இளைஞர்களுக்கு, நேரடியாகக் கூறமுடியாத நிலை ஏற்பட்டால், உடனே பேனாவிடமும், தாளிடமும் தமது கோபத்தைக் காட்டிவிடுவார். அப்படி நான் காட்டியிருக்கிறேன். அண்ணா சிறுவர் மனநிலை தெரிந்தவராகையால் அம்மாதிரி சம்பவங்களைக் கவனத்தில்கூட வைத்துக் கொள்வதில்லை. எழுதிய நாம்தான் அவரைச் சந்திக்கிறபொழுது வெட்கப்பட வேண்டும்! அண்ணா, தனிப்பட்டவர்களுக்கு கடிதம் எழுதுவது என்பது அபூர்வமான காரியங்களில் ஒன்று. இதைப் பார்த்த பிறகுதான், மனநிலை மாற்றங்களை வைத்து பேனாவிற்கும், மையுக்கும் அடிமையாகக் கூடாது என்று பாடத்தைப் பெற்றேன்.

கண்டிப்பு

அண்ணாவின் கண்டிப்பு முறை அலாதியானது. தவறு செய்தவர்களை நேரடியாகக் கேட்கமாட்டார். ஆனால் அந்தத் தவறைக் கண்டித்து, வேறு சிலரிடம் பேசுவார். அவருக்குத் தெரியும், இந்தக் கண்டனம், தவறு செய்தவருக்கு எட்டிவிடும் என்று. அப்படி சிலரை அஞ்சல் பெட்டியாக்கி கண்டனங்களை அனுப்புவார். நேரடி விசாரணை மிகக் குறைவு. ஆனால் அப்படி ஒன்றிரண்டு விசாரணைகளை நேரில் கண்டிருக்கிறேன். அவை மிகவும் கடுமையான விசாரணையாக இருக்கும். சொல்லடியும், பார்வை இடியும் தாங்கக் கூடியதாக இருக்காது.

இப்படி எழுதிக் கொண்டே போகலாம். உலகப் பேரறிஞரில் ஒருவரான அண்ணாவின் குணங்களை எண்ணுகிற பொழுது, இப் பொன்விழாவில் பழைய நினைவுகள் வந்து மகிழ்ச்சியூட்டுகின்றன.

அண்ணா வாழ்க — எங்களுக்கு வழிகாட்டுக! என்று கூறிமுடிக்கிறேன்.


அணைவின் பொன்மொழி
சிங்காதனம் என்பது ஒரு பாம்புப் புற்று. அதன்மீது அமர்வோரை அன்னார் ஏமாந்த நேரத்தில் புற்றிலி ருந்து கிளம்பும் பாம்பு பொல்லாத பற்களால் கடித்துக் கொல்லும். கொல் லாமல் எப்படி இருக்கும்? சிம்மாசனம் ஏறியவர்களே ஏமாந்த நேரத்தில் ஓங்கிய வாளுடன் துரத்தியடிக் கும் நிகழ்ச்சிகளைத்தானே பெரும்பாலும் சரித்திரம் பேசுகிறது?



திராவிட மாகாவியம்!

ரவி

திராவிட மாகாவியம் எங்கள் அண்ணா—உயிர்த்
திராவிடப் பேரோவியம் எங்கள் அண்ணா
—திராவிட மாகாவியம்...

இராதினி அடிமையித் திராவிட நாட்டிலென
இனிமைத் தமிழியலில் புரட்சி கூட்டியநல்
—திராவிட மாகாவியம்...

அகன்ற நெற்றி ஆழ்ந்த புலமை
அறிவிலே பழந்தமிழ்ப் புதுமைக் கலவை....
புகன்ற சொல்லில் பூத்த கருத்து
புதுமைப் புரட்சியின் புனித விருந்து...
—திராவிட மாகாவியம்...

அரசியல் மேதை அறிவியல் பேசின்
அருந்தமிழ் மொழியிடைத் தென்றல் வீசும்...
குறள்உருக் கொண்டார்; குறள்நெறி உண்டே
அறநெறி சென்றே அரசியல் கண்ட
—திராவிட மாகாவியம்....

உதய சூரியன் புதிய ஒளியை
வீசுதல் கண்டே விழித்தே எழுவீர்....
புதிய உலகைப் படைத்திட எண்ணி
பொன்னும் வாழ்வை ஈந்த வண்ணத்
—திராவிட மாகாவியம்....

கடமை காவியக் கருப்பொருள் ஆக
கட்டுப் பாடெனும் யாப்பியல் மேவ
இடையில் நின்றே இணைத்திடும் கண்ணியம்
இசையின் இனிமைப் பண்ணல் மின்னிடும்...
—திராவிட மாகாவியம்...

வேண்டும் வரம்!

மா. கி. தசரதன். எம். ஏ

அரசியல் துறையில் தலை வராய் விளங்குவோர் மொழித் துறையிலும் வல்லு நராக விளங்க வேண்டும் என்ற நியதி இல்லை. புலமை பெறாத பலர் பெருந் தலைவர் களாக இருந்து உலகத்திற்கு வழிகாட்டியுள்ளனர். ஆனால் அவ்வகையினரைவிட மொழி யறிவும் படைத்தோரையே உலகம் பெரிதும் போற்று கின்றதைக் காணுகின்றோம்.

இங்கிலாந்து நாட்டில் இருக் கும் எத்தனையோ தலைவர் களுக்கு இல்லாத பெருமை சர்ச்சிலுக்கு இருக்கிறது. ஆங்கிலேய ஆட்சியை ஆட் டிப் படைக்கும் தலைமை பெற் றிருந்ததோடு ஆங்கில மொழி யையும் ஆளுவதில் வல்லவர் என்று உலகம் அவரைப் பாராட்டுகின்றது.

நேருவும், தாய் மொழியில் வல்லுநர் என்று பாராட்டப் படவில்லை எனினும் ஆங்கில மொழியில் புலமையுடை யோராகப் போற்றப்படுகிறார்.

வ. உ. சி. அவர்கள் அரசி யல் துறையில் கொண்ட ஆர்வத்தில் சற்றும் குறை யாத ஆர்வத்தைத் தமிழ் மொழியின்பால் வைத்துப் புலமை பெற்றவராக விளங் கினர்.

புலவராக இருந்த திரு. வி. க. அவர்கள் அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தார் கள்.

ஒரு புலவர் வாயிலாக மொழி பெறும் வளர்ச்சிக்கும், அரசியல் தலைவர் வாயிலாகப் பெறும் வளர்ச்சிக்கும் வேறு பாடு இருக்கிறது. புலவர் வாயிலாகச் செய்யப்பெறும் ஆராய்ச்சியோ அதன் முடிவோ வெளியுலகத்திற்கு —பாமர மக்களுக்கு — எட்டு வதற்கு நெடுங்காலம் ஆகும். ஆனால் அதே முடிவினை அரசி யல் தலைவர் வெளியிட்டால் விரைவில் அது ஊரெங்கும் நாடெங்கும் பரவிவிடும்.

வெஸ்லி பள்ளியில் தமிழ் ஆசிரியராக இருந்தபோது திரு. வி. க. தமிழ் வளர்த் திருக்கிறார். அப்போது அவரு டைய தமிழின் இனிமையை —தூய்மையைச் சிலர் மட் டுமே நுகர்ந்தனர். ஆனால் அரசியல் மேடைகளில் அவர் ஏறி நின்று தமிழ் முழக்கம் செய்தபோது வெடித்துவந்த பல சொற்கள்—தூய தமிழ்ச் சொற்கள் — இன்று அரசிய லில் கைவந்த சொற்களாக —புழக்கம் மிக்க சொற்க ளாக இருந்திடக் காணுகின் றோம்.

எனவே அரசியல் தலைவர், மொழியில் — சிறப்பாக தாய் மொழியில்—புலவராக இருப் பது மொழிக்குப் பெரிய நன்மையாகும்.

அந்த வகையில் அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் மொழிக்குக் கிடைத்த ஒப் பற்ற கருவூலம் என்றால் அது புகழுரையன்று.

அண்ணா அவர்கள் வகுத்த புதுப் பாதைகள் அளவிடற் கரியன. இலக்கண ஏட்டுக் குள் அடங்கிக் கிடந்த வாக்கிய அமைப்புக்கள் எல்லாம் நாவி லும் இடம்பெற்றது அவரால் தான்! ஒலியம், தூரிகை கொண்டு மட்டும் தீட்டப்படு வது அன்று; சொல் கொண் டும் தீட்டப் பெறலாம் என்ப தனை உணர்த்திக் காட்டியவர் அண்ணா. சிறுகதைக்கு—சிந்த னைக் கட்டுரைக்கு — கற்பனை நயத்திற்கு — உரையாடல் சுவைக்கு—இன்னும் எத்தனை எத்தனையோ வகைக்கு வழி காட்டியாக விளங்கும் தனிப் புகழ் படைத்தவர் நம் தலை வர். இவை அத்தனைக்கும் மேலாக சிறந்த ஆராய்ச்சி யாளர்! — தமிழ் ஆராய்ச்சி யாளர்!

கம்பனின் ராமாயணத்தை ஆராய்ந்து அண்ணா அவர்கள் எடுத்துரைத்த கருத்துரை கள் தமிழ் ஆராய்ச்சி உலகில் திடுக்கிடத்தக்க திருப்புமை யத்தை உண்டாக்கியிருக்கி றது. இலக்கியத்தை பூஜிட் டுப் பூசிக்கும் பொருளாக அல்லாமல், பொருள் தெரிந்து புரிந்து கொண்டு பயன் பெற

வேண்டும் என்ற பேருண்மையைத் தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கு உணர்த்தியவர் அண்ணாதான். இதுமட்டுமன்று; அவர் நுழைவுக்குமுன் தமிழ் இலக்கிய உலகம் அறிவுப் பாதையில் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. வட்மொழிக் கலப்பு தேவை என்பதோடு மட்டுமல்ல, 'மணிப் பிரவாளம்' எனும் வடமொழி கலந்த தமிழே தேவை என்கிற அளவுக்கு இலக்கிய உலகைத் தள்ளிக் கொண்டு வந்து நிறுத்தினர், தமிழின் எதிரிகள்!

அறிஞர் அண்ணாவின் இலக்கிய உலகப் பயணத்திற்குப் பின் துரோகக் கும்பலின் மதிப்புக் குறைந்தது; நல்ல தமிழ் தலையெடுத்தது! அணியும் அலங்காரமும் வாழ்த்தப் பெற்றன! தமிழ் இலக்கியங்கள் பெருமை பெற்று, மக்கள் நாவில் பீடுநடை போட்டன. புறமும், அகமும் புகாத உள்ளங்களில் புகுந்தன. சங்க இலக்கியங்களின் புகழ் ஏழுத செவிகளில் ஏறின! பழங்கால இலக்கியத்திற்குப் புத்தம் புது உரைகள் வகுக்கப்பட்டன. மாடமாளிகைகளில் உலவிய இலக்கியம் மக்கள் மன்றத்திற்கு வந்தது!

தமிழர்களின் அறிவுச் செல்வமாக விளங்கும் திருக்குறளுக்குப் பலர் உரை கண்டிருக்கின்றனர். எத்தனைபேர் உரை கண்டபோதும் இன்னும் உணர்ந்து கொள்ள வேண்டிய பகுதிகள் ஏராளமாக அப்பேரிலக்கியத்தில் இருக்கின்றன. காலமெல்லாம் ஆராய்ந்து அறியத் தக்க ஆழமும் அருமையும் உடைய அந்தப் பெருநூலின் பகுதிகளுக்கு அண்ணா அவர்கள் தரும் உரைச் சிறப்புக்களைக் கேட்கும்போது அவருடைய புலமைத்திறனை வியக்காமல் இருக்க இயலாது. எத்தனையோ சான்றுகளைக் காட்ட இயலும். எனினும் அண்ணா அவர்கள் திருக்குறளுக்கு உரை காணும் சிறப்பினை இரண்டே எடுத்துக்காட்டுகளைக் கொண்டு தெரிந்து கொள்ள இயலும்.

கற்க கசடறக் கற்பவைக்
கற்றபின்
நிற்க அதற்குத் தக.

இந்தக் குறளை யறியாதார் இரார்! ஒரே விழுடியில் இதற்கு உரை சொல்வாரும் உளர். ஆனால் அண்ணா அவர்கள்

கற்க கசடறக் கற்பவை

என்ற மூன்று சொற்களை மட்டும் மூன்று சிறப்புச் சொற் பொழிவுகளில் விளக்கியுள்ளார்கள்! அத்தனையும் புத்தம் புதிய கருத்துக்கள்; திருக்குறளை ஆராயும் வேட்கை படைத்தோருக்கு விருந்தாகும் படையல்கள்!

கசடு அற — என்பதற்கு படிப்போனின் ஐயம்திரிபு நீங்க, என்றும் நூலின் பொருளின் கண்தோன்றும் ஐயம்திரிபு நீங்க என்றுமே பொருள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஆனால் அண்ணா அவர்கள் கால வெள்ளத்தின் ஓட்டத்தால் நூலிலேயே ஏற்பட்டு விடும் கசடு அறுமாறு படிக்க வேண்டும் என்று உரை சொல்லுவார்!

எப்பொருள் யார்யார் வாய்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது
அறிவு.

என்ற குறளும் பலரால் எடுத்தாளப்படும் ஒரு குறளாகும். இதற்கு உரை வகுத்தவர்கள் அத்தனை பேரும், யார் யார் என்ற அக்குறிப்பிட்ட சொல்லுக்கு யாரிடத்தில் (எவரிடத்தில்) கேட்டாலும், எத்தனை பேரிடம் கேட்டாலும் என்று மட்டுமே உரைக்கின்றனர்.

ஆனால் அண்ணா அவர்கள் யார் யார் என்ற இரண்டு சொற்களையும் ஒரு காற்புள்ளியால் பிரித்து,

யார், யார் வாய்கேட்பினும்.

கேட்கின்றவர் யாராக இருந்தாலும், சொல்லுகின்றவர் யாராக இருந்தாலும் என்று உரை வகுக்கின்றார்!

ஒரு சின்ன காற்புள்ளி தான்! அது இடம்பெறுவதினால் கிடைக்கும் பொருளில் எத்துணை மாற்றம்!

யார் யார் என்பது அடுக்குத் தொடர்; பன்மை பற்றி வந்தது!

—என்று பரிமேலழகர் சொல்லும் உரை, அண்ணா அவர்களின் உரையோடு ஒப்பிடப் பெறுகின்ற போதுதான் அண்ணா கூறும் உரையின் சிறப்பும் ஆழமும் உணர வல்லதாகும்.

யார் யாரிடத்தில் கேட்டாலும் என்று பலபேரிடம் கேட்டலைச் சொல்லுதலைவிட யார், யார் இடத்தில் கேட்டாலும் என்று சொன்னால், கீழோர் மேலோரிடத்துக் கேட்டாலும் சரி, மேலோர் கீழோரிடத்துக் கேட்டாலும் சரி, கேட்கப்படும் அந்தப் பொருளின் உண்மையான பொருளை அறிவதே அறிவின் செயல் என்று உரை வகுக்கும்போது திருக்குறள் மிக்கப் பொருளாழமுடையதாகின்றதன்றோ?

இப்படி எண்ணற்ற சான்றுகளை அண்ணா அவர்களின் 'உரை'க்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்!

தமிழ் படித்துத் தமிழாசிரியனைப் பணி செய்து வாழ்கின்றவன் என்ற முறையில் அண்ணா அவர்களின் உரைகளை — திருக்குறளுக்கு அவர் காட்டும் நுட்பமான உரைகளைக் கேட்டு வியந்ததோடு மட்டும் அல்ல—அண்ணா அவர்கள் எப்படியேனும் ஒய்வை ஏற்படுத்திக் கொண்டு திருக்குறள் முழுமைக்கும் உரை வகுத்துத் தரவேண்டும் என்ற பேராவல் என் உள்ளத்தில் நீங்காது இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பொன்விழாவில் அண்ணா அவர்களிடம் வேண்டும் 'வர'மாக இந்த விருப்பத்தினைத்தான் நான் தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்!

எங்கள் அண்ணா



ஆர். ஆனந்தன்

எங்கள் அண்ணாவை இத் தமிழகத்திலே அறியாதவர்கள் இருக்கமுடியாது! அவர் குள்ள உருவத்தை உடையவர்தான்! ஆனால் அவரைக்கண்டு அஞ்சுவோர்.....பலருண்டு! எங்கள் அண்ணாவின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து அணிவகுக்க ஆயிரமாயிரம் அன்புத் தம்பிகள், இலட்சக்கணக்கான இளைஞர்கள் ஏங்கிக் காத்திருக்கிறார்களென்றால் அது மிகையாகாது!

"எளிய உடை, நடை, தோற்றம்! குள்ள உருவம்! குறும்புப் பார்வை! விரிந்த நெற்றி! வெற்றிலை குதப்பிய வாய், பரந்த மார்பு, கறை படிந்த பற்கள், நகைதவழும் முகம், சிவாத தலை, சிறிதளவு வெளிவந்த தொப்பை செருப்பில்லாத கால், சரியாகப் பொருந்தாத வெள்ளை உடைகள், இடுப்பில் ஒரு பொடிமட்டை, இனிய குரல், எடுப்பான மீசை, கையில் வெற்றிலைப் பாக்குப் பொட்டலம், இந்தத் தோற்றத்தோடு அதோ.....அதோ... சட்டசபை மன்றத்திலே மணிக் கணக்காக அயராது தேன்துளிகளை, தீஞ்சுவைக் கனிகளை தனது சொற்களின் மூலம் உதிர்த்துக் கொண்டிருக்கிறாரே அவர்தான் எங்கள் அண்ணா!"

அறிஞர் அண்ணாவைச் சுருங்கச் சொன்னால், ஒரு நடமாடும் நூல் நிலையம்...அல்ல...ஒரு நடமாடும் பல்கலைக் கழகமெனத் துணிந்து கூறலாம். அண்ணா அவர்களின் அருமை பெருமைகளை, சாதனைகளைத் தொகுத்துக் கூற விரும்பினால் அவை எஞ்சிக் கொண்டே இருக்கும். விரித்துக் கூறப்புகுந்தால் அவை விரிந்து கொண்டே செல்லும். அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தினாலும் புகுத்திவிடலாம்; ஆனால் அண்ணாவைப் பற்றிச் சுருக்கி எழுதி முடிப்பது அரிதினும் அரிது!

அறிஞர் அண்ணாவைப் பற்றி தமிழகத்துக்கு அறிமுகஞ் செய்து வைப்பதென்பது கொல்லனது களத்திலே ஊசி விற்பதைப் போன்றதாகும்!

"சால உறுதவ நனி கூர் கழி மிகை—என மிகுதி குறிக்கும் உரிச்சொற்களையெல்லாம்அப்படியே அடுக்கிக் கூறினாலும் அது அண்ணாவிற்குப் பொருந்தும்"—எனப் புலவர் குழந்தை கூறுகிறார்.

தேன் துளியை மொய்க்க வரும் எறும்புக் கூட்டங்களைப் போல் எண்ணிக்கையற்ற மக்கள் திரள் அண்ணாவின் அடுக்கு மொழிப் பேச்சைக் கேட்கக் கூடும்! மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல, அரசியல் தொடர்பு அறவே அற்ற பொது மக்களும், மீண்ட தொலைவிலிருந்து அண்ணாவைக் காண, அவரது பேச்சைக் கேட்க ஓடோடி வரும் காட்சியைக் காணாதவர்களும் உண்டோ?

அண்ணாவின் நூல்கள் வெளிவந்த ஒரு வாரத்தில் எத்தனை ஆயிரம் படிகளானாலும் தீர்ந்து விடுகின்றன. "பாலெல்லாம் நல் ஆவின் பாலாமோ? நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ?" என்பது போல, "எழுத்தெல்லாம் எங்கள் அண்ணாவின் எழுத்தாமோ" என்று இறுமாப்புடன் கூறிக் கொள்ளலாம்! உரோமாபுரியில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் வாழ்ந்த 'சிசரோ' என்பவரைப் பற்றிக் கூறவந்த நியூமென் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், "மற்றவர்கள் தம் எழுத்தில் இலத்தீன் மொழியைத்தான் எழுதுகின்றனர். ஆனால் சிசரோவோ உரோம் நாட்டு மக்களையே எழுதிக்காட்டுகிறார்." என்று வர்ணிக்கிறார். அதேபோல், அறிஞர் அண்ணா தன் எழுத்துக்களிலே தமிழகத்தையே படம் பிடித்துக் காட்டுகிறார்! தமிழ் நாட்டு மக்களின் நிலையை ஓவியமாக்கிக் காட்டுகிறார்!

பொதுவாக திராவிடத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் எடுத்துக் கொண்டால், அறிஞர் அண்ணா அவர்கள் எல்லா வகையிலும் ஈடும் எடுப்பு மற்ற தலைசிறந்த சொற்பொழி

அண்ணா பேச்சில்...

மோட்டார் நன்றாக ஓட, அதை ஓட்ட, விரை இருந்தால மாத்திரம் போதாது — அது தவறான வழியில் சென்றால் தடுக்க 'பிரேக்கும்' வேண்டும்! நாடு செழிக்க நல்ல ஆறு இருந்தால் மாத்திரம போதாது — அதிலிருந்து வெள்ளம் புரண்டு ஊரை அழித்துவிடாமல் இருக்க கரை வேண்டும்! நல்ல காளையை ஓட்ட சிறு சவுக்கு இருந்தால் மாத்திரம் போதாது — அதை கிழக்கேயும், மேற்கேயும் திருப்ப மூக்கணாங் கயிறும் வேண்டும்! வீட்டிற்கு வாயிற்படி இருந்தால் மாத்திரம் போதாது, வாயிற்படிக்கு கதவு வேண்டும், கதவுக்குத் தாழ்ப்பாளும் வேண்டும்!

அதுபோல ஜனநாயகக் காலத்தில்—குடியரசு வந்த பிறகு — நாட்டில் நல்லாட்சி நடக்கவேண்டுமானால் ஆளும் கட்சி ஒன்று இருந்தால் மாத்திரம் போதாது, மாற்றுக் கட்சியும் இருக்க வேண்டும். மாற்றுக் கட்சி இல்லாத ஜனநாயக சர்க்கார், பிரேக் இல்லாத கார், கரை இல்லாத ஆறு, மூக்கணாங் கயிறு இல்லாத மாடு! ஆகவே ஆளும் கட்சிக்கு அது அடக்குவாரற்று அக்கிரமம் செய்யும் கட்சியாக மாறாமல் இருக்கும் படி பார்த்துக்கொள்ள ஒரு மாற்றுக் கட்சி தேவை.

வாளர், எழுத்தாளர், இதழாசிரியர், கதையாசிரியர், திரைப் படக்கதை உரையாடை ஆசிரியர், நடிகர், நாடக இயக்குநர், அரசியல் தலைவர், சீர்திருத்தச் செம்மல், பண்பாளர்...இப்படியாக மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போகலாம். இவைகளெல்லாம் உண்மையென்றி வெறும் புகழ்ச்சியில்லை! அதனால்தான் பழம்பெரும் காங்கிய வாதியான டாக்டர் பி.எஸ். சீனிவாசன் உள்ளிட்ட ஐவரையும் தோற்கடித்து, ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்துடன் அண்ணா அவர்கள் காஞ்சித் தொகுதியிலே வெற்றி பெற்றார். அண்ணாவைத் தமிழகத்துக்குத் தந்து முன்னுக்குக் கொண்டு வந்த, ஈ. வே. ரா. அவர்களே பல நாட்கள் காஞ்சியில் தங்கி அண்ணாவைத் தோற்கடிக்கப் பிரச்சாரம் செய்தும், தந்தையை வென்ற தனயனாகவாகைமாலை சூடினார். இப்போது தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களுக்கு மட்டுமன்றி தமிழகத்துக்கே அருந்தொண்டு ஆற்றிவருகிறார்.

* * *

அண்ணா அவர்கள் இளம் வயதில் அவரை அதிகமாகக் கண்டித்தும் கண்காணித்தும் வந்தவர், அவர்களுடைய சின்னம்மாவான இராசாமணி அம்மைதான்! அவரை அண்ணாவும் மற்றவர்களும் "தொத்தா" என்று அழைப்பார்கள். பள்ளிக் கூடத்தில் வாத்தியாரைப் போல், வீட்டிலே தொத்தா அவர்கள் அண்ணாவைக் கண்காணித்து வந்தார்கள். வீட்டில் "தொத்தா"வின் கெடுபிடி தான் அதிகமாக இருக்குமாம். அண்ணா படிக்கும்பொழுது தொத்தா பக்கத்திலேயே உட்கார்ந்து இவர் படிப்பதைக் கவனித்து வருவார்கள். ஐந்து விநாடிகளுக்கு ஒர் முறை "ஊம்" என்று தொத்தாவிடமிருந்து ஒரு அதட்டல் வரும். படித்ததில் ஏதோ தவறு நேர்ந்து விட்டதென்று அண்ணா திரும்பவும் அதை ஒரு முறை படிப்பாராம். ஆங்கிலப் பாடங்களை அண்ணா படிக்கும் பொழுதும் தொத்தாவின் "ஊம்" என்ற குரலொலிகள் கேட்டுக் கொண்டே இருக்குமாம். நீண்ட நாள் வரை, தொத்தாவுக்கு ஆங்கிலம் தெரியும்போலிருக்கிறது, அதனால்தான நாம் சரியாகப் படிக்காத இடங்களைக் கண்டுபிடிக்கிறார்களென நம்பியிருந்தார்.

ஏழாவது படிவம் படிக்கும் பொழுதுதான், சரியாகப் படிக்கிற பொழுதும் தொத்தாவின் அதட்டலிருப்பதைக் கவனித்தார். தொத்தா அதட்டியபிறகு அண்ணா சிலசமயம் தவறுகளே படித்துப் பார்த்தாராம். அப்பொழுது தொத்தாவின் அதட்டல் வரவில்லையாம். அதன் பின்தான் தொத்தாவுக்கு ஆங்கிலம் தெரியாதென்று இவர் முடிவு கட்டினார்.

இதைப் போன்று இவருடைய இளமைப் பருவத்திலே நடந்த நிகழ்ச்சிகள் பல, இவருடைய அறிவுக்கூர்மையை விளக்குவதோடு, நகைச்சுவை பொருந்தியதாகவும் இருக்கக் காண்கிறோம். பச்சையப்பன் கல்லூரியிலே படிக்கும்பொழுது இவர் பெரும் பொழுதை எழும்பூர் கன்னிமரா நூல்நிலையத்தில் தான் செலவிட்டாராம். வகுப்புக்குக் கூட செல்லாது எழும்பூர் நூல் நிலையத்திலே அடைந்து கிடந்தாராம். கிப்பனின் "ரோம் நாட்டுப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற ஆங்கில நூலை இவர் அங்கேயே பலமுறைப் படித்துப் பார்த்துச் சுவைத்திருக்கிறார்.

கல்லூரியிலே படித்துப் பட்டம் பெற்றவுடனேயே சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்திற்குச் சென்று நூற்றுக் கணக்கான ரூபாய்களுக்குத் தமிழ் நூல்களை வாங்கி, அவைகளை ஆழ்ந்து கற்றார்.

சைனபசாரிலுள்ள கோவிந்த நாயக்கர் நடுநிலைப் பள்ளி ஆசிரியராகச் சிலகாலம் பணியாற்றியுள்ளார்; ஒரு சமயம் பெரியார் ஈ. வே. ரா—வோடு வடநாட்டுச் சுற்றுப்பயணம் சென்றபோது, அவருடைய தமிழ்ப் பேச்சை அண்ணா அவர்கள் அழகாக மொழிபெயர்த்துக் கூறியதைக் கண்டு பலரும் பாராட்டினார்கள். அவரது மொழிபெயர்ப்புப் பேச்சைக் கேட்டு மயங்கிய பலர், அவரைத் தனியாக பேச அழைத்தனர். ஆனால் அண்ணா, பெரியார் அனுமதி தராததால், பேச ஒப்புக் கொள்ளவில்லை. தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லையல்லவா? தந்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட

அந்தத் தனயன்தான் இன்று தந்தையையும் மிஞ்சிய தலைவராக விளங்குகின்ற விந்தையைக் காண்கிறோம்.

* * *

1937—ம் ஆண்டிலே முதன் முதலிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறை சென்றார். அன்றிலிருந்து இன்றுவரை இவர் சிறைக்கூடம் கண்டு அஞ்சியதில்லை. "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை — எமை மாட்ட நினைத்திடுஞ் சிறைச் சாலை" என நினைத்துப் பணிபுரியும் மக்கள் தொண்டர்.

"தமிழுக்குத் தொண்டு செய்து சிறைக்குச் சென்றேன். தலைசிறந்த பேச்சு வல்லோன்; தமிழ் வீரன்; தமர் என்றும் தான் என்றும் நினைப்பதன்றி தமிழ் நாட்டின் நலத்தினுக்கே உயிர் உடல்கள் அமைக்க என இரவு பகல் உழைக்கும் மேலோன்" —

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும்,

"அண்ணாத்துரை யென்னும் அண்ணல் தமிழ்நாட்டு வண்ணன் அழுகெடுப்பில் வாய் மொழியில்..... பண்ணவன் சிற்பனெழுத் தோவியத்தில் செவ்வரசு"—என்று தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வும் இவரது சாதனைகளையும், தொண்டுகளையும் பாராட்டியுள்ளனர்.

இங்ஙனம் அண்ணாவைப் பாராட்டிப் புகழாதவர்களே தமிழகத்தில் இல்லையெனலாம். அவர் மீது வசைமாரி பொழிபவர்கள்கூட அவர் திறமையை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

நாடக உலகிலேயே புதிய தோர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது இவருடைய "வேலைக்காரி" நாடகம். அதே நாடகம் திரைப்படமாக்கப் பட்டவுடன் புராணப் படங்களுக்கு அப்போது இருந்த மதிப்பு இருந்த இடமே தெரியாமல் ஓடி மறைந்தது. எங்கள் அண்ணா அவர்களுக்கு கதாபாத்திரங்களை மட்டுந்தான் உண்டாக்கத் தெரியுமென எண்ணினால் நீங்கள் ஏமாந்து போவீர்கள். அவருக்கு மிகச் சிறப்பாக நடிக்கவும் தெரியும். எங்கள் அண்ணாவின் நடிப்புத் திறனைக் கண்டு சிறந்த நடிகர்களான என். எஸ். கே., எம்.கே.டி. பாகவதர், எம்.எம்.

அண்ணா படைத்த பாத்திரங்கள்!

6

'இரக்கம் எனும் பொருளில்லாதவர் அரக்கர். அவர் அழிக்கப்பட வேண்டியவர்' — எனும் 'தேவ கருத்தி'லுள்ள போலித்தன்மையை, தாக்கிப் பொடி செய்கிறான் அந்த இராவணன்! அரக்கர்களின் பேரில் எந்தெந்தக் குற்றங்கள்—பாவங்கள் — பழிகள் சுமத்தப்படுகின்றனவோ அதே குற்றங்கள் — அதே பழிபாவங்களை செய்த தேவர்களை நீதி மன்றத்தின்முன் இழுத்துவந்து தலை குனிந்து நிற்கும்படி செய்கிறான்.

வேற்றான் மனைவியை சூதுமதி கொண்டு புணர்ந்த தேவாதி தேவன்; இரக்கம் சிறிதுமில்லாது சீடனிடம் 'கட்டைவிரலை வெட்டித்தா'—எனக் கேட்கும் குரு இன்னும் பழிபாவங்கள் எத்தனையுண்டோ அத்தனையும் செய்த தேவர்களின் நீசச் செயலை நீதி மன்றத்தில் விவரிக்கிறான் இராவணன். நீதி மன்றத் தலைவராய் அமர்ந்திருக்கும் நீதிதேவனுக்குக் குழப்பம் ஏற்படுகிறது!



பழிபாவங்களைச் செய்தவர்கள் தேவர்களா?—வணங்கத்தக்கவர்களா? — என உரத்த குரலில் கேட்கிறான் இராவணன். நீதிதேவன் தலை சுற்றுகிறது!

பழிபாவத்தைச் செய்ததாகக் கூறப்படும் நான் அரக்கனா? அழிக்கப்பட வேண்டியவனா? — என்று மேலும் கேட்கிறான். நீதிதேவன் மயக்கமடைகிறார்!

—புராணங்களில் புகுந்து விளையாடி, புண்ணுக்குப் புனுகு போட்டு மறைத்து வைத்திருப்பவைகளை எடுத்துக்காட்டி—புதுமைக் கதை பல பேசும் இந்த புரட்சிக்கார 'இராவணன்', அண்ணா அவர்கள் தீட்டிய 'நீதி தேவன் மயக்கம்' நாடகத்தில் தோன்றி நம்மைச் சிந்திக்க வைக்கும் அருமையான பாத்திரம்.



அதிகாரம் என்பது போதை! பருகப்பருக இனிக்கும். பழகப் பழக அதிலே சொக்கி விழாதவர்கள் வெகு சிலரே. அதிலும் அரசியல் அதிகாரம் அதிகமான போதை தரும். அதைப் பருகுவோர், பரமானந்த மடைந்து, பாதம் பூமியிற் சரியாகவும் படியாத படி தாண்டவ மாடுவர்! அந்தப் போதையின் பயனாக எதேச்சாதிகாரமும். சர்வாதிகாரமும் ஏற்படும். தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டனாக மாட்டானா? அதைப் போலவே தனக்கொரு எதிரியும் இல்லை என்ற மனப் பான்மையையும் கொண்டு விட்டால், கேட்கவா வேண்டும் அவர் தம் திருவிளையாடலை? "யாராயினுஞ் சரி" எனக் கூறி, எதற்கெடுத்தாலும் கச்சைக் கட்டி நிற்பர். இதுவே அதிகார வெறியெனப்படுவது.

என்றாலும் "பல்லக்குச் சவாரி" அதிக நாளைக்கு நடக்காது. சுமந்து வருபவரின் தோள்வலியோ அதிகரித்து விட்டது. 'தினை விதைத்தவன் தினையே அறுப்பான்" "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே" என்று இருவகையாக எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இரு சாராரும் ஒன்று சேரும் சமயம், நெருங்கி விட்டது. அச் சமயம் வந்தால் அதிகார மயக்கம் தானாகத் தெளிவிக்கப்படும்.

தண்டபாணி தேசிகர், சாரங்கபாணி, டி. கே. சண்முகம், எம். ஜி. ஆர். போன்றவர்கள் பாராட்டிப் பலப்படப் புகழ்ந் திருப்பதே இதற்குப் போதுமான சான்றாகும். அவரின் நடிப்புத்திறனை "சந்திரோதயம்" நாடகத்தில் "துரைராஜ்" பாத்திரமும் பல்வேறு வேடங்களிலும், "சந்திரமோகன்" நாடகத்தில் காகபட்டர் வேடத்திலும், "நீதிதேவன் மயக்கம்" நாடகத்தில் "இராவணன்" வேடத்திலும் கண்டவர்கள் யாவரும் வியந்து போற்றியுள்ளனர். தானே கதை எழுதி, தானே அதற்கு வசனமெழுதி, தானே நடித்துக் காட்டுவதோடு, பலருக்கு நடிப்புக் கலையைக் கற்பித்து நடிக்கவும் செய்திருக்கிறார். பலப்பல நாடகங்களுக்கு இவரே டைரக்டராகப் பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. அதனால்தான் இவரைத் தென்னகத்துப் பெர்னட்ஷா வென "கல்கி" அழைத்தார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக — தன்னை இழித்தும் பழித்தும் வசைமாரி பொழிபவர்களை வாயார வாழ்த்தும் இணையற்ற பண்பையும்தனக்கு இன்னல் செய்தார்க்கு இனியவே செய்யும் பெறுவதற்கரிய பண்பையும் இவரிடத்திலே காணமுடியும். தன்னைத் தோற்கடிக்க அரும்பாடுபட்ட 'தந்தை' சிறையிலே சிக்கித் தவிப்பதைக் கண்டித்துத் தனது இதழ்களிலே தலையங்கம் தீட்டியதோடு, சட்டமன்றத்திலே அவரை விடுதலை செய்ய வாதாடியவர் அண்ணா தானென்பது ஒன்றே அவரின் இந்த பண்பை விளக்கும்.

இன்னல் செய்தார்க்கும் இனியவே செய்தல், வசைமாரி பொழிந்தவர்களை வாழ்த்துதல், இன்மொழி பகர்தல், இயன்றவரை ஈதல், எளியவர்க்கு உதவுதல், அன்போடு உரையாடுதல், கடும்மொழி கூறுமை, புறங்கூறுமை, பொறுமையின்மை, அடக்கம், விடாமுயற்சி, நீதிக்கும் நேர்மைக்கும் பாடுபடுதல், ஏழைத் தமிழர்களின் இன்னல்கள் போக்க எப்பொழுதும் பாடுபடுதல் போன்ற அரும் பெரும் பண்புகளை இவரிடம் காணலாம்.

எல்லாப் பண்புகளையும் பெற்று, எல்லாத் திறன்களையும் உடைய தலை சிறந்த மக்களின் தலைவர் அண்ணா அவர்களை, அவரிடம் பெருமதிப்பும் பேரன்பும் கொண்ட தம்பிகளும் மற்றவர்களும், அறிஞர் என்று ஒரு அடைமொழி அளித்துச் சிறப்புடன் அழைக்கின்றனர். "அறிஞர்" என்ற சொல்லே இப்பொழுது அண்ணாவைக் குறிக்கும் சொல்லாகிவிட்டது. "அண்ணா இத்தகுதியறியாத் தமிழ் நாட்டில் பிறந்திருக்காமல் மேலைட்டில் பிறந்திருப்பாரேயானால் 'நோபல் பரிசு" பெற்றுப் பல ஆண்டுகள் ஆகியிருக்கும். சுமக்க முடியாத பல பல்கலைக் கழகங்கள் கொடுத்த பட்டங்கள் அவருக்குப் பாத்திரங்கள் போல தலை மேலிருந்து அவரை அழுத்திக் கொண்டிருக்கும்...!

"ஏ தமிழ்நாடே! அறிஞர் அண்ணாவின் எழுத்தின், பேச்சின் பயன் பெற்று வாழ்! 'அரிதில் கிடைத்த ஒர் அறிஞனைப் போற்றிப் போற்றிப் பயன் பெறுது தவறியது தமிழ்நாடு' என்னும் உலகப் பழிக்கு ஆளாகாதே. மருட்சியை மாற்று! அறிவைக் கொண்டுபார்!... அண்ணா அவர்கள் தமிழ் நாட்டின் அண்ணா! தமிழர்களின் பொதுச் சொத்து! தமிழ் மக்களின் அறிவுக்களஞ்சியம்! தமிழர்களின் முன்னேற்றப்பாதை! பகுத்தறிவுத் திறவுகோல்! கலங்கரை விளக்கம்."—என்று புலவர் குழந்தை இவரைப் பாராட்டுகிறார். ஆம்! அவரது உயிரோவியங்கள் நம்மிடம் என்றென்றும் பேசிக் கொண்டே இருக்கும்! அவருடைய எழுத்துக்கள் நமது உள்ளத்திலே எழுச்சியையும் புரட்சியையும் தூண்டும். நம்மைக்கூட எழுதும்படியும் தூண்டும். குயிலின் குரலினிமையும், மயில் ஆட்டத்தின் அழகையும், யாழின் இசையையும், குழலோசையின் இனிமையையும் தேனின் தெவிட்டாத சுவையையும், தென்றலின் குளிர்ச்சியையும் மலர்களின் மனத்தையும், இளமங்கைகளின் கயல் விழிகளின் கவர்ச்சியையும் அவருடைய பேச்சிலும் எழுத்திலும் காணமுடியும்!

இத்தனைச் சிறப்புகளையும் கொண்ட தமிழகத்தின் காஞ்சிக் காவலனை அண்ணா வாழ்க! நீடுழி வாழ்க!


வஞ்சியும் காஞ்சியும்!
காட்சி-1
சாஞ்சியில் ஒருநாள்!
திடீரென்று சேரன் செங்குட்டுவன் நீண்ட தூக்கத்திலிருந்து பயங்கரக் கனவு கண்டு விழிப்பதுபோல் கண் விழிக்கிறான். அவன் உடலிலே எந்தவித மாற்றமும் காணோம். உள்ளந்தான் ஒருநிலைப்பட்டதாக இல்லை. அதே நிலையில்தான் அவன் மனைவி வேண்மாளும் இருக்கிறாள்.
செங்குட்டுவன்: தேவி! நான் நெடுநேரம் உணர்வின்றி உறங்கிவிட்டேன் போலிருக்கிறதே! இந்த இடமும் புதிதாக இருக்கிறது!
மாறன்எழினி

வேண்மாள் : ஆம், அத்தான்! இது ஒரு வேளை சாத்தனூர் பத்தினித் தெய்வம் கண்ணகி பற்றி சாற்றினரே; அந்தப் பேராற்றங் கரையாக இருக்குமோ?

செங் : அப்படி இருந்தால் நீலமலைகளின் அணைப்பிற்குத் தப்பி என் தாள்பணியும் தென்றல் வரக்காணேனே!

வேண் : ஒருக்கால் நாம் வெள்ளி நிலா பார்த்தபடி இரவெல்லாம் வெள்ளி மாடத்திலேயே தங்கிவிட்டோமா?

செங் : என்ன வேண்மாள் விளையாடுகிறாய்? இன்னும் நமக்கு இளவயது என்ற எண்ணமா? *எழுபத்தைந்தாண்டு நிரம்பிய இந்தக் கிழவனுக்கும் கிழவிக்கும் வெள்ளி மாடத்திலே என்ன வேலை?

வேண் : வயதானால் என்ன; மூப்பாலில் மூன்றும் பாலின் சுவை பருகத்தான் வெள்ளிமாடத்தின் துணை தேவையோ? நம் அருமைச் செல்வம் — குடநாட்டு இளவரசன் குட்டுவன்சேரலின் வருங்காலம் பற்றிப் பேசுவதற்காக நாம் இங்கு வந்திருக்கக் கூடாதோ?

செங் : எனக்கு எதுவுமே புரியவில்லை. அதோ, அமைச்சர் அழும்பில்வேள் வருகிறாரே; அவரையே கேட்டுவிடுவோம்!

(அமைச்சர் வந்து வணங்கி நிற்கிறார்)

செங் : வாரும் அமைச்சரே! இந்தப் புதிய இடத்திற்குப் பெயரென்ன?

அமைச் : அதுதான் தெரியவில்லை, மன்னவா!

செங் : என்ன; உமக்கும் தெரியவில்லையா? பெரும் வித்தையாக அல்லவா இருக்கிறது? புதிய இடம்; புதிய உணர்ச்சி! என் உடல் இவ்வளவு களைப்பை இதுகாறும் கண்டதேயில்லை.

அமைச் : ஆம்; மன்னவா! உங்களைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம் எங்கோ மகளை ஆட்டிய அந்நாள் ஆரிய மன்னர் ஆயிரவரை ஒருவராக நின்று எதிர்த்து வெற்றிவாகை சூடினீர்களே; அன்றுகூட நான் உங்களை இவ்வளவு களைப்புடன் காணவில்லை.

வேண்: அமைச்சர் சொல்வது உண்மைதான்! யவனரும் கிரேக்கரும் வந்து போகும் நாவாய்களைக் கொள்ளையிட்டு வாழ்ந்த கடம்பரை அடக்க, நீங்கள் மேலைக் கடலிலே படை செலுத்தி மீண்டபோது கூட உங்கள் முகத்திலே இவ்வளவு சோர்வு தென்படவில்லை!

செங்: அமைச்சரே! என் சோர்வுபற்றிக் கவலை வேண்டாம். என் தோள் பலத்தை மட்டுமே நம்பி இமயம்வரை சென்று திரும்பிய என் இளமை உற்சாகம் இன்னும் மறைந்து விடவில்லை. வனப்பு மிகக் கொண்ட என் வஞ்சித் திருநகரைப் பார்க்க வேண்டுமென்கிற உணர்வு மட்டுமே என்னை உலகின் மறுகோடுவரை ஊர்ந்து போகச் செய்யும். புறப்படுங்கள்!

அழும்: மன்னவா! வழி....?

செங்: வடதிசை இமயம் முதல் தென் திசைக் குமரிவரை எனக்கு எல்லாம் தெரிந்த வழிதான்; வாரும்!

(புறப்படுகின்றனர்)

காட்சி-2

தலைநகராம் வஞ்சி நகர் நோக்கிப் புறப்பட்ட சேரன் செங்குட்டுவன், வேண்மாள், அமைச்சர் அழும்பில்வேள் ஆகியோர் ஒரு மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருக்கின்றனர். அப்போது தானைத் தலைவன் வில்லவன் கோதை வந்து வணங்கி நிற்கிறான்.

செங்: என்ன வில்லவா? என் வஞ்சி மாநகரம் இன்னும் எவ்வளவு தூரம்?

வில்லவன்: தெரியவில்லை, மன்னவா!

செங்: ஏன்; தெரிந்தவர்களைக் கேட்பதுதானே?

வில்: கேட்டேன். ஆனால் அவர்களால் நான் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. வடமொழி மிகைப்படக் கலந்த தமிழ் மொழி பேசுகிறார்கள். கேட்டால் அது மலையாளம் என்று மறுமொழி தருகிறார்கள்.

செங்: ஆ? தமிழுக்கு நேர்ந்த இந்தச் சீர் கேட்டைக் கேட்டால் என் இளவல் இளங்கோ இந்நேரம் உயிர்மாய்த்துக் கொள்வானே! அய்யோ, வேண்மாள்! என் தாய் படும் துயரைக் கேட்பதற்கு என் காதுகள் என்ன பாவம்தான் செய்தனவோ!

(அப்போது புலவர் பரணர் வருகிறார்)

பரணர்: வணக்கம், மன்னவா!

செங்: புலவரே! வடமொழி தமிழை வென்ற செய்தியை உம் காதுகள் கேட்டிலையோ?

பரணர்: கேட்டேன்.....தமிழாண்ட வஞ்சி மூதூரிலேயே அதைக் கேட்பதற்கு நாம் முன்பு என்ன கொடுமை செய்தோமோ தெரியவில்லை.

செங்: (திகைத்து) பரணரே! என்ன புகல்கிறீர்? வஞ்சி மூதூரா? எங்கு இருக்கிறது என் தலைநகரம்?

பரணர்: இங்கேதான்! உம் காலடியில்தான்!

செங்: என்ன; கோழிகள் கூட்டம் கூட்டமாகக் குப்பை தோண்டும் இந்தச் சிற்றூரா

* செங்குட்டுவனுக்கு சாகும்போது வயது எழுபத்தைந்து.

கொடித்தேர் வீதியும் யவனர் இருக்கையும் கொண்ட என் வஞ்சித்திரு நகரம்?

பரணர்: ஆமாம்; வேயா மாடங்களும், தங்கம் வேய் கூடங்களும் நிறைந்து, வரைமட்டும் வளர்ந்த நம் வஞ்சிமூதூர் தரைமட்ட மாகிவிட்டது, மன்னவா — தரைமட்டமாகி விட்டது!

செங்: ஆ?! தரைமட்டமாகிவிட்டதா என் தலை நகரம்? கரை யொன்றில்லாக் கடல்போலப் பரந்து, தரை யெங்குமில்லாப் புதுமையாய் மிளிர்ந்து, பிறையொன்று வைத்த பெரு மானே வியக்கும் என் பேரூரா இன்று பின்னடைந்து கிடக்கிறது? பரணரே! அப்படியானால் கொங்கணர், கலிங்கர், கொடும் கருநாடர், வங்காளர், கங்கர், பல் வேற்கட்டியர், வட ஆரியர் எல்லோரும் அணி அணியாய்த் திரண்டு வந்து என் காலடியில் கப்பம் செலுத்தும் என் கொலு மண்டபம் எங்கே?

பரணர்: மண்மேடாகிவிட்டது!

செங்: என் இளங்கோவன் குன்றுபோல் வீற் றிருந்து; குறளுக்கு அடுத்த காப்பியம் ஒன்று சமைத்த குணவாயிற் கோட்டம்...?

பரணர்: குப்பை மேடாகி விட்டது!

செங்: பகலிரவு பாராமல் பத்தாயிரம் நாட் கள் பயணம் நடத்தி; காவா நாவினர் கனக விசயர் தலையில் கல்லேற்றி வந்து நான் சமைத்த பத்தினிக் கோவில்....!

பரணர்: பாழாகிவிட்டது!

செங்: அந்தநாள் மோகூரை முற்றுகையிட்டுத் தாக்கி, பழையன் என்பானின் காவல் மரமாகிய வேம்பை வெட்டி, அவன் அரண் மனையிலே புகுந்து, அந்தப்புர மகளிரின் தலைகளை எல்லாம் மொட்டையடித்து; அந்த மயிரைக் கொண்டு திரிக்கப்பட்ட கயிறு களால் பிணைத்துக் கட்டி, யானைகளால் இழுத்துவரச் செய்தேனே, அந்தக் காவல் மரத் துண்டுகள்....?

பரணர்: காணவில்லை!

செங்: தேன் மொய்க்கும் ஈபோல முசிறிக் கடல் முற்றுகையிட்ட நாவாய்க் கூட்டம்...!

பாணர்: நசித்துவிட்டது!

செங்: மிளகு வேண்டும், மயில் இறகு வேண்டும்—என்று பொதி பொதியாய்த் தங்கம் கொண்டு வந்த தங்கம் நிகர் மேனிய ராம் யவனர் திருக்கூட்டம்....

பரணர்: இருந்த இடம் தெரியவில்லை!

செங்: அவர்கள் வணங்கி வந்த கோவில்...?

பரணர்: சொன்னாலும் இப்போது நம்ப மாட்டார்கள்!

செங்: அய்யோ! கல் சுமந்த கனக விசயரின் தலைபோல என் தலை கனக்கிறதே!





செங்கோல் வளைந்த செய்தி கேட்டதும் 'யானே அரசன்? யானே கள்வன்' என்று நெடுஞ்செழியப் பாண்டியன் உயிர் துறந்ததுபோல் என் உயிர் ஏன் இன்னும் போகாமலிருக்கிறது ? வெள்ளி மாடத்தில் கண்ணுறங்கிய யான் அப்படியே மீளா உறக்கத்தில் ஆழ்ந்திருக்கக் கூடாதா?

(அப்போது பரணர் மன்னனின் அமைதியான நிலை கண்டு அவர் முகத்திலே வியப்பு எதுவும் தோன்றவில்லை.)

பரணர்: மன்னவ! இனிக் கலங்குவதால் என்ன டயன்? தமிழகம் தாழ்ந்த நிலையறிந்து அதை உயர்த்துவது எப்படி என்று வழி காணுவதுதான இனி நாம் செய்யவேண்டிய கடமை!

செங்: அதைத்தானே கேட்கிறேன், பரணரே! எனதருமைத் தமிழகத்திற்கு இந்த இழிநிலை எப்படி ஏற்பட்டது?

பரணர்: நானும் யார் யாரையோ கேட்டுவிட்டேன்; சரியான விளக்கம் கிடைக்கவில்லை. காஞ்சிப் பெருநகரில் யாரோ அண்ணாதுரை என்று ஒருவர் இருக்கிறாராம். அவர் உம் காலத்தில் இருந்திருந்தால் அறிவுசால் அமைச்சர் அழும்பில் வேளாகவோ. சிலம்பு படைத்த இளங்கோவாகவோ இருந்திருப்பாராம். உம் தோள் வலி போன்ற மனவலியும் வள்ளுவப் புலவனின் அறிவுத் திறனும் கொண்ட அவரைச் சந்தித்தால் நமக்கு சரியான நிலைமை விளக்கம் கிடைக்கலாம்.

செங்: அவர் எங்கு இருப்பதாகச் சொன்னீர்?

பரணர்: காஞ்சியில்!

செங்: காஞ்சியா?

பாணர்: ஆமாம், அதுதான் தொண்டை நாட்டிலுள்ள நகரம்! வாரும், நான் சொல்லுகிறேன்!

(எல்லோரும் புறப்படுகின்றனர்.)

*

காட்சி-3

காஞ்சியில் அண்ணா இல்லம். வெளியே கவுன்சிலர் தோழர் ராசகோபால் 'திரா



பையன்: இல்லே, சார்! இளங்கோவோட அண்ணன்!

ராச: என்ன இளங்கோவோட அண்ணனு? நம்ப தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோவோட அண்ணன் பேரு செங்குட்டுவன் இல்லியே!

பையன்: இதுஉண்மையிலேயே செங்குட்டுவன், சார்! அண்ணுவைப் பாக்கணுமாம்!

ராச: என்னடா இது, உளர்றே? போய் ஆளை வரச்சொல்லு!

(பையன் சென்ற சிறிது நேரத்திற் கெல்லாம் சேரன் செங்குட்டுவன் அரசகப்பீரத் தோடு உள்ளே நுழைகிறான்)

செங்: வணக்கம். அண்ணுதுரை அவர்களே!

ராச: (திடுக்கிட்டு) அட, நான் இல்லேய்யா அண்ணுதுரை! தமிழ் நாட்டுல இருந்துகிட்டு இன்னும் அண்ணுவோட முகத்தைப் பாக்காம இருக்கியே

விட நாடு' பத்திரிகை படித்துக்கொண்டிருக்கிறார். பையன் ஒருவன் ஓடிவருகிறான்.

பையன்: சார்! யாரோ செங்குட்டுவனும் உங்களைப் பார்க்க வந்திருக்கார், சார்!

ராசகோபால்: யாருடா அது செங்குட்டுவன்? நம்ப சென்னை மாவட்டச் செயலாளரா?

பையன்: இல்லே. சார்!

ராச: ஓகோ; நம்ப 'நம் நாடு' பேப்பர் உதவி ஆசிரியர். மா. செங்குட்டுவனு?

செங்: ஓ, அப்படியா? நான் அவரைக் கண்டு பேசவேண்டுமே!

ராச: கண்டு பேசுறது இருக்கட்டும்; அவரைப் பாக்குறதுக்கு ஏன்'யா இந்த வேஷத் தோட வந்திருக்கே? நீ என்ன நாடகக் காரனு? அட, ஏம்பா இப்புடி வெக்கப் படுறே! உன்னைப் பாத்தா நம்ப கலைஞர் கருணாநிதி எழுதுனாரே அது என்ன படம்— ஓ.....ராஜாராணி — அதுல சிவாஜி கணேசன், சேரன் செங்குட்டுவன் வேஷம் போட்டுகிட்டாப்போல இருக்குய்யா!

செங்: அது கிடக்கட்டும்; அண்ணாதுரை இப்போது எங்கிருக்கிறார்? என்னை அங்கே அழைத்துச் செல்லும்!

ராச: இது என்னய்யா சுத்த 'பேஜாரா' போச்சி, உன்னோட! உன்னைப் போல ஆளுக்கெல்லாம் சினிமாவுல 'சான்ஸ்' வாங்கிக் கொடுக்குறதுதான் அவரு வேலையா?

செங்: நண்பரே, விளையாடாதீர்! பேசுவது செங்குட்டுவன்!

ராச: ஆமாம்; இவரு பெரிய சேரன் செங்குட்டுவரு! ஆளைப் பாரு—சினிமாச் சான்ஸ் வாங்க இப்படி வேஷம் போட்டுக் காட்டுறியா?

(செங்குட்டுவன் கோபத்தோடு அவரைத் தள்ள; ராசகோபால் மலையால் மோதப் பட்டவரைப்போல் அப்பால் சென்று ஓடிந்து விழுகிறார். செங்குட்டுவன் உள்ளே நுழைகிறான்.)

காட்சி 4

அறிஞர் அண்ணாவின் அறை. அண்ணா சிலப்பதிகாரத்தைக் கையிலே வைத்த வாறு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறார். செங்குட்டுவன் உள்ளே நுழைகிறான்.

செங்: வணக்கம், அண்ணாதுரை!

அண்ணா: வணக்கம்.....உங்களை எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறதே!

செங்: ஆமாம், சிலப்பதிகாரத்திலே என்னை மனக் கண்ணால் சந்தித்திருக்கலாம். என் பெயர் சேரன் செங்குட்டுவன்!

அண்ணா: சேரன் செங்குட்டுவனா? அன்று பேராற்றங்கரையில் உள்ள மணற்குன்றிலே தங்கி; குன்றக்குரவை அனுபவித்து; சாத்தனார் மூலம் கண்ணகி கதை கேட்ட...

செங்: செங்குட்டுவன் நானேதான்! அந்தப் பேராற்றங்கரையின் மணற்குன்றுபோல்; தாலியறுத்த விதவையைப்போல இன்று இத் தமிழகமே காட்சியளிக்கக் காரணம் என்ன வென்று கேட்டுப் போகவே வந்தேன். என் தாயின் திருவழித்த திருடனார்? கடல் கொள்ளாமலே கன்னித் தமிழகம் அழிந்தது எவரால்?

அண்ணா: வடவரால்! வடவரால்!

செங்: என்ன? தென் தமிழ் வேந்தர் மின் தவழும் இமயத்தில் புலி, வில், கயல் பொறித்ததாள் எம்போலும் மன்னர் எங்கில்லை—என்று இழிந்துரைத்த கனக விசயர் பரம்பரைக்கு மீண்டும் வால் முளைத்து விட்டதா? சேரன் செங்குட்டுவனுக்குப் பின்னர் தமிழன்னை பெற்றதெல்லாம் முதுகெலும்பில்லாக் கோழைகள் என்று முடிவுகட்டி விட்டனரோ அந்த மோழைகள்! அறிஞரே! இன்றே புறப்படுகிறேன். அன்று இராம இராவணப் போர் பதினெட்டு மாதங்களில் முடிந்தது; பாரதப் போர் பதினெட்டு நாட்களில் முடிந்தது; முன்பு இந்த சேரன் செங்குட்டுவன் வட நாட்டிலே நடத்திய போர் பதினெட்டு நாழிகையில் முடிந்தது; இன்று மறுமுறை நான் தொடுக்கும் போரை பதினெட்டு நொடிகளில் முடித்து என் தாயின் தலைக்கு மீண்டும் முடி அணிவிக்கிறேன்!

அண்ணா: ஹ ஹ ஹா!

(சிரிக்கிறார்)

செங்: ஏன் சிரிக்கிறீர், அறிஞரே?

அண்ணா: உலகமே வியக்கும் செங்குட்டுவன் வீரத்தை இகழ்ந்துரைப்பதாக எண்ணுதீர். ஆனால் வீரத்திற்கு அந்தநாள் நிலவியிருந்த பொருள் இன்று மாறிவிட்டது!

செங்: என்ன; மாறிவிட்டதா?

அண்ணா: ஆமாம்; அன்று பகையரசுகளை வெல்வதுதான் வீரத்திற்கு விளம்பரமாக இருந்தது. இன்று மற்ற அரசுகளோடு நட்பு பெற்றிருப்பதுதான் நாணயமாக இருக்கிறது. அன்று முன்வைத்த காலைப் பின் வைப்பவன் கோழை என்று தூற்றப்பட்டான்; முதுகிலே காயம் பட்டவன் வடக்கிருந்து உயிர் துறந்தான். ஆனால் இன்றோ தோல்வியைத் தடுத்துக் கொண்டு, தக்க நேரத்தில் பின்வாங்குவதுதான் பெருமை என்று போரிலக்கணத்திலே சிறப்பிக்கிறார்கள். அந்த நேரம் முதுகிலே காயம் பட்டாலும் ஓடிவந்து மறுநாள் போர்முனைக்குப் போக முடியுமானால் அதை விவேகமென்று போற்றுகிறார்கள்.

செங்: அதனால்?

அண்ணா: அறவழியிலே தாயக மீட்புப் போராட்டத்தைத் துவங்கியிருக்கின்றேன். ஆனால் அதேநேரம் தமிழகம் இழிநிலை பெற்றதற்கு உம்போன்ற தமிழ்மன்னர்களுக்கும் பங்குண்டு — என்றும் குற்றம் சாட்டுகிறேன்!

செங்: என்ன; நானும் என் போன்ற மன்னர்களும் பொறுப்பா? வியப்பாக இருக்கிறதே, நீர் பேசுவது?

அண்ணா: இதைச் சொல்லும் போது வருத்தமாகத்தான் இருக்கும் உமக்கு. பனிமலையின் பிடரியிலே தமிழகத்தின் இலாஞ்சனையைப் பொறித்த சேரன் செங்குட்டுவன், பின்னால் மாடலமறையோனுக்கு முடிதாழ்ந்து வணங்கியதை யார்தான் மறக்கமுடியும்? அன்று நீரும் உம் போன்ற மன்னர்களும் தமிழிலே வடமொழிக் கலப்பதைத் தடுக்காமலிருந்தீர்கள். அதன் விளைவு தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம் — எனத் திரிந்தது. நும்

தாயின் திருஅழிய நீங்களேதான் காரணமாக இருந்திருக்கிறீர்கள்!

செங்: அய்யோ! என்ன பெரும் தவறு செய்துவிட்டோம்! இவ்வளவு பெரிய தீங்கு விளையுமென்று அன்று கடுகளாவாவது எமக்குத் தெரிந்திருந்தால் வில்லவன் கோதையை அனுப்பி அந்த விவேகமற்ற வர்களை வெட்டி வீழ்த்தியிருப்பேனே!

அண்ணல்: இன்னுமிருக்கிறது குட்டுவரே! மூவேந்தர் கையிலே தமிழகம் இருந்தாலும் நீங்கள் மூவரும் போரிட்டுக் கொள்ளாத நேரமேது? அன்றே நீங்கள் மூன்று அரசையும் ஒரு குடைக்கீழ் கொண்டு வந்திருந்தால்....

செங்: அந்தக் குற்றச்சாட்டை என் மீட்டு சாட்டாதீர்! என் வல்லமை எங்கும் வியாபித்திருந்தது என் பட்டத்து முத்திரையில் கயலையும் புலியையும் சேர்த்திருந்ததே நீர் குறிப்பிடும் அந்த நோக்கத்தைப் பறை சாற்றவில்லையா?

அண்ணல்: எப்படியோ அந்த முயற்சி அழிந்துவிட்டது. அழிந்த தென்னகத்தை வெள்ளையரும், அதற்குப் பின்னல் வட நாட்டாரும் அடிமைப்படுத்திவிட்டனர். அந்த அடிமைத் தளையுடைத்து; சிதைந்த தமிழகத்தை ஒன்றுக்கி, திராவிடக் கூட்டாட்சி நிறுவுவதற்குத்தான் நானும் என் தம்பிமாரும் போராடி வருகிறோம். செங்குட்டுவரே! உம்மால் கனவுகூடக் காணமுடியாத அளவுக்குத் திருவிடம் தேய்ந்து கிடக்கிறது. உமது எதிரிக்குக்கூட இத்தகைய இழிநிலை ஏற்பட நீர் விரும்பியிருக்க மாட்டீர். நமது காடுகளிலே இருக்கின்ற செல்வங்கள் நம் கண்களுக்குத் தெரியவில்லை. நமது கடலுக்குள் இருக்கும் முத்துக்களுக்கு நாம் சொந்தக்காரர்கள் இல்லை. நமது காடுகளில் விளையும் தேக்கு மரங்கள் நமக்குப் பயன்படவில்லை! நமது பூமியிலே இருக்கும் தங்கம் நமக்கு எடுத்துத் தரப்படுவதில்லை! பக்கத்திலே சேலம்; அங்கே இரும்பு இருக்கிறது: இந்த நாட்டிலே தங்கம் இருக்கிறது; எனினும் ஒவ்வொரு வீட்டிலும், குடும்பத்திலும் தரித்திரம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது! தோள்வலியும், மனவலியும் கொண்டவர்களான தமிழ் மக்கள் இன்று வெளிநாடுகளிலே 'கூலிகள்' என்று பரிகாசப்படுத்தப்படுகிறோம்! பத்து ஜப்பானியர் வேற்று நாட்டிலே கட்டை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டதில்லை! நான்கு சீனக்காரர்கள் வேற்று நாடுகளிலே கூலிகளாக இருப்பதாகச் செய்தி அறிய முடியாது! இருபது மார்வாடிகள் பிழைப்பதற்கு வழியின்றி வெளிநாடு சென்றார்கள் என்றும் அறிந்திருக்கமாட்டீர்கள். நம் நாட்டிலே காவேரி ஓடுகிறது; ஒரு புறத்திலே வைகை கரை புரண்டு ஓடுகிறது; வடக்கே நோக்கினால் ஆந்திராவிலே கோதாவரி இருக்கிறது; கிருஷ்ணை இருக்கிறது; பார்க்கிறோம்! வானத்தை முட்டும் மலைகளைப் பார்க்கிறோம்; மலைகளும் மேகங்களும் ஒன்றோடொன்று தழுவிக் கொள்ளும் காட்சியைப் பார்க்கிறோம்; அப்படித் தழுவிக் கொள்ளுகின்ற நேரத்தில் முத்து முத்தாக மழை பொழிவதைப் பார்க்கிறோம்; நஞ்சையைப் பார்க்கிறோம், புஞ்சையைப் பார்க்கிறோம்; காடு கரம்புகளைக் கழனியாக்கிக் களிக்கின்ற உழவர்களைப் பார்க்கிறோம்; இவ்வளவும் இருக்கின்ற நாட்டிலே ஒரு கவளம் சோற்றுக்கு வழியின்றி, லட்சோப லட்ச மக்கள் இலங்கைக்கு ஓடுகிறார்கள்; ஓடுகின்ற இடத்திலும் அந்த நாட்டு சர்க்காரால் துரத்தி அடிக்கப்படுகிறார்கள்! 'ஏன்?' என்று கேட்க இங்கு ஒரு நாதியும் இல்லை; ஒரு துரைத்தனமும் இல்லை!

செங்: அறிஞரே! இரத்தக்கண்ணீர் வடிக்கிறது என் நெஞ்சம்! நீர் துவங்கியிருக்கும் இந்தப் போராட்டத்திற்கு துணை?

அண்ணல்; லட்சோப லட்சம் தம்பிமார்கள் இருக்கிறார்கள்.

செங்: உமக்குத் தளபதி?

அண்ணல்: இதோ இந்தப் படத்திலிருக்கிறாரே அவர்கூட என் தளபதிகளில் ஒருவர்தான்!

(என்று நெடுஞ்செழியன் படத்தைச் சுட்டிக் காட்டுகிறார்)

செங்: இவர் பெயர்?

அண்ணல்: நெடுஞ்செழியன்!



அலைகடலை அடக்கும் மரக்கலம் அமைத்தோர், விண்ணில் பறக்கும் விமானம் அமைத்தோர், தொலைவிலுள்ளதைக் கேட்கவும் காணவும் கருவிகள் கண்டுபிடித்தோர், காட்டாறுகளைக் கட்டுக்குக் கொண்டுவந்தோர், நீரிலே நெருப்பின் சக்தியைக் கண்டறிந்தோர் அனைவரும் நம்மைப் போல் மனிதரே. அவர்களால் முடிந்தது, நம்மால் முடியாதா?



சந்திரகுப்தன் காலடி, கனிஷ்கரின் முரசு, அக்பரின் செங்கோல் எதுவும் படாத நாடல்லவா தென்னாடு? அத்தகு நாடு இன்று டாடாவும், பிர்லாவும், மார்வாடிகளும் உலவும், வேட்டைக்காடாக ஆகிவிட்டதே?

செங்: நெடுஞ்செழியனு? ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனு? கோவலன் உயிரால் வளர்ந்த செங்கோலை நிமிர்க்கத் தன்னுயிர் கொடுத்த பாண்டியப் பெருவேந்தா? நான் அவர்காலத்தவர்தான்; இப்படியிருக்க மாட்டாரே!

அண்ணு: தமிழன் தன் வரலாறு உணர்ந்து இன உணர்வு கொள்ள வேண்டுமென்பதற்காக இந்தப் புதுப் பெயரில் உலவுகிறார் இவர்! அந்த நெடுஞ்செழியன் நீதிகாக்க உயிர் கொடுத்தார். என் இளவல் நெடுஞ்செழியன் நீதிக்காக உயிர்வாழ்கிறார்! சமயம் நேர்ந்தால் உயிர் கொடுக்கவும் தயங்க மாட்டார்.

செங்: நன்று! நன்று! தாயக விடுதலைக்காக நீர் துவங்கியிருக்கும் அறப்போரில் நான் செய்யக்கூடிய உதவி ஏதாவது...

அண்ணு: அப்படியொன்றும் தேவையில்லை தமிழக வரலாற்றிலே உமது பெயர் பொன்னெழுத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. வேகமான போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத அந்த நாளில் இமயம்வரை சென்று மீண்டு, நீர் தீட்டியிருக்கும் வீர காவியம் ஒன்றே போதும்; அதை வைத்து என்னுல் ஆயிரம் வீரர்களை உண்டாக்க முடியும். அத்தகைய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த அந்த உதவி ஒன்றுக்காகவே நான் உமக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

செங்: அறிஞர் பெருந்தகையே! தென்னகம் உம்மால் மீண்டும் தலை தூக்கப் போகிற செய்தியறிந்து கனக விசயரை வென்றதை விட கழிபேருவகையடைகிறேன். இந்நேரம் என் தம்பி இளங்கோ இருந்திருந்தால் உம் முயற்சியை மெச்சி இன்னுமொரு சிலம்பை எழுதியிருப்பான். சாத்தனார் இருந்திருந்தால் மீண்டுமொரு மேகலையெழுதி நும் புகழை மேவச் செய்வார். வஞ்சி மாநகரில் கொலுவீற்றிருந்த காலை நான் உம்மைச் சந்தித்திருந்தால் பரணருக்கு உம்பற் காட்டை நன்கொடைவழங்கியதுபோல் என் சேரமண்டலத்தையே உமக்குச்சன்மானமாக வழங்கியிருப்பேன்! உம்மை என்ன சொல்லி வாழ்த்துவதென்றே தெரியவில்லை. உமக்குப் பிறகு இனியொரு பிறவி யான் எடுப்பதாக இருந்தால் நிச்சயம் நான் வடநாட்டை வென்று, இமயத்தின் பிடரியிலே உம் திருவுருவைத்தான் பதிப்பேன்! அறிஞர் தலைவா! இந்த சகாப்தத்தை தமிழர் அனைவரும் நும் பெயரிட்டே அழைக்கட்டும்! காலை அருப்பி மலரும் கதிரவனும் மாலை மதியமும் போல் நீவிர் வாழ்க! வாழ்க!!

(செங்குட்டுவன் வெளியேற, திரை விழுகிறது.)



இளிருர் அண்ணு அவர்களின் ஐம்பதாம் ஆண்டு நிறைவை யொட்டி, 'முரசொலி' வெளியிடும் பொன் விழா மலருக்கு ஒரு கட்டுரை அனுப்பும்படி கலைஞர் அவர்களின் அன்புக் கட்டளை பிறந்தது. அண்ணுவின் பெருமையினை — அவர்களது பல்துறைச் சேவையினை — தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலாக எழுதி வெளியிட வேண்டும் என எண்ணியிருக்கும் நான், ஒருசிறு கட்டுரையில் எதை எழுதுவது, எதை விடுவது எனப் புரியாமல் சற்று தயங்கினேன். அண்ணுவின் அரசியல்.... அது உருவாகிக் கொண்டிருக்கும் சுவையான தொடர் கதை ஆயிற்றே! நேருவோடு தன்னை ஒப்பிட்டுப் பேசுகின்றவர்களுக்கு ஒருசமயம் அண்ணு அவர்கள் தனக்கே உரித்தான அழகான உவமை யொன்றுல் பதிலளித்தார்கள்: 'கட்டி முடித்த கோபுரத்தோடு கொட்டிக் கிடக்கும் செங்கல்லை ஒப்பிடுவதா?' என்று கேட்டார்கள். உவமையில் அண்ணுவுக்கே இயல்பான அவையடக்கம் இருந்தாலும், கொட்டிக் கிடக்கும் செங்கல், பலவண்ணக் கோபுரங்களாக உருவாகிக் கொண்டிருக்கும் காட்சியை நாம் அறிவோம்; நாடறியும்; நல்ல இதயம் படைக்காதவர்கள் மட்டுமே அறியமாட்டார்கள்!

சிலருக்கு எழுத மட்டுமே தெரியும்; பேசத் தெரியாது. பேச்சும் எழுத்தும் சால்புற அமைந்தவர்கள் வரலாற்றில் மிகச்சிலர். அவர்களும் ஏதோ ஓரிரு துறையில் மட்டும் பேசவும் எழுதவும் வல்லவர்களாயிருப்பார்கள். ஆனுல் அண்ணுவின் பேச்சு...அது மேடையில் ஒரு புதிய தலைமுறையையே உருவாக்கிய சக்திமிக்க பேச்சு! தமிழ்ச் சொல்லின் அழகையும் ஆற்றலையும் உலகறியச் செய்த பேச்சு! பேச்சு என்பது ஒரு நுண்கலையோ என ஐயுறும் அளவுக்கு நயம் படைத்த பேச்சு! தூங்கிக் கிடந்த சமுதாயத்தைத் துமி

அண்ணா படைத்த பாத்திரங்கள்!

7

அவன் திருடன்தான்! என்றாலும் இதயமிருந்தது சமுதாயத்தை எள்ளி நகையாடும் திறனிருந்தது! அன்றொரு நாள் மாடியில் புகுந்த அவன், ஒரு பெண்ணின் வேண்டுகோளை ஏற்று அவள் காதலனுக, வேண்டா வெறுப்புடன் நடிக்கிறான்.

பின்னர்தான் தெரிகிறது, தான் புகுந்த இடம், தன் தந்தை வாழும் இடமென்று! தந்தை ஏழடுக்கு மாளிகையில்; தாயோ ஓலைக் குடிசையில். ஏனிந்த நிலை—என்று கேட்கிறான் ரத்தினம். அவனைப் பெற்றெடுத்த சொர்ணம்மாள் தன் கதையைக் கூறுகிறாள் —

பணக்கார இளைஞன் கிராமத்திற்கு வருகிறான். அழகு தேங்கும் கிராமப் பெண்ணான சொர்ணத்தைச் சந்திக்கிறான். ஆசைக்கனல் அவன் உள்ளத்தில் விதைக்கப்படுகிறது. காமப் பயிர் விளைகிறது. ஊராரின் அவச் சொல்லுப் பயந்த அவன், சொர்ணத்தைக் கை கழுவி விடுகிறான்.



ஆம்; நல்லுளம் படைத்த ரத்தினம் கோழை உள்ளம் படைத்தவரின் மகன்—என அறிகிறான். தன் தங்கைதான் தன்னைக் காதலனை நடிக்கச் சொன்னவள்—என்றறிந்து அவளுக்கு நேரவிருக்கும் அபாயத்தைத் தடுக்க ஓடுகிறான்.

சதிகாரனின் குண்டுக்குப் பலியாவதுபோல் நடித்து குடும்பங்களை ஒன்று சேர்த்து வைத்து, சமுதாயத்தின் கோணலால் குட்டையிலே பூத்து விட்டாலும் நல்ல மனமும், தியாக உள்ளமும் கொண்டவன் என்பதை நிரூபிக்கிறான் ரத்தினம்!

—இத்தகைய நல்லதோர் பாத்திரத்தை 'ஓர் இரவு' நாடகத்தில் சந்திக்கிறோம். திருடர், கயவர், பொல்லாதவர்—எனக் கூறப்படுவோர் கீழே சேறிருந்தாலும் அன்றலர்ந்த செந்தாமரை போன்றவர்களாய் இருக்கிறார்கள். —என்பதை ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்களுக்குச் சொன்ன அருமையான பாத்திரம்!

லெழச் செய்த பேச்சு! கவிதையில் கட்டி வைக்கப்பட்டிருந்த சொற்களை வழக்கில் கொண்டு வந்து, மொழியை புதுவாழ்வு வாழச் செய்த பேச்சு!

காவியக் கதாபாத்திரங்களின் குணங்களை அடிப்படையில் அண்ணா அவர்கள் ஆக்கித் தந்த சொற்றொடர்கள் ஏராளம். உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால் 'அரசியல் குடிலர்கள்' என்ற சொற்றொடரை அண்ணா கையாண்டதைக் குறிப்பிடலாம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயம் படித்தவர்கள் மட்டுமே அந்தச் சொற்றொடரின் முழுப் பொருளை உணர்ந்து அனுபவிக்க முடியும். கவிதைவரிகளை இடமும் பயனும் அறிந்து பயன்படுத்துவதில் அண்ணாவுக்கு இணை அண்ணாவேதான். 'இப்படை தோற்கின் எப்படை ஜயிக்கும்?'—இந்த வரி அண்ணாவின் குரலில் ஒலித்தபோது, விலாவொடிந்த சமுதாயம் வீறு கொண்டு எழுந்தல்லவா பீடு நடை போட்டது!

அண்ணா ஒரு முழு நேர அரசியல்வாதியாகி விட்டதால் தமிழிலக்கியம் அடைந்துவிட்ட மகத்தான நஷ்டத்தை எண்ணிப் பார்த்து நான் பல முறை வருந்தியதுண்டு. ஆனால், அழிந்து கிடக்கும் ஒரு மாபெரும் சமுதாயத்தை உருவாக்கிடும் பெரும்படையின் தளபதியை, இலக்கிய அரங்கிலே மட்டும் வைத்துப் பார்க்க எண்ணிடும் என்னுடைய அற்ப ஆசையை நானே கடிந்து சொல்லுவது வழக்கம்! தமிழிலக்கிய உலகில் அண்ணாவின் சாதனைகள் பிரமிக்கத் தக்கவை. கவின்மிக்க கட்டுரைகளால் ஆங்கில உரை நடையை அழகுபடுத்தியவன் அடிசன்; எதுகையும் மோனையும்எழில்படஅமைத்து வரலாற்று நூலை இலக்கியமாக்கித் தந்தவன் கிப்பன்; நாடகத்தைப் பயனுள்ளகருவியாக்கி மக்களை சிந்திக்க வைத்

தவர்கள். பர்னர்ட்ஷாவும், ஆஸ்கார் ஒயில்டும்; மேடைப் பேச்சில் இலக்கியம் படைத்தவன் வின்ஸ்டன் சர்ச்சில்; உரை யாடலே இலக்கிய அந்தஸ்துக்கு உயர்த் தியவன் டாக்டர் ஜான்சன்; சிறுகதை யால் நடைமுறை ஊழல்களை உணர்த் தியவன் ஓஹென்றி; இத்தனை பேரும் சேர்ந்து ஆங்கில மொழிக்குச் செய்த சேவையை, தனி மனிதராக நின்று, தன் பேனாமுனையின் வலிமையால், பேச் சாற்றலின் திறத்தால் தமிழ் மொழிக்குச் செய்து காட்டிய மேதை அறிஞர் அண்ணா அவர்கள்! தமிழிலக்கிய வர லாறு எழுதப்பட்டால், அண்ணாவின் சேவை அதில் அத்தியாயமாகவல்ல; ஒரு பாகமாகவே அமையும்!

தன் எழுத்தால் பிறரை மகிழ்விப்பவன் எழுத்தாளன்; சிந்திக்க வைப்பவன் சிந்தனையாளன்; தன் எழுத்தால் வர லாற்றின் போக்கில் மாற்றத்தை ஏற் படுத்துபவன்—ஒரு புதிய சமுதாயத் தையே உருவாக்குகிறவன் — அறிஞன்! ரூஸோ, வால்டேர், பெயின், கரிபால்டி போன்ற அறிஞர்களின் வரிசையில் இடம் பெற்றுவிட்டவர் அறிஞர் அண்ணா! இந்தத் தலைமுறையின் சரித்திர புருஷர் களில் அண்ணா குறிப்பிடத்தக்கவர்!

அரை நூற்றாண்டை முடித்துவிட்டவர் அண்ணா! நம்மால் நம்பமுடியவில்லை! ஒலிபெருக்கியில் கம்பீரமாக ஒலிக்கிறதே குரல், அது ஐம்பது வயதானவரின் குரலா? இருக்கவே இருக்காது! அதோ, மேடையை நோக்கி 'விடுவிடு'வென்று நடைபோடும் உருவம்.....இளமையின் வேகமல்லவா அந்தக் கால்களை இயக்கு கின்றன? லட்சியக் கனவின் ஒளிவீசும் அக்கண்கள்...காலத்தையே அல்லவா ஊடுருவிப் பார்க்கின்றன...கால வேகத் தோடு போட்டியிடும் அந்த லட்சிய வேகம்...ஆம்; அண்ணா ஐம்பது வய தான இளைஞர்!

எண்ணற்ற மக்கள் வைத்துள்ள நம் பிக்கையால், வளரும் வயதிலும் வாலி பத்தின் வேகத்துடன், லட்சியப் பாதை யில் பீடுநடை போடும் அறிஞர் அண்ணா வாலிப உள்ளங்களின் வசீகரத் தெறல்!

அவர் ஆணைவழி நடக்கும் ஆயிர மாயிரம் தம்பிமார்கள் அவரை முதுமை யடைய விடமாட்டார்கள்! அண்ணா ஆண்டு பல வாழ்ந்து, லட்சிய நிறைவை நோக்கித் தாயகத்தை அழைத்துச்செல்ல வேண்டும் எனவிழையும் பல லட்சம் மக் களில் நானும் ஒருவன். அண்ணா வாழ்க, அவர் தொண்டு வெல்க என — என் அன்புகலந்த அஞ்சலியைச் சமர்ப் பிக்கிறேன். வணக்கம்!



உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம், அரசியலில்! கபடன் காட் டிய வழி நடந்தோம் சமூகத் துறை யில்! பூசாரி காட்டிய வழி சொன் னோம். அருள் பெறும் நெறியில்! எத் தன காட்டிய வழி நடந்தோம். பொரு ளாதாரத் துறையில்! முடிவு? வாழ வழியற்றதுதான்.



நான் காணும் அண்ணா!

பிரங்கண்ணல்

அண்ணாவைப் பற்றி எழுதப்போகிறேன். எளிதான வேலையா இது? "என்னப்பா யோசனை! என்னைப் பாரேன்." என்கிறது, விரிந்து கிடக்கும் ஆகாயம். அள்ளித் தெளித்த வெள்ளிச் சிமிழ்களாக அங்கே கிடக்கும் விண்மீன்கள், எங்களைப் பார்த்தாலே போதுமே என்கின்றன. "இரவு பகல் பாராமல், இந்த ஊர் அந்த ஊர் என்றெண்ணாது மழை தரும் நான் உலவுவது உன் கண்ணில் படவில்லையோ?" என்று சொல்லாமற் சொல்லும் மேகக்கூட்டமும் என்கண்ணில் படாமலில்லை.

நிலா! கடல்! தென்றல்! திருக்குறள்! ஒவ்வொன்றும் நினைவுக்கு வருகின்றன. இவைகளோடு எப்படி ஒப்பிடுவேன் அண்ணாவை? வானத்துக்கும் இருள் உண்டு! வெண்கலக் குரல் எழுப்பும் புதுத்தமிழ்ச் சொற்களிடம் விண்மீன்களும் தோற்கும்! பயன் கருதா மேகமும், ஒரோர் சமயம் ஐயா மழையைக் கொட்டிவிடுவதுண்டு! நிலவெனலாம், ஆனால் அதனிடமும் அழுக்கு இருக்கிறதே! அறுக்க அறுக்கத் தானே வினையும் அதிசயம் கழனியிடம் கிடையாதே! அவைகளைப் பெற்றது கடல்—அதுவும் சரியல்ல; தென்றல் நிலையானதல்ல; வீசும். போகும்! பிறகு, என்ன சொல்லி, அவரை எழுதுவேன்? பெரிய சோதனை.

அதோ, அவரே, நிற்கிறார் வாயிற்படியில்! சிவப்படாத தலை, விரிந்த நெற்றி, சிவந்து காவியேறிய பற்கள், அழுக்கடைந்த உடை, வேகமான நடை, வெளிச்சம் உமிழ் கண்கள், துடிக்காத உதடுகள்—இவர்தான் 'நான் காணும் அண்ணா', என்றால், நகைப்பீர்கள் நீங்கள். இந்த அண்ணாவைத்தான் நாங்கள் தினமும் பார்க்கிறோமே. பார்ப்பதோடு எங்கள் இல்லங்களிலே படமாகவைத்திருக்கிறோமே! இல்லங்களில் மட்டுமின்றி இருதயங்களிலும்கூட ஏற்றி வைத்துப் போற்றுகிறோமே, அவரை நீ என்ன அடையாளம் காட்டுவது. இதனையா உன்னிடமிருந்து இந்நாளில் எதிர்பார்த்தோம்?—எனக் கூறக் கூடும் நீங்கள். எல்லோரையும்விட, அண்ணாவுடன் கொஞ்சம் அதிகமாக நெருங்கிப் பழகும் 'பாக்கியம்' பெற்றவன் நான். இதுதான், எனக்குப் பெரிய சோதனையாயிருக்கிறது, அவரைப் பற்றி எழுத!!

எட்டயிருந்து ரசிக்கும்போது தென்றலாகவும் தேனாகவும் தென்படும் அரசியல் தலைவர்கள், நெருங்கிப் பழகும்போது நெருப்பாகவும் நெருஞ்சி முள்ளாகவும் தென்படுவார்கள் என்கிற பொதுக்கூற்று உண்டு. கொஞ்ச நாட்கள்தான் பெரியார் அருகில் இருந்திருக்கிறேன். தெய்வம் என்கிறார்களே அதைவிட மேலான இடத்தில், என் உள்ளத்தில் நான் அவரை வைத்துத்தான் பார்ப்பேன்; நடப்பேன். ஆனால், அத்தெய்வமும், தான் ஒரு 'மனிதன்' என்பதைக் காட்டத் தவறவில்லை! அந்த அச்சத்தோடுதான், நான் 'திராவிட நாடு' அலுவலகத்தில் அடியெடுத்து வைத்தேன். ஆண்டுகள் பத்துக்குமேல் ஓடிவிட்டன! அண்ணா, சில சமயங்களில் 'தெய்வமாக'வும் விளங்குகிறார்; சில சமயங்களில் 'மனிதனாக'வும் இருக்கிறார். தெய்வமாக இருக்கும்போதும், மனிதத் தன்மையை இழந்துவிடுவதில்லை! மனிதனாகயிருக்கும்போது, உயர்ந்த பண்புகளை இழந்துவிடுவதில்லை! அறிவுரைகளைத் தரும்போதும், பிரச்சினைகளை அவர் அணுகும் விதத்திலும், திராவிட சமூகத்தைக் கட்டிக் காக்கக்கூடிய 'ஒரே தலைவன்' என்று விளங்குகிறார்.

"அரங்கண்ணல்! சாப்பிட்டாயா? குழந்தை அசோகன் எங்கே? அப்பா ஊருக்குப் போனாரா?", என்று சொந்தப் பேச்சுக்களைப்பேசும் போது, குடும்பத்தில் ஒருவராகி, நம்மைப் போல ஒருவர் ஆகிறார். தலைவர் என்பதாலே, குடும்பப் பாசத்தை மறப்பதில்லை! குடும்பப்பாசம் காட்டிவிட்டால் போதும், ஏனைய பொதுப் பிரச்சினைகளை வேறு விதத்தில் அணுகலாம் என்றும் இருப்பதில்லை!! அங்கே அவர் தலைவர்! இங்கே, அவர், என் போன்றோர்க்கு அண்ணன்!! தலைவராகவும், அண்ணனாகவும் அறிஞராகவும், அன்பராகவும்; மேதையாகவும், மேன்மை தங்கிய குடும்பப் பெரியாராகவும்; ஒப்பற்றவராகவும், உள்ளங்களை ஆள்பவராகவும்; இந்த உலகிலேயே அவர் ஒருவர்தான் அரசியலில் உலவுகிறார்! தலைவனானதால், மனிதனுக்குத் தேவையான தன்மைகளை இழந்தோருண்டு. அதனால்தான் அப்படிப்பட்டவர்களுடைய தலைமை, நீண்ட நாட்கள் நீடிப்பதில்லை. ஆனால். அண்ணா முற்றிலும் மாறுபட்டவர். தலைவர்க்குத் தலைவன்; அதே சமயம் மனிதருக்குள் மாணிக்கம். அவர் வானத்திலேயே நினைவுகளைப் பதித்துவிட்டு, பூமியை மறப்பதில்லை! பூமியில் உழல்கிறோம் என்பதாலேயே, பொசுக்கும் பிரச்சினைகளை விட்டுவிடுவதில்லை!

அதனால்தான் அவரால் இலட்சோபலட்சம் இதயங்களிலே, கண்கண்ட கடவுளைப்போலவும்; அதேசமயம் தங்களுடன் உலவும் ஒரு அண்ணனைப் போலவும் விளங்கமுடிகிறது. இந்த உயர்தனிச் சிறப்பு, அவருக்கே உரியது! அவரை நெருங்கிப்பழக ஆரம்பித்தோர், பிரிவதில்லை; சந்தித்துத் தொடர்பு கொண்டோர், சலிப்பதில்லை; தூரத்திலிருந்து பார்க்கும் போது தென்றலாகத் தென்படுகிறவர், அருகே வந்து பழகப் பழகத் தென்றல் மட்டுமல்ல, இது ஒரு தேனருவி என்று கூறும் வகையிலே திகைக்கின்றனர்! எளிதில் வசமாகிவிடுகின்றனர்!! இந்தப் பத்தாண்டுக் காலத்திலே, நானும் நினைத்துப் பார்க்கிறேன், அவர், என் மனம்

புண்படும்படி ஏதாவது சொல்லியிருக்கிறாரா என்று; கவனத்துக்கு வருவதெல்லாம் அவர் உள்ளம் நோகும்படி நான் செய்துள்ள தவறுகள்தான்!!

போட்டியும் புகைச்சலும் கொண்டு, சொந்த வாழ்வையும் பொது வாழ்வையும், எரிமலையாக்கிக்கொள்வோர் ஏராளம். இன்னொருவன் நன்றாகப் பேசுகிறான், எழுதுகிறான், பெருமைகளைப் பெறுகிறான், நல்ல வாழ்வைப்பெறுகிறான் என்றால், அவனடைவதெல்லாம் தனக்கு ஏற்படும் கேடு என்று விசித்திரமான நினைவுகொள்வோருண்டு. அவன் பைக்குள் போகும் பணமெல்லாம், தன் இரும்புப் பெட்டிக்குள் வரவேண்டியவை என நினைத்து, வீணாக மனதை அலட்டி, சந்தாமரையைப் போல களங்கமற்று இருக்க வேண்டிய இருதய கமலத்தை, எருமைகள் துவைக்கும் சேற்றுக் குட்டையாக்கிக்கொள்ளும் பெரியவர்கள் இருக்கிறார்கள். மேடுபள்ளம் நிரம்பிய சமூக அமைப்பானதால், இந்த அழுக்காறு, எளிதில் எவர் மனத்திலும் ஏற்படுகிறது!

இந்த அழுக்காற்றினை, சமுதாயத்தில் ஒரு தனி மனிதன் கொண்டால், அவனோடும் அண்டை வீட்டுக்காரனோடும் போய்விடும். ஆனால், பொது வாழ்க்கையில் புகுந்தோர் மனதில், ''இது'' புகுமேயானால், புகையும் எரிமலைவிட மோசமாகும், விளைவுகள்! பொதுப் பணி, பிறகு போர்க்களம் ஆகுமே ஒழிய, மனித சமூகத்துக்கென்று நாம் மேற்கொண்டுள்ள உத்தமமான பணிகள், வெறும் அலங்காரக் கூடுகளாகி விடும்.

அந்த நாள் ரோமாபுரி வீரத்திலே சிறந்ததாக விளங்கிற்று: வெற்றி மகள், தினமும் மாலைகளைச் சூட்டிக்கொண்டேயிருந்தாள். அப்பேர்ப்பட்ட ரோமாபுரி மறைந்து மண்ணோடு மண்ணாகக் காரணம், அங்கே களம்பல கண்ட வீரர்கள் இருந்தாலும், அவர்கள் தத்தம் உள்ளத்தைக் குகைகளாக்கிக் கொண்டு, குடைச்சலுக்கும் பொறுமைக்கும் ஆளானதுதான் காரணம் என்கிறது சரிதம்.

சீசர்! புரூடஸ்! அந்தணி! அகஸ்டஸ்! — ஒருவருக்குப்பின் ஒருவர் — என்று வீழ்ந்தவர்களையே காணலாம். ஒருவனுக்கு ஏற்பட்ட புகழ்; இன்னொருவனைச் சும்மாயிருக்க விடாதாம். சூழ்நிலை தமிழகத்து அரசியல் மண்ணிலும் உண்டு. பல தலைவர்களுடைய பணி, வீணாயிற்று! பெரியாரும், ஆச்சாரியாரும், தங்கட்குப் பிறகும் பல 'தலைவர்கள்' வேண்டுமென்று விரும்பியிருப்பார்களே யானால், பலரை வளர்த்திருக்கலாம்; அவர்களது வளர்ச்சியைப் பார்த்து மனம் பூரித்திருக்கலாம்: தான் பெற்ற முட்டைகளைத் தானே விழுங்குமாம் பாம்புகள். அப்படியே, சமூகச் சிற்பிகளான தலைவர்கள் மனதிலும், இக்குணம் ஏற்பட்டதால், தமிழகம் ஒரு மிகப் பெரிய பொதுப் பரம்பரையை இழந்தது. திரு. வி. க. டாக்டர் வரதராசுலு, சத்திய மூர்த்தி, ஜீவானந்தம், விசுவநாதம், கே. எம். பாலசுப்பிரமணியம்—இப்படி, ஒரு பெரிய பட்டியலையே தர முடியும்!! இந்த விசித்திரமான சூழ்நிலையை மாற்றியமைத்து, ஒரு பரம்பரையை உருவாக்கியவர் அண்ணா! உருவான பரம்பரை, ஒவ்வொரு துறையிலும்சென்று வீர விருதுகள் பெற்று, வெற்றிக்கொடி நாட்டி வருவதைக் கண்டு, மனம் பூரிக்கிறவர் அண்ணா!! விசாலமான இந்த மனம், அவரிடம் இருப்பதாலேயே, தமிழ்மண், இன்றைய தினம், மொழியிலும் கலையிலும் சிறந்ததோர் இடத்தைப் பெற்று வருகிறது. நாடெங்கும், அவர் பெயர் சொல்லும், எழுத்துக்களும் நாடகங்களும் இனன பிற கலைகளும், நாளதோறும் வளர்ந்து வருகின்றன. தினசரி, எண்ணற்றோர், அவரைத் தமது இதயத்திலே ஏற்றி வைத்துக் கொண்டாடும் நிலை, வளர்கிறது! வளர்கிறது!!

ஒரு சமயம், அவர் ஒரு நாய் வாங்கி வந்திருந்தார். வீதியில் ஓடிய ஒரு 'லாரி' அந்த நாயைக் காயப்படுத்திவிட்டுப் போய்விட்டது. துடிக்கும் அந்த நாயைப்பார்த்து, அண்ணா பட்ட பாடு, எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. இரவல் கார் பெற்றுவரச் சொல்லி, உடனே அதையேற்றிக் கொண்டு சென்னை போய், அதற்குச் சிகிச்சை செய்து வலி



தென்றல் மட்டுமல்ல-
தேனருவியும் கூட!

யைப் போக்கிய பிறகே அவர் முகத்தில் சோர்வு நீங்கியது. ஆசை கொண்டு, ஒரு தடவை, மானென்று வாங்கி வந்தார்! அது கொஞ்ச நாளிலிருந்து செத்தது. அண்மையில் இரண்டு மயில்களைக் கொண்டு வந்தார். ஒன்று, அடிபட்டுவிட்டது! அப்போதெல்லாம் ஏதோ பெரிய உறவை இழந்தவர் போல அவர் மனம் சங்கடப் படுவதை நான் கண்டிருக்கிறேன்.

அந்த மானும், மயிலும், நாயும் அதிசயப் பொருட்களல்ல! ஆனாலும், அவைகள் தன்னுடன் பழகியவை என்பதால், அவைகளைப்பற்றிஎண்ணி வருந்துமளவுக்கு அவ்வளவு இலேசான இதயம்படைத்தவர் அண்ணு!! எதையும் தாங்கும் இதயம் வேண்டும் — என்கிறாரல்லவா? அவருக்கு மாற்றுரை மதியாது, மாற்றுக் கட்சியில் நன்மைகள் செய்யப்பட்டாலும் கெடுதலென்று பேசி, மாற்றுக் கட்சித் தலைவர்களையும் தோழர்களையும் சுடு சொல் வீசிப் பேசுவது, பிடிப்பதில்லை! அரசியல் வாழ்க்கையில், ஒரு நிலையான கண்ணியம் ஏற்பட வேண்டும் என்பது அவருடைய நல்லாசையாகும். ''பிறரை மதிக்கக் கற்றுக்கொள். உன் மதிப்புதானே உயரும்'', என்கிற இலக்கணத்துக்கு, அண்ணு சரியான சின்னம். பொது வாழ்க்கையில் புகுவோரின் இலட்சியம், மக்களுடைய சேவைதானே. அந்த மக்களுக்கு நல்லது எது, தியது எது என்று செப்புவதைவிட்டு கண்டபடி மற்றவர்களைத் தாக்குவதும், அவர்களையெல்லாம் மண்டுகங்கள் என்று நினைப்பதும் தவறு என்பார். ''மாற்றுன் வீட்டுத் தோட்டத்து மல்லிகை என்றால் அதற்கு மணமே கிடையாதெனக் கூறமாட்டேன்!'', என்று அடிக்கடி அவர் கூறும், இந்த வாசகம், அவர் உள்ளத்துணர்ச்சியாகும். காங்கிரஸ் நமக்குப் பிடிக்காத கட்சி! அதனால் காங்கிரஸ் செய்த சாதனைகளையும், அதன் தலைவர்கள் பட்ட பாடுகளையும் சாதாரணமென்று கருதுகிறவர் அல்ல, அண்ணு. காந்தியடிகளார் இறந்தபோது, எத்தனையெத்தனை காங்கிரஸ் தலைவர்கள் கண்ணீர் விட்டார்களோ நமக்குத் தெரியாது. ஆனால், ஐந்தாறு நாட்கள், உணவு கொள்ளாது, காந்தியடிகளையும், அவரது பொதுத் தொண்டின் சிறப்பினையும், அப்படிப்பட்டவருக்கு ஏற்பட்ட விபரீத முடிவையும் எண்ணி யெண்ணி, அவர் விட்ட கண்ணீரைப் பற்றி, இப்போதும் அடிகள் சொல்லுவார்! மற்றவர்களை மதித்து, அவர்களுடைய மனதை அன்பால் வெல்ல வேண்டுமென்பதிலே, அசைக்க முடியா நம்பிக்கை கொண்டவர் அண்ணு..

காவி கட்டிய சாமியாராகியிருந்த ஈழத்து சிவானந்தம், 'கந்தனுவது கடம்பனுவது எல்லாம் கட்டுக்கதை' என்று சொல்லும் தீவிர அறிவியக்க வாதியாகி, அதைவிடத் தீவிரமாக குடும்பம் நடத்தும் வெள்ளை வேட்டிக்காரராக மாறி, அண்ணுவின் குடும்பத்தில் ஒருவராக விளங்குவதை நாடு அறியும். அப்பேர்ப்பட்ட பக்தரை, இப்படிப்பட்ட சிறந்தவராக ஆக்கியது எது? அண்ணுவின் அன்புள்ளமும், சுடு சொல் கூறுத தன்மையும்தான் என்கிறார் ஈழத்து அடிகள்!!

அண்ணு காட்டும் அன்பு காரணமாக, அவரிடம் விளங்கும் கண்ணியத்தைக் கண்டு மகிழ்ந்து, நமது கருத்துக்களை ஏற்காதோர்கூட அண்ணுவிடம் தனிப்பட்ட அன்பு கொண்டிருப்பதை நாடு அறியும். இந்த அன்பும், தொடர்பும் வளர வளர, மாற்றாராக விளங்குவோர்கூட உற்றாராக மாறுவர் என்பதிலே, அசைக்க முடியாத உறுதி அவரிடம், இருக்கிறது! அதனாலேயே, அவர் அடிக்கடி சொல்லுகிறார், ''நாமெல்லாம் உடன் பிறப்புகள். என்றாவது ஒன்றுவோம்'', என்கிற எண்ணத்திலேயே — பணியாற்ற வேண்டுமென்று. இப்படிப்பட்ட உத்தமமான உள்ளம் கொண்ட அவருடைய எண்ணம் இன்று வெற்றி காண்பதில் வியப்பென்ன!!

எவ்வளவோ எழுதலாம்; ஏடு போதாது. நிகழ்ச்சிகளைச் சொல்லலாம்; நாள் போதாது. இந்த நன்னாளிலே, நான் விரும்புவதெல்லாம், அண்ணுவை நன்றாக நம்மவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான்! ஏழுக்குமாடியில் எட்டாத உயரத்தில் இல்லாமல், சராசரிகளைப் போல சாதாரணமானவராக வந்து சந்திக்கிறவர்களையெல்லாம் அண்ணன் தம்பிகளாக நினைத்து, அவர் பழகுவதால், ''அண்ணு தானே! இப்போது கூடப் போய் பார்த்து வருகிறேன்'', என்று, எவரும் சொல்ல முடியும். அண்ணுவைப் பார்ப்பதையும், அவருடன் பேசிவிட்டு வருவதையும் வைத்து, அண்ணுவைக் கண்டோம் என்று கூறிவிட முடியாது. நாம் காண வேண்டிய அண்ணு, அவர் கூறும் அறிவுரைகள். சாகாத 'வரம்' பெற்றவை; ஒரு சமுதாயத்தையே புதிதாக உருவாக்குகிறவை!!

பழைய தலைமுறை, வால்டேரையும் ரூசோவையும் ஆபிரகாம்லிங்கனையும் லெனினையும் பெற்றிருந்தது. ஆனால், அவர்களையெல்லாம் ஒன்றாக்கி, அதோடு ஷேக்ஸ்பியரையும் திருவள்ளுவரையும் புத்தரையும் கலந்து ஒரு உருவத்தை இந்தத் தலைமுறை நமக்குத் தந்திருக்கிறது. அவர்தான் அண்ணு! இத்தகைய பெறற்கரிய பேற்றினை, அகில உலகில் எந்தப் பகுதியும் பெறவில்லை.

அப்படிப்பட்ட ஒப்பற்ற ஒரு எழுத்துச் சிற்பியை, கருத்துக் கோமானை, அன்புச் சுரங்கத்தை-அண்ணனை-நாம் பெற்றிருக்கிறோம்! அவருடைய புகழ் பாட, ஏடுகளில்லை. கண்ணுடிக் கற்கள், வைரங்களாக மின்னு

கண்டுபிடியுங்கள்

விடை

1. பணத்தோட்டம்
2. கம்பரசம்
3. ஓர் இரவு
4. ரோமாபுரி ராணிகள்
5. வேலைக்காரி
6. தீ, பரவட்டும்!
7. தாய் மகளுக்குக் கட்டிய தாலி

கின்றன, உலகுக்கு அறிமுகப் படுத்தும் விளம்பரச் சாதனங் களின் உதவியால்! உண்மை யான வைரம் கேட்பாரற்றுக் கிடக்கிறது இங்கே! இதன் ஒளியினைப் பற்றி உலகுக்குச் சொல்ல நம்மிடம் எந்த வித வசதியும் இல்லை!!

ஐசனேவரையும். குருசேவை யும், மாசேதுங்கையும், ஹோசி மின்னையும், நாசரையும், உலகம் இன்று பேசுகிறது. அவர்களுக் கெல்லாம் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புண்டு. தியாகத் திலும் வீரத்திலும், சிறந்த தைச் சாதித்தவர்கள் என்கிற பெருமையிலும்! இப்படி உல கம் பேசுகிறது!! இவையனைத் தும் அதோடு ஒரு சமூகத்தை எழுத்தாலும் பேச்சாலும் கலை யாலும் எழுப்பிய சிற்பி என்கிற பெருமை அண்ணா அவர்களுக்கு மட்டுமே உண்டு. நம்முடைய வர் என்பதால் இதனை நான் சொல்லவில்லை. வேண்டுமானால் உலகத் தலைவர்களின் பட்டிய லோடு ஒப்பிட்டுப் பாருங்கள்;

அப்படிப்பட்ட ஒரு மங்காத விளக்கை — மாணிக்கத்தை — குணக்குன்றை — கோமேதக மணியை — கொஞ்சு தமிழை— உலகம் புகழ்ந்து போற்றும் ஒரு நாளை நாம் காணவேண்டும். அந்த ஒப்பற்ற திருநாள் வர வேண்டும்! சின்னஞ்சிறு சிங்க ளத் தீவினை ஆளும் பிரதமரின் பெயர் ஐ. நாவில் உலவும் போது, அண்ணாவின் பெயரா அங்கெல்லாம் பிரகாசிக்காமற் போகும்? நிச்சயம், ஒருநாள் ஒளிவிடும்! ஆனால்; அந்த நாள் வருவது நம்முடைய கையில் தானிருக்கிறது!!

அண்ணா விடுதலை பெற்ற திராவிடத்திலே, நயமுடன் இருக்கவேண்டும். அவருடைய வாழ்நாளுக்குள்ளேயே நாம் விடுதலை விழா கொண்டாட வேண்டும். இந்த மாபெரும் விடுதலை வீரனின் கைகளை நேரு வும் பிறரும் குலுக்கவேண்டும். பாரிஸ் மாநகரும், மாஸ்கோவும் இலண்டனும், நியூயார்க்கும் பிறவும் போட்டியிட்டுக் கொண்டு நமது தலைவனை வர வேற்று வாழ்த்தவேண்டும். எங்கும் அவர் குரல் ஒலிக்க வேண்டும்! எழுத்துக்கள் பரவ வேண்டும்!! அந்நாள் வர வேண்டும்!!!

அண்ணா படைத்த பாத்திரங்கள்!

8

புத்துலகக் கழகம்! வீர இளைஞர்களுக்கோர் பாசறை. அந்தப் பாசறையின் தலைவன் துரைராஜ். இளைஞர் களை ஊக்குவித்து ஆக்க வேலைகளுக்கு அவர்களைப் பக்குவப்படுத்துகிறான் துரைராஜ். ஊரார் இளைஞர் களைக் கெடுப்பதாகக் குற்றம் சாட்டினர். அவனை எப்படி யாவது ஒழிக்க வேண்டுமெனத் திட்டமிடுகின்றனர்.

அதற்கேற்றாற்போல் துரைராஜ், அவர்களிடமே மாறு வேடத்துடன் சென்று அங்கு மாட்டிக் கொள்கிறான். கோயில் கம்பத்தில் பிடித்துக் கட்டி விடுகிறார்கள். ஆனால் எதையும் தாங்கும் இதயத்தைப் பெறுத அவன், தப்பியோடிவிடுகிறான், கயவன் ஒருவ னின் உதவியால்!



இதைக் கேள்வி யுற்ற ஊர் மக்கள் புத்துலகக் கழகத் தைப் பழித்தனர். துரைராஜ் தலைமறை வாக ஊருக்குள்ளே சுற்றினான். மடாலயத் தளபதியாக உருமா றினான். நகைப் பேழையுடன் வெளி யேறுகிறான் மாயேந் திரன் என்ற புது வேடத்தில் வந்து ஊரைக் கலக்குகி றான். பட்டாளிகளுக் குத் துணை நிற்கி றான்.

வஞ்சகனின் நரி வேலையை அம்பலப் படுத்த முனைகிறான், மாயேந்திரன்! அந் தப் பணியில் வஞ் சகனின் உயிர் போகி றது. அவனைக் கொன்ற சிங்கார வேலர் நடுங்குகிறார்.

ஆனால் துரைராஜ் தானே குற்றத்தை ஏற்றுக் கொண்டு சீமான் சிங்காரவேலரின் மகளுக்கு மறுமணம் செய்யும்படி கூறி விட்டு, சொத்து முழுவதையும் பகுத்தறி வுப் பிரச்சாரத்திற்கு எழுதி வைத்துவிட்டு விஷம் குடித்து இறக்கிறான்.

'சந்திரோதய'த்தில் வரும் இந்த துரைராஜ் பாத்திரம், பக்குவம் பெறுத மனிதன் பொது வாழ்வில் செய்யும் நல்லனவற்றையும், தீயனவற்றையும் அழகுற எடுத்துக் காட்டும் ஒப்புவமையற்ற பாத்திரம்!

பாரதிதாசனுக்குப் பணமுடிப்பு!

இருள்மூடிக் கிடந்த சமுதாயத்தின் ஒளி சேர்க்க முன்வந்தார் ஒரு புலவர், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு! அவர் பாடல்கள் ஒரு எழுச்சியைத் தந்தன! 'நீ திராவிடன்; நீ திராவிடன்' — என்ற உணர்ச்சியை, பழங்காலத்தை மறந்து கிடந்த உள்ளங்களில், பண்களினூல் ஏற்றினர் அவர். பாடும் தொழிலுடையோருக்கு வறுமை வாழ்க்கைதானே வரலாறு தருகின்ற பரிசு! அதைப் போக்க முயன்றனர் சிலர்!

ஆம்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுருக்குப் பொன்னுடை போர்த்தும் விழா 1946-ம் ஆண்டு நடைபெற்றது! தமிழாசிரியர் பதவியைவிட்டு பொது வாழ்வுப் பணியில் முழு மூச்சுடன் அப்போது இறங்கிய புரட்சிக் கவிஞரைப் பாராட்டுகின்ற முகத்தான் பொன்னுடை போர்த்துவ தென்றும் சில அன்பர்கள் தீவிர முயற்சி எடுத்து வந்தார்கள்.



அவர்கள் தங்களுடைய முடிவை திருச்சி திராவிடக் கழக மாநாட்டில் தெரிவித்தனர். ஆனல் அங்கு அவ்வளவாக ஆதரவு கிடைக்கவில்லை; ஆம்; ஆதரவு வில்லைதான்!

ஆனல் அண்ணு அவர்கள் இது நல்ல தோர் பணி என்று பாராட்டிப் பேசி பலரை இத்தொண்டில் ஈடுபட வைத்து, தானும் முன்னின்று பணியாற்றினர்.

பெரியார் ராமசாமி அவர்களுக்கு இது பிடிக்கவில்லை! புரட்சிக் கவிஞருக்குப் பொன்முடிப்பு தரப் பாடுபடுவோரை வெறுத்துப் பேசத் தொடங்கினர்! பெரியாரின் எதிர்ப்புக்குப் பிறகும் அண்ணு அவர்கள் அந்தப் பணியை விட்டுவிட வில்லை. பெரியாருக்கும் அண்ணு அவர்களுக்கும் மாறுபாடு ஆழமாகத் தோன்றக் காரணமாயிருந்த பெரிய நிகழ்ச்சிகளில் இது ஒன்ருகும்!

பெரியார் எதிர்ப்புடன் துவங்கிய அந்த நிதி சேர்க்கும் பணி தொடர்ந்து நடந்தது. சிறுதுளி பெருவெள்ளமாகியது.

அதற்காக அண்ணு அல்லும் பகலும் அந்தப் புலவருக்கு நிதி சேர்ப்பது பற்றியே எழுதினர்; பேசினர்! அவர் எழுத்தும், பேச்சும், செயலும் புரட்சிக் கவிஞரை ஆதரித்துப் பெருமைப் படுத்த வேண்டும் — என்ற எண்ணத்தின் வேகத்தை மக்களிடையே அதிகப்படுத்திற்று.

தமிழகம் இதுவரை பார்த்தறியாத அளவிற்கு — பல கட்சி அன்பர்களும் பாராட்டும் அளவிற்கு, தமிழில் பாடிய புலவர் ஒருவருக்கு பொன்னுடைபோர்த்தி பொற்கிழி அளிக்கப்பட்டது.

அன்று புரட்சிக் கவிஞரைப் பாராட்டிப் பேசிய அண்ணுவின் உரை, ஒரு தனி இலக்கியமாகும். இலக்கியம் படைத்த புலவருக்கு ஏறத்தாழ பதினன்கு ஆயிரம் ரூபாய் கொண்ட பொன் முடிப்பை அண்ணு அவர்கள் தந்தார்கள். நாவலர் சோமசுந்திர பாரதியார் பாரதிதாசனுக்குப் பொன்னுடை போர்த்தி மகிழ்வித்தார்.

பச்சையப்பன் கல்லூரித் திடலில் நடந்த இந்த நிகழ்ச்சியைப்பற்றி புரட்சிக் கவிஞர் என்ன கூறினலும், தமிழகத்திற்கு நன்கு தெரியும், அண்ணு அவர்களின் பெருமுயற்சியால், பெரியரர் அவர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டு ஆற்றிய தொண்டால் தான் பணம் சேர்ந்தது, ஆயிரக் கணக்கில் என! தாயகம் வாழ பாமாலை புனைந்த புலவர்கள் வாழவேண்டும், ஒரு குறையுமின்றி—என்ற நல்லெண்ணம் தான், அண்ணு அவர்களை இந்தப் பணியில் ஈடுபட வைத்தது!

☆

பகுத்தறிவுப் புலவர்,
தமிழ்த் "தா.சு" நினைவு இலக்கியக் குழு
சுகவனமுருகன் அகம் - குடித்தனம்,
4—128, பாலாஜி நகர் 2வது மெயின் ரோடு,
திருச்சி மாவட்டம். 639 104.

ஆசிரியரும் அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணுநிதி, 'முரசொலி', அச்சகம், 4—128, பாலாஜி நகர் ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.

தயாராகிறது!



ஜுபிடரின்

எல்லாரும் இந்நாட்டு மன்னர்

டைரக்ஷன்:

T. பிரகாஷ்ராவ்

கிரைக்கதை, வசனம்:

கலைஞர் மு. கருணாநிதி

STUDIO "Star"

விரைவில் வருகிறது!

ஜி.கே. புரொடக்ஷன்ஸ்

சகோதரி



பெண்ணுக்குப் பெருமைதரும் பொன்னேவியம்.

ஸ்டூடியோ ஏவிஎம்

பாடல்கள்: கண்ணதாசன் ☆ டைரக்ஷன்: A. பீம்சிங் ☆ திரைக்கதை, வசனம்: முரசொலி மாறன் M.A.,

G.H.RAO

Wrapper Printed at The Ideal Printers, 97, Broadway, Madras-1